நரகத்தில் நாயகன்



251
D.4

அருந்தி ஆனந்தியுங்கள் !

1. **பானு காப்பித் தூள் :** சிறந்த ரகக் காப்பிக் கொட்டைகளைக் கொண்டு உயர்ந்த முறையில் தயாரிக்கப்படுபவை.
2. **பேபி மார்க் சோடா கிரஷ் :** பானங்களிலேயே சிறந்தவை ! பருகினால் பேரானந்தம் தரும்.
3. **லிங்கம் பிஸ்கட்ஸ் :** சுத்தமானதாயும், சுவைமிக்கதாயும் பற்பல ரகங்களிலும் உள்ளன.

தேவைக்குத் தகுந்த அளவுக்குச் 'சப்ளை' செய்யப்படும்.

விவரங்களுக்கு :

K. C. S. D. & SONS (Phone No. 3104)

15, 7-வது சந்து சிங்காரகார்டன், வண்ணாரப்பேட்டை, சென்னை-21

காஞ்சியிலேயே சிறந்தது !

பானு போர்டிங் & லாட்ஜிங்

(பஸ் ஸ்டாண்டிற்கு எதிரில்)

பிரயாணிகளுக்கு !

தத்தம் குடும்பத்தோடும், தனித்தும் வந்து தங்குவதற்குத் தகுந்த வசதியான அறைகளும், சிறந்த சாப்பாட்டு முறைகளும் குறைந்த செலவிலேயே நிறைந்த அளவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

எனவே, அன்பர்கள் அனைவரும் தவறாது விஜயம் செய்யுமாறு கோருகிறேன்.

உரிமையாளர் : **K. V. தவசி நாடார்**

காஞ்சீவரம் (செங்கல்பட்டு ஜில்லா)

நரகத்தில் நாயன்!

ஆசிரியர் :

'விவேகி'

வெளியிடுவோர் :

திராவிட கலர் நிலையம்

57, முக்தாருனிஸா பேகம் தெரு,

சென்னை-2.

பதிப்புரிமையுடையது] 1955 [விலை ரு. 1-8-0.

முதற் பதிப்பு, ஏப்ரல் 1955.

பொருளடக்கம்

எண்			பக்கம்
	உண்மை ?	...	...
1.	நரகம் என்றால் என்ன ?	..	1
2.	வெண்கலச் சிங்கம் !	...	15
3.	நரகத் திரை !	...	35
4.	நால்வரின் வெற்றி	...	55
5.	காதல் கொள்ளை !	...	71
6.	கொலையா—தற்கொலையா ?	...	92
7.	நாயன் என்றால் என்ன ?	...	113
8.	சுவர்க்கத்தின் சாவி !	..	128

மாருதி பிரஸ், இராயப்பேட்டை, சென்னை-14.

உண்மை?

"...அந்த உண்மை எது? அந்த உண்மை என்னவென்பதை நீர் அறிவீரா? ஸமூத் எனும் மாந்தரும், ஆத் எனும் மாந்தரும் தட்டி எழுப்புவதைப் பொய்யாக்கினர். எனவே, ஸமூத் எனும் மாந்தர் ஒரு பெரிய சப்தத்தைக் கொண்டு அழிக்கப்பட்டனர். ஆத் எனும் மாந்தரோ அதி வேகமாக விரைந்து செல்லும் காற்றைக் கொண்டு அழிக்கப்பட்டனர்.

ஏழு இரவுகளும், எட்டுப் பகல்களும் தொடர்ச்சியாக அவர்கள் மீது அக் காற்றை ஏவி விட்டான் (நாயன்). வேரற்று சாய்ந்த ஈச்ச மரங்களைப் போல். அம் மாந்தர் பூமியில் விழுந்து கிடப்பதைக் கண்டிருப்பீர்! அவர்களில் எவரும் தப்பி இருப்பதை நீர் காண்கின்றீரா?

பிர்அவ்னும், அவனுக்கு முன்னிருந்தோரும், தலைகீழாகப் புறட்டப்பட்ட ஊரிலிருந்த மாந்தரும் பாபம் செய்து கொண்டே வந்தார்கள். தவிர அவர்கள், தங்கள் நாயனின் தூதருக்கு மாறு செய்தனர். ஆதலால், அவன் அவர்களை மிக்கப் பலமாக பிடித்துக் கொண்டான்.

நீர் பொங்கிய போது, நிச்சயமாக நாம் உங்களைக் கப்பலில் ஏற்றிக் கொண்டோம். அதனை உங்களுக்கு, ஒரு படிப்பினையாகச் செய்வதற்கும், அதனைக் காதால் கேட்போன் ஞாபகத்தில் வைப்பதற்கும்.

ஒரு தடவை ஸூர் ஊதப்பட்டு, பூமியும் மலைகளும் தூக்கி ஒன்றோடொன்று மோதி பலமாக அடிபட்டால், அந்நாளில்தான் யுக முடிவின் மாபெரும் சம்பவம் நிகழும். அந்நாளில் வானம் வெடித்து, அது பொந்தாகிவிடும்.

வானவர்கள் அதன் கோடியிலிருப்பார்கள். அன்றி, அந் நாளில் உமது நாயனின் அர்ஷை (அரியணையை) எட்டு வானவர்கள் தங்களுக்கு மேலாகச் சுமந்து கொண்டு நிற்பர்.

அந் நாளில் நீங்கள் கொண்டு போகப்படுவீர்கள். மறைவான உங்களுடைய எந்த விஷயமும் அவனுக்கு மறைந்துவிடாது. எவனுடைய பட்டோலை அவனுடைய வலது கரத்தில் கொடுக்கப்படுகின்றதோ அவன், 'இதோ! என்னுடைய பட்டோலை; இதனை நீங்கள் படித்துப் பாருங்கள்' என்றும், 'நிச்சயமாக நான் என் கேள்வி கணக்கைச் சந்திப்பேன் என்றே நம்பி இருந்தேன்' என்றும் கூறுவான். எனவே, அவன் திருப்தி அடையும்படியான சுகபோகத்தில், மேலான சுவனபதியில் இருப்பான். அதன் கனிகள் நெருங்கி இருக்கும். சென்ற நாட்களில் நீங்கள் சேகரித்து வைத்திருந்தவைகளின் காரணமாக, மிக்க தாராளமாக இவைகளை புசியுங்கள்! அருந்துங்கள்!!

எவனுடைய பட்டோலை அவனுயை இடது கரத்தில் கொடுக்கப்படுகின்றதோ அவன், 'என்னுடைய இப் பட்டோலை எனக்குக் கொடுக்கப் படாதிருக்க வேண்டாமா? என்னுடைய கணக்கையே இன்னதென்று நான் அறியாதிருக்க வேண்டாமா? நான் இறந்த பொழுதே என்னுடைய காரியம் முடிவு பெற்றிருக்க வேண்டாமா? என்னுடைய பொருள் எனக்கு ஒன்றும் பயனளிக்க வில்லையே! என்னுடைய செல்வாக்கும் அழிந்துவிட்டதே!!' என்று பிரலாபிப்பான்.

'அவனைப் பிடியுங்கள் அவனுக்கு விலங்கிடுங்கள்; அவனை நரகத்தில் தள்ளுங்கள் என்றும், எழுபது முழ நீளமுள்ள சங்கிலியால் அவனைக் கட்டுங்கள்' என்றும்; நிச்சயமாக அவன் மகத்தான அல்லாஹ்வையே விசுவாசிக்க வில்லை; ஏழைகளுக்கு ஆகாரமளிக்கும்படி அவன் தூண்ட

வில்லை; எனவே, இன்றைய தினம் அவனுக்கு இங்கு யாதொரு சிநேகிதனும் இல்லை; புண்களில் வடியும் நீரைத் தவிர உணவுமில்லை; அதனைக் குற்றவாளிகளைத் தவிர புசிக்கார். நீங்கள் பார்ப்பவைகளின் மீதும் நீங்கள் பார்க்காதவைகளின் மீதும் சத்தியமாக இது நிச்சயமாக மிக்க சங்கை பொருந்திய ஒரு தூதரால் கூறப்பட்டதாகும்.

இஃது, ஒரு கவிஞனுடைய சொல்லல்ல. எனினும், நீங்கள் வெகு சொற்பமாகவே விசுவாசிக்கின்றீர்கள்; ஒரு குறிகாரனுடைய சொல்லுமல்ல; வெகு சொற்பமாகவே நீங்கள் நல்லுபதேசம் அடைகின்றீர்கள்; உலகத்தார் யாவரையும் சிருஷ்டித்துப் போஷிப்பவனால் இறக்கப் பட்டுள்ளது; யாதொரு வார்த்தையை அவர் எம் மீது கற்பனை செய்து பொய்யாகக் கூறினால், அவருடைய வலது கரத்தை நாம் பிடித்துக்கொண்டு, அவருடைய உயிர் நாடியை நாம் தறித்து விடுவோம். உங்களில் எவருமே அதனைத் தடுத்துவிட முடியாது. நிச்சயமாக இது பயபக்தி உடையோருக்கு நல்லுபதேசமாகவே இருக்கின்றது.

உங்களில் அதனைப் பொய்யாக்குகிறவர்களும் இருக்கின்றனர் என்பதை நிச்சயமாக நாம் நன்கறிவோம். நிச்சயமாக அது நிராகரிப்போருக்குத் துக்கத்தைத் தரக் கூடியதாகவே இருக்கின்றது. நிச்சயமாக இஃது ஒரு சிறிதும் சந்தேகமற்ற உண்மையாகும்! ஆகவே, நீர் மகத்தான உமது நாயனின் திரு நாமத்தை ஸ்தோத்திரம் செய்து கொண்டிருப்பீராக."

மேலே கூறப்பட்டுள்ளவை குர்-ஆனின் 69-வது அத்தியாயத்தில் உள்ள வசனங்களாகும். உண்மையைப் பற்றி ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டும் என்று ஆவல் உள்ளவர்கள் அவற்றை மீண்டும் ஒரு முறை படித்துப்

பார்த்துவிட்டுப் பதில் சொல்லட்டும், அவை யாவும் உண்மையாக இருக்க இயலுமா என்று.

பொய்யை மெய்யாக்கவும்—மெய்யைப் பொய்யாக்கவும், எவரால் எத்தனை காலத்திற்கு முடியும்? மறுமையை இல்லை என்று மறுப்பது ஒரு மாபெரும் குற்றமா? மறுமை உண்டென்று நிரூபித்தவர் யார்?

இடியும், புயலும் ஸமூத் - ஆத் எனும் மாந்தரை மட்டுந் தானா, தேடி அடையாளம் கண்டு பிடித்து அழிக்கும்? நபி மார்களும், நல்லவர்களும்கூட அவற்றிற்கு இரையாக வில்லையா? இயற்கையின் போக்கை இறைவனின் சீற்றம் என்று கற்பனை செய்வது பொய் இல்லையா? அவற்றில் மாட்டிக் கொண்டால் பாபிகள் என்றும், தப்பித்துக் கொண்டால், நல்லவர்கள் என்றும் கூறுவது மூடத்தனம் அல்லவா?

பூமி எவ்வளவு பெரியதாக இருக்கிறது! அதோடு மலைகளை ஒப்பிட்டால், அவைகள் சிறு புள்ளிகளே ஆகு மன்றோ? ஒரு பெரிய யானைமீது சின்னஞ் சிறு சுண்டைக் காயைத் தூக்கி எறிவது போலத்தானே இருக்கும் பூமியும் மலையும் மோதிக் கொள்வது? வானம் என்றே ஒன்று இல்லாத போது, அது எப்படி வெடித்துப் பொந்தாகும்? 'எங்கும் நிறைந்த நிராமயமானவன் எனப்படும் அல்லாஹ்வுக்கு ஒரு அர்ஷும், அதை சுமக்க எட்டு வானவர்களும்' என்றெல்லாம் கூறப்படுவது பரிகசிக்கத் தக்கதான முரண்பாடுகளல்லவா?

அல்லாஹ், நல்லோர்களுக்கு வறுமையும், நோயும், வாதையும் உண்டாக்கிச் சோதனை செய்து அவர்களைப் புண்ணிய சீலர்களாக்கி இன்பகரமான இனிய வாழ்வைத் துய்க்கச் செய்கிறான் என்று ஒரு புறமும், மற்றொரு புறம் இன்பகரமான இனிய வாழ்க்கை வசதிகளால், நல்லோர்

களும் பொல்லாதவர்களாய் ஆகிவிடுகிறார்கள் என்றும் போதனை செய்திருக்கும்போது, நரக-சொர்க்க நிகழ்ச்சிகள் யாவும் அருத்தம் அற்றவைகளாய் போகவில்லையா?

மேலும், அல்லாஹ்வுடைய அப் போதனைப்படியே பார்க்கப்போனாலும், நரகத்தில் தள்ளி வதைக்கப்படும் ஆத்மாக்கள் பெரும் மதிப்பு வாய்ந்த புண்ணிய ஆத்மாக்களாகவும்; சொர்க்கத்தில் சுகபோகம் அநுபவிக்கும் ஆத்மாக்கள் பொல்லாத ஷைத்தான்களாய் ஆவதற்குத் தயாராகும் ஆத்மாக்களாகவும் அன்றோ இருக்கும்?

எனவே, ஒரு பொய்யை எத்தனையோ தடவைகள் திரும்பத் திரும்பச் சத்தியம் பண்ணிக் கூறிக்கொண்டே இருந்தாலும், அது ஒருபோதும் உண்மையாகிவிடாது. அதுபோலவே, ஒரு உண்மையைப்பற்றிக் கூறுவதற்கு நபியும், வேதமும், ஒரு நாதியும் இல்லாமல் போய் விட்டாலும், அது ஒரு போதும் பொய்யாகிவிடாது என்பதைப் பகுத்தறிவாளர்கள் உணர்ந்து கொள்ளக் கடவர்.

வாசகர்களே! நீங்கள் படிக்கப்போகும் இந்த 'நரகத்தில் நாயன்!' எனும் நவீன நாவலைப்பற்றி நான் எத்துணைதான் சத்தியம் பண்ணினாலும், அவைகளில் ஒன்றையேனும் உண்மையான சம்பவந்தான் என்று நீங்கள் நம்பவே மாட்டீர்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

ஆகவே, இந் நாவல் என்னுடைய சொந்தக் கற்பனையே தான். இதில் வரும் கதாபாத்திரங்களும், பெயர்களும் சம்பவங்களும், சம்பாஷணைகளும் யாவுமே கலப்பற்ற சுத்தக் கற்பனைகளேதாம். அவை யாரையுமே குறிப்பிடுவன அல்ல என்ற உண்மையை உரைக்க, நான் சத்தியம் பண்ண வேண்டிய அவசியமே இல்லையல்லவா?

'விவேகி'

11—4—55

படித்துப் பார்த்தீர்களா?

ருக் - யஜுர் - சாமம் - அதர்வணம் - ஸ்மிருதம் - இதிகாசம் - புராணம் - பைபிள் பழைய - புதிய ஏற்பாடுகள் - தவ்ருத் ஜபூர் - இன்ஜீல் - குர்-ஆன் ஆகிய

வேதங்களின் வண்டவாளம்!

ஆசிரியர் : '**விவேகி**'

* தனிப்பிரதி வேண்டுவோர்
தபால் சிலவுள்பட ரூ. 2—0—0
மணியார்டர் செய்யவும்

வெளியிடுவோர் :
திராவிட கலர் நிலையம்
57, முக்தாருனிஸா பேகம் தெரு,
சென்னை—2.

நரகத்தில் நாயன்!

'விவேகி'

1. நரகம் என்றால் என்ன?

கனகசபாபதி முதலியாரின் மகள் கதிஜாபீபீ என்றிருந்தால், காஜா முஹைதீன் இராவுத்தருக்கு ஆச்சரியமாக இருக்காதோ!

காரணம் தெரிந்துகொள்ள வேண்டும் என்றுதான் கல்லூரி மாணவனாகிய காஜா முஹைதீன் கள்வனைப் போல் அன்று மாலை, கனகசபாபதி முதலியார் மாளிகைக்குள் நுழைந்துவிட்டான்!

கதிஜாபீபீயும் ஒரு கல்லூரி மாணவியேதான்! அவள் அன்று மாலைவேளைத் தொழுகையைத் தொழுது முடித்துவிட்டு, அத் தொழுகைப் பாய்மீதே அமர்ந்த வண்ணம் குர்-ஆனையும் வைத்து ஓதிக்கொண்டிருப்பதை, கனகசபாபதி முதலியாரின் மாளிகைக்குள் கண்ட காஜா முஹைதீன் ஆச்சரியத்தால் அப்படியே கற்பதுமையாகி நிற்கிறான்!! அவள் தொடர்ந்து ஓதிக் கொண்டே இருக்கிறாள்!!!

"வைலுல்லிக் குல்லி ஹுமஜத்தில் லுமஜந்தி. நில்லதி ஜம அமாலவ்ங் வஅத்ததத. அய்ங் எஹ்ஸபூ அன்ன மாலஹு அஹ்லத. கல்லால யுன் பதன்ன ஃபில் ஹுதம. வமா அத்ராக்க மல் ஹுதம. நாருல் லாஹில் மூகத துல்லதி தத்தலிஊ அலல் அஃப்யித. இந்நஹா அலை ஹிம் மூஸதத்துன். ஃபீ அமதிம் மூமத்தத."

இவ்வாறு ஓதிக்கொண்டே இருக்கும் அவளுடைய கண்களில் இருந்து கண்ணீர்த்துளிகளும் சொட்டிக் கொண்டே இருந்தன. அவற்றை எல்லாம் கண்ணுற்ற காஜா முஹைதீன், தன் பொறுமையையும், துப்பறியும் முயற்சியையும் இழந்து, "கதிஜா......!" எனத் தன் இதயத்தின் ஆழத்தில் தோய்ந்து எழும் நாதத்தைப் பெருமூச்சுடன் கலந்து வெளியிட்டுவிட்டான்.

காஜா முஹைதீன் குரல் கேட்டுக் கதிஜாபீபீ திடுக்கிட்டு விடவில்லை. திரும்பி மட்டுந்தான் பார்த்தாள். ஒரு மின்னல் தோன்றி மறையும் நேரத்து மௌனம்! பிறகு, "ஊம். வாருங்கள்" என்று அன்போடு அவனை வரவேற்றாள்.

"ஓதுவது ஒழியேல்தான்! ஆனால், அழுவது ஏனோ?" என்று மிக்கப் பரிவுடன் கேட்டுக்கொண்டே அவள் கிட்டே நெருங்கினான் அவன்.

அதற்கவள், "ஓதுவதில் உள்ள அருத்தம் தெரிவதனால்தான் அழுகை வருகிறது!" என்று மிக்க மெல்லிய குரலில் பதிலளித்தாள்.

"அருத்தங்கூடத் தெரியுமா....?" என்று கேட்டுத் தன் கண்களை அகல விரித்து ஆச்சரியத்திற்கு மேல் ஆச்சரியம் உற்றவனாய் அசைவற்று நின்றான் காஜா முஹைதீன்! கதிஜாவோ, மீண்டும் அழுதுகொண்டே அக் குர்-ஆன் வாக்கியங்களுக் குரிய அருத்தத்தை ஓதுவது போலவே கூறுகிறாள்:

"குறை கூறிப் புறம் பேசித் திரிவோருக் கெல்லாம் கேடுதான். இத்தகையோன் பொருளைச் சேகரித்து அதனை எண்ணிக்கொண்டே

இருக்கின்றான். தன்னுடைய பொருள் தன்னை என்றென்றுமே நிலைத்திருக்கச் செய்யுமென்றும் எண்ணிக்கொண்டான். அவ்வாறன்று, நிச்சய மாக அவன் 'ஹுதமா' என்னும் நரகத்திலும் எறியப்படுவான். 'ஹுதமா' இன்னதென்று நீர் அறிவீரா? நாயனின் கட்டளையால் எரிக்கப்பட்ட நெருப்பு. இருதயத்தில் பாய்ந்துவிடும். கம்பங் களில் அவர்கள் கட்டப்பட்டு அதன் வாயல்களும் மூடப்படும்.''

இவ்வாறு அவள் கூறிக் கொண்டிருக்கும்போது, பக்கத்து அறையிலுள்ள இரும்புப் பெட்டியைத் திறந்து அதிலுள்ள தன் பொருளை எண்ணிக் கணக்குப் பார்த்துக் கொண்டிருந்த கனகசபாபதி முதலியாருக்கு வந்த கடுங்கோபத்திற்குக் கணக்கு வழக்கே இல்லாமல் போய்விட்டது.

"போதும், நிறுத்து கதிஜா! நிறுத்து!! நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்துவிட்டேன்; இனி என்னால் உன் போக்கிரித்தனத்தைப் பொறுக்கவே முடியாது!!! சாதிவிட்டுச் சாதி சார்ந்த புத்தியினா லல்லவா, உன்னைப் பெற்று வளர்த்தவன் தலைக்கே சுத்தியலாய் வாய்த்திருக்கிறாய்? புத்தி கெட்டவளே! நீ யார் எனக்குப் புத்தி சொல்ல?. நரகமாம்......? நாயனும்......? நல்ல கேலிக் கூத்தாய் இருக்கிறதே...?'' எனக் கத்திக்கொண்டே ஓடிவந்து கதிஜாவின் முது கிற்குப் பின்னால் நின்று இடி இடிப்பதுபோல் முழங்கு கிறார் கனகசபாபதி முதலியார்.

திடுக்கிட்டு நடுநடுங்கிப் போனான் காஜா முஹைதின்! ஆனால், இப்போதும் கண்ணீர் வடிந்து

கொண்டிருக்கும் முகத்தோடு அமைதியாகத் திரும்பி மட்டுந்தான் பார்த்தாள் கதிஜாபீபீ !!

கண்ணீர் வடிந்த வடுக்களை உடைய அவ் வடிவழகி யின் முகம் அப்போதுதான், களங்கம் உள்ள சம்பூரணச் சந்திரிகைக்குச் சமமாய் ஒப்பிடுவதற்கு மிக்கப் பொருத்தமாய் இருப்பதாக எண்ணி ஒரு கணம் இரசிக்கலானான் காஜா முஹைதீன் !

ஆனால், வயது முதிர்ந்த கனகசபாபதி முதலி யாரோ, அவ் வடிவழகியின் கண்ணீர்வடிந்த முகத்தைக் கண்டதும், வேத புராணங்களில் கூறப்படும் கொடூர மான நரகலோகத்தின் கோரக் காட்சிகளை எல்லாம் ஒருங்கே திரட்டிக் கண்ணுக்கு நேரே காண்பவர் போல் பயந்து நடுநடுங்கி விட்டார் !

காஜா முஹைதீனுக்குக் குளிர்மதி போல் தோன் றும் கதிஜாபீபீயின் முகம், கனகசபாபதி முதலியாருக் குக் கனல் கக்கும் அக்னிக் கோளமாகத் தோன்று வதற்குக் காரணம் என்ன ?

அவர் ஏன் அவள் முகத்தைப் பார்த்ததும் அப்படிப் பயப்பட வேண்டும் ? அவளுடைய கண் ணீர்த் துளிகளுக்குள் அப்படிப்பட்ட இரகசியம் என்னதான் அடங்கி இருக்கிறதோ என்று காஜா முஹைதீன் தன் நெஞ்சத்துள்ளே எண்ணமிட்டு ஆராய்ந்து கொண்டிருக்கும்போதே, கனகசபாபதி முதலியார், புலிப்போர்வையை இழந்த பசுபதி போல் அங்கிருந்து அகன்றுவிட்டார்.

அதைக் கண்ட காஜாமுஹைதீன், “ஆஹா ! இது என்ன விந்தை !! நரகத்தில் நாயனைக் கண்ட நம்

தந்தையைப் போல், சப்த நாடிகளும் அடங்கி ஒடுங்கிய வராய்த் திரும்பிச் சென்றுவிட்டாரே முதலியார் !!!" என்று கூறி ஆச்சரியப்படுகிருன்.

"என்னது ! நரகத்தில் நாயகு ...? நல்ல புளுகு !! காஜா, இப்படி எல்லாம் புதுமையாகப் புளுகுவதற்கு எதிலிருந்து கற்றுக்கொண்டீர்களோ ?" என்று சற்று அருவருப்போடு கூறினுள் கதிஜாபீபீ.

அதற்கு அவன், "வேறெதிலிருந்து கற்றுக் கொள்ள முடியும்? எல்லாம் நம் வேத புராணப் புளுகு மூட்டைகளில் இருந்துதான் !" என்று அதே அருவருப் போடு வெடுக்கெனு பதிலளித்தான்.

கதிஜாபீபீ, காஜாவை ஒருமுறை, முறைத்துப் பார்த்தாள். அப்பால் அவள் குர்-ஆனை எடுத்துக் கண் களில் ஒத்திக்கொண்ட பிறகு, அதை முத்தமிட்டு மூடி வைத்துவிட்டு, எழுந்து தொழுகைப் பாயைச் சுருட்டிக்கொண்டே, "காஜா ! நம் வேதத்தை நன்ருக ஓதிப் புரிந்து கொண்டிருப்பீர்களானுல், உங்கள் வாயி லிருந்து இம்மாதிரியான வார்த்தைகளே வந்திருக் காது !!" என்று வெகு நிதானமாகச் சொன்னுள்.

"ஆமாம் ! நான் தங்களிடம் கொஞ்சம் முரட்டுத் தனமாகப் பேசிவிட்டதற்கு வருந்துகிறேன் ! என்னைத் தயவு செய்து மன்னித்துவிடுங்கள் !!" எனத் திடீரெனத் தன் எதிர்ப்பைத் தாழ்த்திக் கொண்டுவிட்டான் காஜா முஹைறதீன்.

இவ்வளவு சீக்கிரமாகக் காஜா தனக்குப் பணிந்து விடுவான் என்று கதிஜா எதிர்பார்க்கவே இல்லை ! ஏனென்ருல், கல்லூரியில் கல்வி பயிலும் காலத்தில்,

பாதிப் பொழுதை, இருவரும் ஏதாவதொரு கருத்தையோ, கொள்கையையோ பற்றி எதிர்வாதம் புரிவதிலேயே சர்வ சாதாரணமாய்க் கழித்துவிடும் பழக்கம் உடையவர்கள் !!

எனவே, காஜாவின் பணிவு கதிஜாவின் சிந்தனையைக் கவர்ந்தது ! "நரகத்தில் நாயனைக் கண்ட நம் தந்தையைப் போல்......என்றீர்களே காஜா, அங்கு 'நம் தந்தை' என்று நீங்கள் குறிப்பிடுவது யாரை ?" எனக் கேட்டு, அவளே மீண்டும் அப் பிரச்னையைக் கிளர ஆரம்பித்தாள்.

"நம் தந்தை என்று, நான் 'ஆதத்தை'த்தான் குறிப்பிட்டேன் ! அதைப் பற்றிய விவாதத்தைக் கல்லூரித் தோட்டத்திலோ, கடற்கரை மணலிலோ நாளை, மறுநாள் எப்போதாவது வைத்துக்கொள்ளலாம் கதிஜா. இப்போது, இங்கு நான் வந்திருக்கும் சங்கதியே வேறு" என்று தன் பீடிகையைப் போட்டான் காஜா.

"ஓகோ ! அப்படியானல்ச் சரி. வாருங்கள் உப்பரிகைக்குச் செல்லலாம்!!" என்று கூறிக்கொண்டே தொழுகைப் பாயைத் தூக்கில் வைத்துவிட்டுக் காஜாவை அழைத்துக்கொண்டு மளமள வெனப் படிக்கட்டுகளில் ஏறிச் செல்கிறுள் கதிஜா.

சந்திரிகையோடு அளவளாவுதல் போன்ற உயரமான மாளிகையின் உப்பரிகையிலே உள்ள வசந்த மாடங்களுக்கு மத்தியில் வெண்ணிலா விளையாட்டிற்காகக் கட்டப்பட்டுள்ள சந்திரகாந்த மணிமேடையின் மேல் தளத்திற்குக் கதிஜாபீபீ, காஜா முஹைதீனோடு வந்துகொண்டிருப்பதை, ஏற்கனவே அங்கு வந்தமர்ந்து

உல்லாசமாய்ப் பேசிக்கொண்டிருக்கும் காந்தாமணியும் கருணாகரனும் கண்டதும், அவர்கள் பேச்சைச் சந்தேகிக்கும் வண்ணம் ' சட்டென ' நிறுத்திவிட்டனர்.

காந்தாமணி கனகசபாபதி முதலியாரின் இளைய மகள்! கோடீசுவரரான அம்முதலியாருக் குரிய வாரிசுகளே, கதிஜாவும் காந்தாமணியுந்தான்!! மூத்த பெண்ணை முஸ்லிமாகவும், இளைய பெண்ணை முதலியாகவும் பெற்றிருக்கும் முதலியாரின் வரலாற்றில் ஏதாவது ஒரு பெரிய மர்மம் மறைந்திருக்கவே வேண்டும் என்று கருணாகரனும், காஜா முஹைஹதீனைப் போலவே கருதினான். இந்நால்வரும் சென்னை சர்வகலா சாலையில் படிக்கும் ஒரே வகுப்புத் தோழர்கள்.

புதுப் பருவமும், நாகரிகப் போக்கும் உடைய அந்நால்வரும் அந்தரங்கத்தில் தனித்தனியான நோக்கமும், முயற்சியும் உடையவர்களேனும், வெளிப்படையாகப் பரஸ்பர சிநேகிதமும், அன்பும் உடையவர்களைப் போலவே பழகினர்.

ஏதோ அந்தரங்கமான சங்கதியைப் பற்றிப் பேசுவதற்கே கதிஜாபீபீயோடு ஏகாந்தமான இடந்தேடி மாளிகையின் சிகரத்திற்கு வந்தான் காஜா. ஆனால், அங்கு கருணாகரனும், காந்தாமணியும் இருக்கவே, தன் உரையாடலை வேறு விதமாக மாற்றிக் கொண்டான். கதிஜாவும் அதைப் புரிந்துகொண்டு, அவனிடம் அவள் அறிய விரும்பிய ' நரகத்தில் நாயனைப் 'பற்றிய பிரச்னையில் பிரவேசித்தாள். துணைக்குக் கருணாகரனையும் சேர்த்துக்கொள்ள விரும்பி அவனை நோக்கி, " கருணா! உங்களுக்கு நம் காஜாவின் புதிய கண்டுபிடிப்பைப்

பற்றி ஏதாவது தெரியுமோ? • 'நரகத்தில் நாயனை'க் கண்ட நம் தந்தை, சப்த நாடிகளும் அடங்கி ஒடுங்கித் திரும்பிச் சென்றாராம்!" என்றாள்.

அசாதாரணச் சிரிப்புக்காரனாகிய கருணாகரன், கதிஜாவின் வார்த்தையைக் •கேட்டு அடக்க முடியாப் பேரிரைச்சலுடன் சிரித்தான்; கூடவே சிரித்தாள் காந்தாமணியும்.

அவர்கள் சிரிப்பு காஜாவைப் பரிகாசம் பண்ணுவது போலவே இருந்ததால், கதிஜா அச்சிரிப்பை விரும்பாமல் அடக்கிவிட்டு, காஜாவை நோக்கி, "தாங்கள் அப்படிச் சொன்னதின் அருத்தம் என்ன?" என்று மிகவும் வினயமாகக் கேட்டாள்.

"நரகம் என்றால், என்ன என்று எண்ணிக்கொண்டிருக்கிறீர்கள்?" எனப் பொதுப்படையாக ஒரு பெரும் கேள்வியைப் போட்டுவிட்டுத் தொண்டையைக் கனைத்துக் கொண்டான் காஜா.

உடனே கருணாகரன், "நரகம் என்றால், பாவ லோகம்; வேதபுராண மொழிவழி நடவாதோரைத் தண்டிக்கும் பொருட்டுக் கடவுளால் கட்டப்பட்ட ஒரு மாபெரும் சிறைக்களம்!" எனக் கன கச்சிதமாகக் கூறினான்.

அதற்குக் கதிஜாபீபீ, "அது மட்டுமல்ல; இன்னும் அதைப்பற்றி எங்கள் குர்-ஆன் (38 : 55-64) அதிகத் தெளிவாக அறிவிக்கிறது: '...(வேதபுராண மொழி) வழி கெட்டோரின் தங்குமிடம் (பாவலோகம்) நிச்சயமாக மகாக் கெட்டது. அது நரகந்தான். அதில்த்

தான் அவர்கள் புகுவார்கள். அது தங்குமிடங்களில் மகாக் கெட்டது. இதோ, கொதிக்கும் சீழ் நீர் ; இதனை நீங்கள் சுகித்துப் பாருங்கள் (என்று பாபிகளை நோக்கிக் கூறப்படும்). இதைப் போன்று விதவிதமான வேறு (வேதனைகள் : கொதிக்கும் நீரைத் தலைக்குமேல் ஊற்றுவது, நெருப்பு ஆடையை உடுத்துவது, இரும்புச் சம்மட்டிகள் கொண்டு தாக்குவது, சங்கிலிகளையும், விலங்குகளையும் மாட்டுவது, அக்னி ஜ்வாலையாலும், எரியும் செம்பாலும் எறிவது, நரகத்தின் அடித்தளத்திலிருந்து வெளிப்படும் கள்ளி மரத்தையும், சர்ப்பத்தின் படத்தைப் போலிருக்கும் அதன் கிளைகளையும் ஆகாரமாய்ப் புசிக்கக் கொடுப்பது, மாளவும் மீளவும் முடியாத நெருப்பில் போட்டுக் குடலும், தோலும் உருகும் வண்ணம் எரிப்பது முதலியனவு)ம் உண்டு. இந்த (பாபிகளுக்குத் தலைமை வகித்த) கூட்டத்தாரும் உங்களுடன் தள்ளப்படுவார்கள். இது அவர்களுக்கு நல்வரவாகாது. இவர்கள் நரகம் செல்பவர்களே. அதற்கவர்கள், அவர்களை நோக்கி : அன்று ; உங்களுக்குத்தான் நல்வரவில்லை. நீங்களே எங்களுக்கு இதனைத் தேடித் தந்தீர்கள். (ஆதலால், நம்மிரு சாராருக்குமே) தங்குமிடம் மகா கெட்டது என்று கூறுவார்கள். தவிர, 'எங்கள் நாயனே! எவன் இதனை எங்களுக்குத் தேடி வைத்தானோ அவ(னையன்றி ஒரணுவும் அசையாத நாய)னுக்கு நரகத்தில் (வேதனையை) இரு மடங்கு அதிகப்படுத்து' என்று பிரார்த்திப்பர். தவிர, மிகக் கெட்ட மனிதர்கள் என்று (உலகத்தில்) எண்ணிக் கொண்டிருந்தோமே அவர்களை (நரகத்தில்) காணவில்லையே? என்று ஒருவருக்கொருவர் கேட்டுக்கொள்வர். எவர்களைப் பரி

காசம் பண்ணிக் கொண்டிருந்தோமோ அவர்களை பார்க்காதவாறு நம்முடைய கண்கள்தாம் மங்கி விட்டனவோ! என்றும் கூறுவார்கள். இவ்வாறு நரக வாசிகள் தர்க்கித்துக்கொள்வது நிச்சயமாக உண்மைதான்" என்றாள்.

"அப்படியானால், நரகத்தில் நாயனும் இருப்பான் என்பது உண்மைதானே?" என்று கேட்டு ஆச்சரியப்பட்டாள் காந்தாமணி.

"அவனன்றி ஓர் அணுவும் அசையாதவன் இல்லாத இடமே இல்லை என்றால், அந்நாயன் நரகத்திலும் இருந்துதானே ஆக வேண்டும்!" என்று வெற்றிக் குரலிலே வெகு விறுவிறுப்பாய்ப் பேசினான் காஜா.

"அட அடா! என்ன கதிஜா! 'பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது' என்பார்களே, அது மாதிரியாச்சே தங்கள் வேத வியாக்கியானம்?" என்று மிகவும் கைசேதப்பட்டான் கருணாகரன்.

"அதெப்படி ஆகும்? குற்றவாளிகளைத் தண்டிக்கும் சிறைக் குள்ளே இருக்கும், அரசாங்க அதிகாரிகளும் தண்டிக்கப்பட்டவர்கள் ஆவார்களோ?" என்று கேட்டாள் கதிஜா.

"ஆவார்களோ, அல்லரோ! ஆனால், அவ்வதிகாரிகளும் சிறைக்குள் இருப்பதுபோல், அல்லாஹ்வும் நரகத்தில் இருக்கவேண்டுமே என்று பாரசீக தேசத்து வானசாஸ்திரியாகிய உமர்கய்யாம் பாடி இருக்கிறாரே! இதோ அவருடைய பாடல்" என்று ஒரு ஆங்கிலக் கவிதை நூலை எடுத்து அவர்கள் முன்னிலையில் போட்டான் காஜா.

அதை எடுத்துப் பார்த்துவிட்டு, "இதுவும் ஒரு மொழிபெயர்ப்பு நூல்தானே! மூல நூலல்லவே?" என்ருள் காந்தாமணி.

"மூலத்தின் கருத்து மாருமல் மொழி பெயர்த்திருப்பதாக முகவுரையில் எழுதியிருக்கிருரே அதன் ஆசிரியர்!" என்ருன் காஜா.

"சரி. கருணு! நீங்களே அப்பாட்டில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து, நம் தீந்தமிழின் திருச் சுவை குன்ருது நன்ருக விரிவுரை பகருங்கள் கேட்கலாம்!" என்று வேடிக்கையாகப் பேசினுள் கதிஜா

"ஆகா! அப்படியே செய்கிறேன்" எனக் கருணுகரனும் வேடிக்கையாகவே அந்நூலைக் கையில் எடுத்துப் பக்கம் பக்கமாகப் புரட்டிப் பார்த்துவிட்டுத் தன் மொழி பெயர்ப்பு வேலையைத் தொடங்குகிருன்: 'சாராயக் கிண்ணம் போல் கவிந்து கொண்டிருக்கும் ஆகாயத்தை நோக்கிக் கரங்களை ஏந்திக் கொண்டு அழுது தொழும் அறிவிலிகளே! அங்கிருந்து உங்களுக்கு என்ன கிடைக்கப்போகிறது...?'"

"அட அடா! போதும் போதும். அடுத்த பாட்டுக்குப் போங்கள்" என்ருள் கதிஜா.

"ஆமாமாம். இது தங்களை நேரடியாகவே தாக்குகின்றது!" எனச் சிரிக்காமல் கூறிவிட்டு, அடுத்த பக்கத்தைப் புரட்டினுன் கருணுகரன். காஜாவும், காந்தாமணியும் தமக்கு வந்த சிரிப்பை மிகக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டிருந்தனர்.

கருணாகரன், உமர்கய்யாமின் மற்றொரு கவிதையை மொழி பெயர்க்கிறான் :

" தலைவிதி தனைப் படைத்துத் தகாத வேட்கையூறுள்ளந்தந்து, தவறுறு தரணியின் தாங்கொண்ணு வறுமையில் விட்ட பின்னர், நற்கதி உனக் கெந்நாளுமில்லை ; நரகந்தான் நரனே ! என்றால், தலைவிதி தனை எழுதிய நாயனே ! ஈதுன் தவறுகளே யாகுமன்றோ ?"

" சரிசரி. அதையும் தள்ளி விடுங்கள் ! அடுத்த பாட்டைப் பாருங்கள் !!" என்றாள் கதிஜா.

" ஆகட்டும். இதோ, அடுத்த பாட்டு : ' அச்சுவர்க்கத்தில் ஆதம்-அவ்வாவை ஆக்கி ஆங்கோர் நச்சு மரந்தனையும் ஆக்கி நரர் குலந்தனைக் கெடுத்த அல்லாஹ் ! பச்சைக் குழந்தையோ? பாவி நீ, விளைத்த தீவினைகள் தீர, அச்சமுற்று உன் கன்னத்தில் அறைந்து செல்லடா நரகத்திற்கே."

" தௌபாத்...தௌபாத்...தௌபா..." எனத் தன் வாயில் அடித்துக்கொண்ட கதிஜா, " உமர்கய்யாம் ஓர் பொல்லாத குடி வெறியன் என்று சொல்வது அப்படியே உண்மையாகிவிட்டதே !" என்று கூறி மிகவும் ஆத்திரப்பட்டாள்.

" உள்ளதைச் சொல்லப்போனால், உங்களுக்கு எல்லோருமே பொல்லாதவர்களே !" என்று வெகு சாந்தமாகப் பதிலளித்தான் காஜா.

" மேலும், மொழி பெயர்க்கவா வேண்டாமா ?" என்று கேட்டான் கருணாகரன். அதற்குக் காந்தாமணி, " போதும் போதும். ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறுதானே பதம் பார்க்கவேண்டும் ! அக்காள்தான்

மூன்று முழுச் சோறுகள் போன்ற கவிதைகளின் தன்மைகளைப் பார்த்துவிட்டாளே !" என்றாள்.

"ஆமாம். அம்மட்டும் போதும்! ஆனால், அல்லாஹ்வை நரகத்தில் போட யாரால் முடியும்? அப்படியே போட்டாலும், நரகம் அவனைப் பொசுக்குமோ ?" என்று பெருமிதமாகப் பேசினாள் கதிஜா.

"அல்லாஹ்வுக்கும் ஒரு எதிரி இருக்கிறானல்லவா? அந்த ஷைத்தான் அல்லாஹ்வை ஏற்கனவே நரகத்தில் போட்டுவிட்டானே! அல்லாஹ்வை அந்நரகம் பொசுக்குகிறதோ இல்லையோ ; ஆனால், அல்லாஹ்வின் முகம், அவனுக்கு ஏற்படும் கோபத்தால் கருகிவிடும் என்று குர்-ஆனி (43 : 17-வது வசனத்தி)ல் கூறப்பட்டிருப்பதால், அல்லாஹ் ஷைத்தானுடைய நாவினாலேயே சுட்டுப் பொசுக்கப்படுகிறான் என்று அறியலாம் அல்லவா ?" என ஆணித்தரமான பதிலளித்தான் காஜா.

அதை அப்படியே ஆதரித்துப் பேசினாள் காந்தாமணி, "ஆமாமாம். எங்கள் திருக் குறளிலும், 'தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ; ஆறாதே நாவினாற் சுட்ட வடு' என்றிருப்பதால், நெருப்பை உடைய நரகத்தைவிடக் கொடியதுதான் நாவினால் சுட்ட சூடு !" என்றாள்.

"திருக்குறளே எங்களுக்குத் திருமறை ! அதில், 'தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க ; காவாக்கால் தன்னையே கொல்லுஞ் சினம்' என்றும் ஒரு குறளுண்டு !! அதன்படிக் கோபத்தை அடக்க முடியாத அல்வாஹ்வின் முகம், அவனுடைய கோபத்தினால்

அவனையே கொல்லும் அளவுக்கு எரித்துக் கருக்கியும் இருக்கலாம் !!!" என்று கூறி கருணாகரனும் காஜா வின் விவாதத்தை ஆமோதித்தான்.

மூவர் கருத்தும் தனக்கு விரோதமாக இருக்கவே, கதிஜாவின் முகத்தில் அசடு வழிய ஆரம்பித்தது. அதை விரும்பாத காஜா, " அப்படியானால், நாவுதான் நரகம் என்று என்னை நம்பச் சொல்கிறீர்களா ? நான் ஒருக்காலும் நம்ப முடியாது ! திருக்குறள் உங்கள் மறையாக இருந்தால், எங்களுக்கென்ன ? திருக் குர்-ஆனன்றோ எங்கள் மறை ! நச்சுப் பையை உடைய நாகப் பாம்பின் நாவுகூட அந்நாகத்திற்கு நரகமாக இருக்காதே ! சொர்க்கமாகவன்றோ இருக்கும் !" என மளமள வென்று கண்ணை மூடிக்கொண்டு ஏதேதோ பேசினான்.

கதிஜாவினால், காஜாவின் பேச்சுக் குரிய நோக்கத் தைப் புரிந்துகொள்ள வெகு நேரம் ஆகவில்லை. தன் மீது அவன் கொண்டிருக்கும் அன்பினால்தான் இப் போது இப்படிக் கண்ணை மூடிக்கொண்டு தலைகீழாய் மாறிப் பேசுகிறான் என்பதைத் தெரிந்து மகிழ்ச்சி அடைந்த கதிஜா, " ஆமாமாம். இப்போது, உங்கள் நாவினால் நான் சொர்க்கலோகத்திற் கல்லவா கொண்டு போகப்படுகிறேன் !" என்று இனிமையாகக் கூறினாள்.

" நாங்கள், அதே நாவினால் நரகலோகத்தில் தூக்கி எறியப்படுகிறோமே ?" என்று ஏக காலத்தில் காந்தா மணியும், கருணாகரனும் கூறிவிட்டுச் சிரித்தனர். கூடவே சிரித்தனர் கதிஜாவும், காஜாவும். பிறகு, இரவு வந்து அவர்களைப் பிரித்துவிட்டது.

---

2. வெண்கலச் சிங்கம்!

"அழியட்டும் வெண்கலச் சிற்பியின் இரு கரங்கள்; அவனுமே அழியட்டும்! அவனுடைய பொருளும், அவன் சேகரித்து வைத்திருப்பவைகளும் அவனுக்கு யாதொரு பலனும் அளிக்காமல் போகட்டும்!! அதி சீக்கிரத்தில், அவன் கொழுந்துவிட்டெரியும் நரக நெருப்பில் விழுந்து வேகட்டும்!!! வெண்கலம் காய்ச்சும் அடுப்பிற்கு விறகு சுமக்கும் அவனுடைய மனைவி, முறுக்கேறிய ஈச்சங் கயிற்றால்த் தன் கழுத்தில் சுருக்கிட்டுக் கொண்டு தொங்கி ஒழியட்டும்!!!!"

இவ்வாறு கதறிச் சபித்துக் கொண்டிருக்கிறாள் கருணாகரனின் தயாராகிய அலமேலு. அவளை ஒரு அரைப் பயித்தியம் என்று கூறலாம்! பகல் முழுவதும் தன்னைச் சைவ வேளாளர் மரபென்று கூறிக்கொண்டு நெற்றியில் திருநீறிட்டுத் திருவருட்பாக்களைப் பாடும் அலமேலாகத்தான் திகழ்வாள்! இரவு வந்ததும் இஸ்லாமியப் பேய் பிடித்துக் கொண்டவளைப் போல் மாறி விடுவாள்!! திருநீறை அழித்துவிட்டுத், தன் தலையில் முக்காடு போட்டுக்கொண்டு திருக் குர்—ஆனைத் தாறு மாறாக ஓதிக் கொண்டிருப்பாள்!!!

இத்தகைய அதிசய மங்கையின் மகனாகப் பிறந்துள்ள கருணாகரனுக்குச் சிறுவயது முதல் யாதொரு குறையும் ஏற்பட்டதில்லை; எனினும், அவன் தந்தையைப் பற்றிய யாதொரு விபரமும் அவனுக்குத்

தெரிந்து கொள்ள முடியாதிருப்பதைத்தான் ஒரு பெரிய குறையாகக் கருதி யுள்ளான்.

அவன் அன்று மாலை, பல்கலைக் கல்லூரியிலிருந்து புறப்பட்டுக் காந்தாமணியோடு பேசிக் கொண்டே அடையாறில் உள்ள அவளுடைய மாளிகையின் உப்பரிகைக்குச் சென்றிருந்தான். தோற்றத்தில் தன் தாயாரை ஒத்திருக்கும், காந்தாமணியின் அக்காள் கதிஜாபீபீயின் வரலாற்றை அறிந்து கொள்வதில் கருணாகரன் அங்கு அதிக சிரத்தையாக இருந்தான்.

அப்போது, அதே இடத்திற்கு அதே மாதிரியாய்ப் பேசுவதற்கென்றே வந்தனரல்லவா, காஜாவும் கதிஜாவும்? அவர்கள் அப்படி வராதிருந்தாலும், காந்தாமணியிடமிருந்து அறிந்து கொள்ளக்கூடிய அளவுக்கு யாதொரு மர்மமும் அக் காந்தமணிக்கே தெரியாதென்பதைக் கருணாகரன் ஏற்கனவே கண்டு கொண்டான்.

எனவே, எவ்வித உளவும் கிடைக்காத ஏமாற்றத்தோடு இரவில் வீடு திரும்பிய கருணாகரன் காதில், அந்த இஸ்லாமியப் பேய் பிடித்த தாயின் சாபக் குரல் விழவும் மனக்கசப்பு மிகுந்தவனாய்ச் சாப்பாட்டையும் வெறுத்துவிட்டுச் சயன அறைக்குள்ப் போய்ப் படுத்துக் கொண்டான்.

மைலாப்பூர் மந்தை வெளியிலே அந்தக் காலத்தில் ஆடுமாடுகளே வந்து கூடிக் கலந்து போகும்! அது போலவே, அம்மந்தை வெளிக்குப் பக்கத்தில் ஏகாந்தமாய் இருக்கும் ஒரே ஒரு பெரிய தென்னந் தோப்பிற்கு மத்தியில் உள்ள மொட்டை மாடி வீட்டில் மௌட்டீக

மக்கள் மந்தை வந்து, இரவிலும் பகலிலும் சில குறிப் பிட்ட வேளைகளில் கூடிக் கலந்து போகும்!!

இந்த மொட்டை மாடி வீடு வேறு யாருடையது மல்ல; அந்த அரைப் பயித்தியம் அலமேலு அம்மா உடையதுதான்! அவளை, அங்குள்ள இந்து முஸ்லிம் இருசாராரும் ஞானப் பைத்தியம் பிடித்த 'சாயி பாபி' என்று இடுகுறிப் பெயரிட்டுப் பராட்டிப் பக்தி சிரத்தை யோடு அவள் இல்லத்திற்கு சென்று, பகலில் பஜனை பாடியும், இரவில் மௌலூது ஓதியும் துதி செய்து வருகின்றனர்.

அதன் மூலம் அந்த 'சாயி பாபிக்கு' ஏராளமான பொருட்கள் காணிக்கையாகவும், நேர்த்திக்கடனுகவும், உண்டியல் வசூலாகவும் அன்ருடம் வந்து சேர்ந்த வண்ணமாகவே இருக்கும். அந்த வருமானத்தைக் கொண்டுதான் அவள் தன் மகன் கருணுகரனைப் 'பி.ஏ.' வரைக்கும் எவ்வித கஷ்டமு மின்றிப் படிக்க வைத் திருக்கிருள்.

ஆரம்பத்தில், கருணுகரன் தன் தாயாரின் தில்லு முல்லுச் சொல்லுகளை எல்லாம் அப்படி யப்படியே உண்மையானவை என்றே நம்பிக் கொண்டிருந்தான்! அப்பால், அவன் உயர்நிலைப் பள்ளி மாணவனுன போதே, சந்தேகப்பட்டு ஆராய ஆரம்பித்துவிட்டான்!! முதலில், தன் தாயார் அவளுடைய வருமானத்திற் காகவே இம்மாதிரி எல்லாம் பித்தலாட்டம் புரிகிருள் என்று எண்ணினுலும் பின்னர், அவள் வாழ்க்கை யில் ஏதோ ஒரு பெரிய இரகசியம் அடங்கி இருக்கிறது அதுதான் அவளை இந்நிலைக்குக் கொண்டு வந்து

விட்டது என்ற உண்மையையும் உணர்ந்து கொண்டான் !!!

இந்த உண்மையை உரைக்க, அந்த அரைப் பயித்தியம் ஒருபோதும் தன் வாயைத் திறந்ததே இல்லை; ஆனால், இல்லாதவை பொல்லாதவை எல்லாம் உளறி, ஊராரை ஏமாற்றாமல் அவள் வாய் ஒரு போதும் மூடிக் கிடந்ததும் இல்லை.

அந்த அரைப் பயித்தியத்திற்கு இஸ்லாமியப் பேய் மட்டும் பிடித்திருந்தால் போதாது, கிறிஸ்துவப் பேயையும் ஏவி விடவேண்டும் என்று எண்ணியவர் போல் அன்றிரவு ஒரு பாதிரியார் 'செங்தோம் சர்ச்சில்' இருந்து வருவதாகக் கூறிக்கொண்டு அங்கு வந்து சேர்ந்தார்!

அப்பாதிரியார், அப்பயித்தியத்திடம் வந்து: 'தன் பெயர் பிலிப்பு என்றும், தனக்குத் தற்சமயம் ஐம்பது வயதாகிறது என்றும், தனக்கு இன்னும் ஞானப்பேய் பிடிக்கவில்லை என்றும், அதற்குக் காரணம், பேயை விரட்டுவதில் வல்லவரான இயேசு கிறிஸ்துவின் கருணை கடாட்சமே என்றும் கூறியதோடு, தன்னிடம் 'ஞான ஸ்நானம்' பெற்றுக்கொண்டு கிறிஸ்துவ மதத்தைத் தழுவினால், அவளுடைய அரைப்பயித்தியம் உடனே அகன்றுவிடும்' என்றும் கூறினார்.

அதற்கவள், அப்பாதிரியாரை நோக்கி:—"நீர், பரலோக ராஜ்யத்தின் திறவு கோல்களை உடைய தேவ குமாரனல்ல; உம்மிடம் வெண்கலச் சிங்கத்தை அடைத்து வைத்திருக்கும் சிறப்புக் கலைக் கூடத்தின் திறவுகோல்களே இருக்கலாம்! யோவானைப் போல் நீர் எனக்கு ஜலத்தினால் ஞானஸ்நானம் பண்ணத்

தேவை இல்லை; நான் பரிசுத்த ஆவியினாலும், அக்னியினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டவள்!!" என்று மிகவும் பயங்கரமாகக் கூறினாள்.

அதைக் கேட்ட பிலிப் பாதிரியார், உண்மையிலேயே பயந்து நடு நடுங்கி, அவள் முன்னிலையில் முழங்கால்களைத் தரையில் ஊன்றி மண்டியிட்டுக்கொண்டு: "அன்னையே! கன்னி மரியாளின் மறு அவதாரமே!! என்னை மன்னித்தருளவேண்டும், பிதாவுடையவும்-சுதனுடையவும்-இஸ்பிரீத்து சாந்துடையவும் நாமத்தினால் தாயே, நீயே என் பாவத்தைக் கழுவிப் பரிசுத்த ஞானஸ்நானம் பண்ணக் கடவாயாக!!!" என்றார்.

அதற்கு அந்த அரைப் பயித்தியம் அவரைப் பார்த்து: "பாபங்களை அறிக்கை பண்ணிவிட்ட பிலிப் பாதிரியாரே! மனந்திரும்புதலுக்கு ஏற்ற காணிக்கைக் கனிகளைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு ஞானஸ்நானம் கோருவீராக!!" என்றாள்.

அதற்குச் சம்மதித்தவர் போல் எழுந்து நின்ற அப்பாதிரியார், அப்பயித்தியத்தின் இஸ்லாமியக் கோலத்தைக் கண்டு மீண்டும் சந்தேகமுற்றவராய், "தாயே! 'உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே!' நீயோ, பகலில் இந்துவாகவும், இரவில் முஸ்லிமாகவும் காட்சியளிக்கும் 'சாயி பாபி'யாக இருக்கிறாயே!! 'இரண்டு எஜமானர்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது, ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டை பண்ணு

வான் ; தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ் செய்ய உன்னுல்க் கூடாது' எனவே, நீயாகவே வலிய வந்து கிறிஸ்துவ மதத்தைத் தழுவிக்கொண்டு ரோமன் கத்தோலிக்குச் சத்தியத் திருச்சபையில் சேர்ந்துகொண்டால், நானும் மற்றப் பாதிரிகள் எல்லோருமே ஒன்று கூடி உன்னைப் பாராட்டி, கேவலம் இந்தத் தமிழ் நாட்டிற்கு மட்டுமின்றி, உலகத்திற்கே அறிமுகப்படுத்தி விடுவோம்" என்றுர்.

அதைக் கேட்டுக் கடுஞ்சினங் கொண்டெழுந்த அரைப் பயித்தியம், முழுப் பயித்தியம்போலாகிக் கண் முழிகளைப் பிதுக்கி வெளியே தள்ளிவிடுவது போல் உருட்டி மிரட்டிக்கொண்டு, "மாயக்காரராகிய பாதிரியாரே, நீங்கள் பார்வைக்காக நீண்ட ஜபம் பண்ணி, விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப் போடுகிறீர்கள்! அதனிமித்தமே பெரிய ஆக்கினையை அடையப்போகிறீர்கள்; உங்கள் எல்லோருக்கும் ஐயோ ; ஒருவனையோ-ஒருத்தியையோ உங்கள் மார்க்கத்தில் சேர்ப்பதற்காகச் சமுத்திரத்தையும், பூமியையும் சுற்றித் திரிகிறீர்கள்!! அப்பேர்வழி உங்கள் மார்க்கத்தில் சேர்ந்ததும், உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்திற்கு இரையாக்கி விடுகிறீர்கள்!!! உனக்கும் ஐயோ ; உன் கூட்டத்திற்கும் ஐயோ—ஐயோ!!! ஊம். ஓட்டமெடும் ; இனி, ஒரு போதும் இப்பக்கம் தலைகாட்டாதீர்" என்று இரைந்தும் விரைந்தும் துரத்திவிட்டாள்.

பிலிப்பாதிரியார், 'தப்பித்தேன் பிழைத்தேன்' என்று ஓடிப்போன சிறிது நேரத்திற்கெல்லாம் வயது முதிர்ந்த தொண்டு கிழவர் ஒருவர் வரும்போதே,

"அஸ்ஸலாமு அலைக்கும்!" என்று கூறிக்கொண்டே வந்தார். அவரை, "வ அலைக்கு முஸ்ஸலாம்" என்று கூறி வரவேற்றாள் அப்பைத்தியகாரி.

"ஆரியர்கள் கணபதியை அல்லாஹ்வுடைய மகன் என்று கூறுகின்றனர்; திராவிடர்கள் முருகனை அல்லாஹ்வுடைய மகன் என்று கூறுகின்றனர்; யூதர்கள் உஜைரை அல்லாஹ்வுடைய மகன் என்று கூறுகின்றனர்; கிறிஸ்துவர்கள் இயேசுவை அல்லாஹ்வுடைய மகன் என்று கூறுகின்றனர்; இவர்களை எல்லாம் அல்லாஹ் அழித்து விடுவானாக! ஆமீன்-ஆமீன்!! யாரப்பில் ஆலமீன்!!!" என்று அக்கிழவர் அங்கு வந்ததும் வராததுமாக ஒரு நூதனமான 'துவாவை' ஓதித் தன் கரங்களால் தன் முகத்தைத் தடவித் தாடியைப் பிடித்து முத்தமிட்டுக் கொண்டார்.

அதற்கு அந்த அரைப் பயித்தியம்: "ஓய்! வெண்கலச் சிங்கத்தைப் பூட்டி வைத்திருக்கும் பூட்டின் திறவு கோலை உடைய குலாமே, கேளும்!! 'மனிதர்கள் ஒரே இனத்தவராகவே இருந்தனர். நன்மாராயம் கூறும்படியும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்யும்படியும் அல்லாஹ் நபிமார்களை அனுப்பி வைத்தான். தவிர, அம்மனிதர்களுக்குள் ஏற்படும் விகற்பங்களைத் தீர்த்து வைக்கும் பொருட்டு, வேதத்தையும் அருட்செய்தான். இவ்வாறு தெளிவான அத்தாட்சிகள் வந்ததன் பின்னர், அதனைப் பெற்றுக்கொண்ட அவர்கள், தங்களுக்குள் ஏற்பட்ட பொறாமையின் காரணமாகவே மாறுபட்டனர். ஆயினும், அவர்கள் மாறுபட்டு விட்ட அந்த சத்தியத் தளவில் செல்லும்படி விசுவாசிகளுக்கு,

அல்லாஹ் தன் அருளைக்கொண்டு வழி காட்டினுன். இன்னும், தான் விரும்பியவர்களை அல்லாஹ் நேரான வழியில் செலுத்துகிருன்.' என்றும் குர்-ஆனில் கூறப் பட்டிருக்கவில்லையா ?" என்று கேட்டாள்.

" ஆமாமாம். 2-ம் அத்தியாயம் 213—ம் வசனத் தில் அப்படியுந்தான் அல்லாஹ் தன் திருவாய் மலர்ந் தருளி உள்ளானம்மா ! அந்தோ, அந்தோ ; எல்லாம் ஏகக் குழப்பம் மயம் !! நானே வயது முதிர்ந்த கிழ வன் ; எனக்கும் ஞானப்பயித்தியம் பிடிக்காமல் இருக்க வேண்டும் என்று எனக்காக நீயே அல்லாஹ்விடம் 'துவாச்' செய்யம்மா" என்ருர் அந்தக் கிழவர்.

" நான் உமக்காகத் 'துவாச்' செய்தாலென்ன ? 'பத்வாச்' செய்தாலென்ன ? அல்லாஹ் விரும்பி இருந்தால், ஒவ்வொருவருக்கும் நேரான வழியில் செல் லக்கூடிய வசதியைக் கொடுத்திருப்பான் ! எனினும், அந்த அல்லாஹ் அப்படி விரும்பாததால், ஒவ் வொருவருக்கும் நேரான வழியில் செல்லக்கூடிய வசதி யைக் கொடுக்கவில்லை ! ! ஜின்களையும், மனிதர்களையும் கொண்டு நிச்சயமாக நரகத்தை நிரப்புவேன் என்ற அல்லாஹ்வுடைய தீர்ப்பு ஏற்பட்டுவிட்டது !!! நீ போய் உன்னுடைய மூளையை எடுத்துச் சொர்க்கத் திற்கு அனுப்பிவிட்டு, நரகத்தில் விழுந்து நாசமாகத் தயாராக இருந்துகொள் போ, போ ; ஓடிப்போ" என்று கூறித் துரத்தினுள்.

"நீ என்னம்மா ஒரேயடியா இப்படி துரத்துகிருய்! நான் என்ன வெறுங்கையோடா வந்திருக்கிறேன்? இதோ, கை நிறையக் காணிக்கை கொண்டுவந்திருக்

கிறேன் பார்! நீ எனக்காகத் 'துவாக்' கேட்காவிட்டால் என்ன? நானே போய் பள்ளியில் அல்லாஹ்வுக்குச் சிரம் பணிந்து வணங்கித் தொழுது 'துவா' கேட்டுக் கொள்ளுகிறேன்!" என்று சற்று பிகுவாகவே பேசிக் கொண்டு கிளம்பினுர் கிழவர்.

அதைக் கேட்டுப் பயங்கரமாய்ச் சிரித்தாள் அப் பயித்தியக்காரி! பயந்து நடு நடுங்கி விட்டார் கிழவர்!! சிரிப்படங்கியவுடன் சீற்றத்துடன் கிழவரை நோக்கி "ஓதியும் உணராத மூடக் குலாமே, கேள்! 'வானங்களில் இருப்பவர்களும், பூமியில் இருப்பவர்களும், சூரியனும், சந்திரனும், நட்சத்திரங்களும், மலைகளும், மரங்களும், கால் நடைகளும், மனிதரில் ஒரு பெருந் தொகையினரும் நிச்சயமாக அல்லாஹ்வுக்குச் சிரம் பணிந்து வணங்குகின்றனர் என்பதை நீர் காணவில்லையா? எனினும், மனிதரில் பெரும்பாலோர் மீது வேதனையே விதிக்கப்பட்டு விட்டது. எவனை அல்லாஹ் இழிவு படுத்துகிருனே, அவனை ஒருவராலும் கண்ணிய படுத்த முடியாது. நிச்சயமாக அல்லாஹ்தான் நாடியதையே செய்கிருன்' என்றும் குர்-ஆனில் கூறப் பட்டிருக்க வில்லையா?" எனக் கர்ச்சித்தாள்.

"ஆமாமாம். 22-ம் அத்தியாயம், 18-ம் வசனத்தில் அப்படியேதான் திட்டவட்டமாகக் கூறப்பட்டிருக்கிறது! அப்படியானுல், அல்லாஹ்வையும், அவ்லியாக்களையும், நபிமார்களையும் தவிர, மற்றெல்லோரும் நரகத்தை நிரப்பத்தான் உதவுவார்களோ?" என்று மிக்க ஈனக் குரலில் கேட்டார் அக்கிழவர்

" இல்லை இல்லை. ஷைத்தான் ஒருவனைத் தவிர, மற்றெல்லோருமே நரகத்திற்குத்தான் இரையாவார்கள் !" என்று வெகு உறுதியாக அந்தப் பயித்தியம் உரைத்ததை ஒப்புக்கொள்ள முடியாத அக்கிழவர் அவளை நோக்கி, " அது எப்படியம்மா அல்லாஹ்கூட நரகத்திற்கு இரையாக முடியும்? " என்று கேட்டார்.

" ஏன் முடியாது? அல்லாஹ் எங்கே இருக்கிறான்? மனிதன் எங்கே இருக்கிறானோ அங்கேயல்லவா? 'அல்லாஹ்' மனிதனுடைய பிடரியிலுள்ள இரத்த நரம்பைவிட அவனுக்குச் சமீபமாகவே இருக்கிறான்' என்று நீர் ஓதியதில்லையா ?" எனக் கேட்டாள்.

" போதும் போதும். என் மூளை குழம்புகிறது தாயே! இதோ, உன் காணிக்கை !!" என்று அங்கிருந்த உண்டியலில் சில வெள்ளி நாணயங்களைப் போட்டு விட்டு, வெறுங் கைகளைத் தூக்கித் தன் தலையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு 'தப்பித்தேன் பிழைத்தேன்' எனத் தொங்கோட்டமாக ஓடிப் போனார் அக்கிழட்டு முல்லா சாகிபு.

அப்பால், யாரும் அன்றைக்கு அந்த அரைப் பயித்திய 'சாயிபாபி' இடம் வேதாகம ஞானோபதேசம் பெற வராததால், சாம்பிராணிப் புகையை மும்முரமாகக் கிளப்பிக்கொண்டு, கண்மூடி மௌனியாய் யோகத்தில் மூழ்கியவள் போல் சிறிது நேரம் இருந்தபடியே தூங்கிவிட்டாள்.

விடியற்காலம் விழித்தெழுந்ததும் முக்காட்டை நீக்கிவிட்டு, முகம் கை கால்களைச் சுத்தம் செய்தபின், நெற்றியில் திருநீறு பூசிக்கொண்டே "பாதிமதிநதி,

போது மணிசடை நாதனருளிய குமரேசா!.........."
என்று முணங்க ஆரம்பித்துவிட்டாள் அந்த அரைப் பயித்தியம்.

அப்போது, அடுக்களையில் இருந்து விரைந்துவந்த சமயல்காரியாகிய சந்தானலட்சுமி, "அலமேலம்மா! உங்கள் மகன் கருணாகரன் இரவில் ஒன்றுமே சாப் பிடாமல் படுத்துவிட்டார்! விடிந்து இவ்வளவு நாழிகை யாகியும் இன்னும் எழுந்திருக்கவே இல்லை!!" என்று கூறினாள்.

"ஏன்! அவன் உடம்பிற்கு என்ன?" என்று கேட் டுக்கொண்டே கருணாகரனின் சயன அறையை நோக்கிப் புறப்பட்டாள் அலமேலு. உடனே அந்தச் சமையல் காரி, "அவர் உடம்பிற்கு ஒன்றுமில்லை; எல்லாம் மனக் கவலையாகத்தான் இருக்கும்!" என்றாள். அதைக் கேட்டதும் "ஓகோ! அப்படியா?" என்று தனக்குத் தானே எதையோ எண்ணிக்கொன்டு திரும்பிவந்து தன் படுக்கையில் உட்கார்ந்த வண்ணம் ஆலோசிக்கலானாள்.

ஆலோசனை எப்போதும் அவள் மூளைக்கு ஒத்துக் கொள்ளாது! அது அவளை முழுப் பயித்தியமாக்கி விடும் என்பதைச் சமையல்காரி ஏற்கனவே அறிந்திருக் கிறாள்!! எனவே, அவள் அவசர அவசரமாகச் சென்று கருணாகரனை எழுப்பி, அவன் தாயார் அப்போதிருக்கும் நிலையை அவனுக்கு விளக்கமாகக் கூறி எச்சரித்துவிட்டு வந்தாள்.

கருணாகரனுடைய தாயார் எப்போதாவது, அவள் தன் வாழ்க்கையின் இரகசியத்தைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினாளேயானால், அப்போதவளுக்கு ஏற்படும்

பயங்கரமான அதிர்ச்சியைத் தாங்க முடியாமல், சிங்கத்தால் விரட்டப்படும் கடாரியைப் போல், வீடு முழுக்க ஓடிஓடித் 'தடார்தடாரென' விழுந்து விழுந்து அழுவாள். சில சமயங்களில் கதறித் துடிதுடித்து அழுதுகொண்டு நிர்வாணமாய்த் தோட்டத்திற்கே ஓடிப்போய் விடுவாள்!! அப்போது, கருணாகரன் மனது படாத பாடு படும். அந்த நிலைக்கு அவள் எப்போதுமே வராதிருக்குமாறு கண்ணும் கருத்துமாய்க் கவனித்துக் கொள்ளவேண்டும் என்று சமையல்காரிக்குக் கண்டிப்பான கட்டளையிட்டிருந்தான் கருணாகரன். ஆதலால், அவள் வந்து எச்சரித்தவுடனேயே அவன் எழுந்து தன் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு வெகு சீக்கிரமாகத் தன் தாயார் முன்னிலையில், சர்வ சாதாரணமாக இருப்பவன் போல் பிரசன்னமானான்.

அப்போது, அவள் ஒரு தலகாணியைத் தூக்கித் தனக்கு முன்னால் நிறுத்தி வைத்துக்கொண்டு அதை நோக்கி, "ஏய், வெண்கலச் சிங்கமே! என்னைப் பார்! நான்தானே உன் கடாரி? ஐயோ நான் எப்பவோ செத்துப்போய் விட்டேனே! என்னைப் பட்சித்தவன் இன்னுந்தானே உயிரோடு இருக்கிறான்? நீ ஏன் என்னைப் புதைக்காமல் போய்விட்டாய்? உன் மகனுக்கு என் பிண நாற்றம் பிடிக்கவில்லையே! ஏய் வெண்கலச் சிங்கமே! என்ன சும்மாவே நிற்கிறாய்? ஊம். பதில் சொல்லு! சொல் பதில்!! சொல்லமாட்டாய்? ஓகோ! நீ சிற்பக் கூடத்திற்குள் சிறைப்பட்டிருக்கிறாயோ......? சரி. உன்னை நான் விடுதலை செய்கிறேன்; போ வெளியே! ஊம். போ......!! என்ன பார்க்கிறாய்?

போன்னுப் போ......!!!" என்று அந்தத் தலகாணியைத் தூக்கி எறிகிருள். அது கருணுகரன் காலில் வந்து விழுகிறது.

அதைக் கையில் எடுத்துக்கொண்ட கருணுகரன், "இதெல்லாம் என்னம்மா?" என்று மிகவும் பரிதாபத்தோடு கேட்டுக்கொண்டே ஒன்றும் அறியாதவனைப் போல் அவள் அருகில் வந்து நிற்கிருன்.

மிக்கப் பரிதாபகரமான நிலையில் தன் மகனைப் பார்த்த அவளுக்கு உடனேயே பாதிப் பயித்தியம் தீர்ந்துவிட்டது. "எனக்கு ஒன்றுமில்லை! நீ ஒன்றுக்கும் பயப்படாதே!! சரிசரி. போய்ப் பசியாறிவிட்டு வா; போ" என்று கூறி அந்தத் தலகாணியை அவனிடமிருந்து வாங்கிக்கொண்டு அவனைச் சாப்பாட்டு அறைக்கு அனுப்பிவிட்டாள்.

கருணுகரன் மனது சற்று திருப்தி அடைந்தவனுய்த் திரும்பிவந்து, காலை ஆகாரத்தில் கைவைத்தவுடன் மீண்டும் தன் தாயாரின் அழுகுரல் கேட்கவே, திடுக்கிட்டு எழுந்து ஓடிவந்து பார்க்கிருன்.

அவள் அந்தத் தலகாணியைக் கட்டிப் பிடித்துக்கொண்டு கதறிக் கதறிக் கண்ணீரைக் கொட்டிப் பொங்கிப் புலம்பி அழுவதைக் கண்டு சகிக்க முடியாத சஞ்சலம்கொண்டவனுய் "அம்மா...அம்மா...அம்மா...! ஏனம்மா இப்படி அழுகிறீர்கள்?" என்று தானும் அழுதுகொண்டே கேட்டான்.

கருணுகரன் குரல் கேட்டவுடனேயே அவள் திடீரென்று தன் அழுகையை நிறுத்திக்கொண்டு, "நீ

ஏண்டா ஓடிவந்து என்னைக் கட்டிப்பிடித்துக்கொண்டு அழுகிறாய்?" எனக் கேட்டாள்.

"நீங்கள் ஏனம்மா அழுதீர்கள்?" என்று மிகவும் நடுக்கத்துடன் கேட்டான் கருணாகரன். அதற்கவள், "நான் ஒரு பெண்பிள்ளை தானேடா! எனக்கு அழுகை வந்தால், நான் அழுகலாம்!! நீ ஒரு ஆண்பிள்ளை சிங்கம்; அதுவும் வெண்கலச் சிங்கத்திற்குப் பிறந்த வீரசிங்கம்!! நீ அழுகலாமோ? ஈஸ்வரனே வந்து, தன் நெற்றிக் கண்ணைத் திறந்து நரகத்தைக் காட்டினாலுஞ் சரி; 'ச்சீ. நரகத்தைச் சுமக்கும் நாயனே, போ அப்பால்!' என்று கூறிக் காறியுமிழ்வதை விட்டுவிட்டுப், பொட்டைப்பயல் மாதிரிப் பொட்டைச்சியைக் கட்டிப் பிடித்துக்கொண்டு அழுகிறாயே? சிங்கத்திற்குப் பிறந்து விட்டுச் சிறு நரியாகப் பார்க்கிறாயா? சரிசரி. போபோ. போய் நிம்மதியாக இருந்து பசியாறிவிட்டு வா, போ" என மிகவும் கம்பீரமாய்க் கூறினாள்.

"என்னைப் பெற்றதாய் என்ன காரணத்தினாலோ இங்கே இருந்து அலறி அழுது தவித்துக் கொண்டிருக்கும்போது, நான் அங்கே போய் நிம்மதியாக இருந்து பசியாறிக் கொண்டிருக்க எப்படியம்மா முடியும்?" என்று சற்று ஆத்திரமாகவே கேட்டான் கருணாகரன்.

அதற்கவள், "ஊம்! சரி. இனிமேல், நான் அழுகவேமாட்டேன். நீ போய் நிம்மதியாகப் பசியாறி விட்டு வா, போ!" என்று சற்று தாழ்ந்த குரலில் கூறினாள்.

தாயாரின் பணிவைக் கண்ட கருணாகரன் அவள் உள்ளத்தை அறிய இதுதான் தக்க சமயம் என்றெண்

ணிப் பிகுவாக, "நான் இனிமேல் சாப்பிடவே மாட்டேன்! எனக்குச் சாப்பாடே வேண்டாம்!! பட்டினியாகவே கிடந்து சாகப் போகிறேன் !!!" என்ருன்.

"காரணம் என்னடா கண்மணியே!" என அவள், அவன் நாடியைப் பிடித்துத் தாங்கித் தாயன்பை வெளிப் படையாய்க் காட்டிக்கொண்டு அவனே வேண்டினுள்!

"காலமெல்லாம் கண்ணீரைக் கொட்டிக்கொண்டு கதறி அழுவதும், தனக்குத் தானே புலம்புவதும், தலகாணியோடு பேசுவதும், பகலில் தமிழச்சியாகவும், இரவில் துலுக்கச்சியாகவும் வேஷம் போடுவதும், வேதாந்தம் பேசுவதுமாகவே இருக்கிறீர்களே! இதன் மர்மம் என்ன என்று உங்களே நான் எத்தனே தடவைகள் கேட்டிருக்கிறேன்? என்னைப் பெற்ற தாயாக இருந்தும், நீங்கள் எப்போதாவது இதற்குப் பதில் சொன்னதுண்டா? இப்போதாவது சொல்லப் போகிறீர்களா?

தான் பெற்ற மகனிடமே தன் உண்மை வரலாற்றை உரைக்க மறைக்கும் ஒரு தாயோடு வாழ்வதை விட அந்த மகன் மாண்டொழிவதே மேலல்லவா?

ஆம். இனி நான் உங்கள் கண்ணெதிரிலேயே பட்டினியும் பசியுமாகக் கிடந்து என் எலும்பும் தசையும் அணு அணுவாய் இற்று மடிந்து செத்தாலும் சாவேனேயன்றி, ஒரு கவள அன்னங்கூட உண்ணவே மாட்டேன் என்பது உறுதி!" என்று ஆவேசம் வந்தவனேப்போல் பேசினுன்.

அதற்கவள், "சாகப்போகிருயா கருணு! ஊம். உன்னைப் பெற்ற தாயிடமா நீ கற்ற வித்தையைக் காட்டுகிருய்? முட்டாளே! உன்னுல் முடியக் கூடிய

காரியமாக இருந்தால், அதை முன்னமேயே உன்னிடம் சொல்லி இருக்கமாட்டேனு......? அது என்னைத் தவிர, வேறு எவராலும் சாதிக்க முடியாத சதிச் செயலடா ! அந்த இரகசியத்தை அறிய நீ விரும்பாதே !!

உன் தாயை, மற்ற தாய்மார்களைப் போன்றபேதை என்றெண்ணுதே ! நானுவிதமான வேதங்களையும் ஓதி உணர்ந்த மேதையாகிய வெண்கலச் சிங்கத்தின் வீராங்கனை நான் !!" அகந்தையே உருவான ஒரு அக்ரமக்காரன் என்னை அரைப் பயித்தியம் ஆக்கி விட்டான் !!!

அது முதல் இந்த உலகத்திற்கு நான் ஒரு பயித்தியக் காரிதான் ! தனக்குத் தானே பேசிக் கொள்கிறேன்; தலை மயிரைப் பிய்த்துக் கொண்டு 'கொய்யோ முறையோ' வெனக் கூக்குரல் போட்டுக் கதறி அழுகிறேன் ; நிர்வாணமாய்த் தெருவில் ஓடுகிறேன். ஆனுல், நீ அறிவாயா உன் தந்தையை ?

அந்த வெண்கலச் சிங்கம் கருப்பா—சிவப்பா என்று கூட உனக்குத் தெரியாதே ! அப்போது நீ கர்ப்பப் பைக்குள் அல்லவா இருந்தாய் !! அந்தக் கால முதல், உன்னை வளர்த்து, வாலிபனுக்கிப் பல்கலைக் கல்லூரியிலே 'பி. ஏ.' பட்டம் வாங்கப் போகும் அளவுக்குப் படிக்க வைத்திருக்கும் நானுடா பைத்தியக்காரி ?

வஞ்சகன் ஒருவன் என் வாழ்க்கையிலே நஞ்சைக் கலந்து விட்டான் ! வெண்கலச் சிங்கம் என்னை விட்டு மறைந்துவிட்டது !! பங்கப்பட்ட பின்னும், பாவி நான் ஏன் வாழ்கிறேன் என்ருல், என் தங்கக் கட்டியே, உனக்காகத் தானேடா !!!

அஞ்சாத நெஞ்சினள் நான், அலறி யலறித் துடித்தழுது கொண்டே வாழ்கிறேன், உன்னை வாழ வைப்பதற்காக! நீயோ, மாளப் போகிறேன் என்கிறாய்; வேண்டாம். நம் குடியைக் கெடுத்தவன் மாளும் காலம் நெருங்கிவிட்டது! அந்த நாள் வந்து கொண்டிருக்கிறது!! பழிக்குப் பழி வாங்கும் நாள்— இந்தக் கரங்களில் இரத்தக் கறை படியும் நாள்!!! அதுவரையில் நான் வாழ, நீ வாழவேண்டும். நீ மாளக் கூடாது; கருணா, நீ மாளக் கூடாது; மாளவே கூடாது......" என்று 'மளமள'வெனக் கண்ணீரைக் கொட்டிக் கெஞ்சி யழுதாள்.

அன்னையின் வார்த்தைகளுக்குள் அடங்கி உள்ள முழு வரலாறும் கருணாகரனுக்குப் புரியாவிட்டாலும், அதன் நிழல் உருவைக் கண்டு நெஞ்சங் குமுறினான்; நெருப்பில் பட்ட மெழுகாய் உள்ளம் உருகிக் கண்ணீர் சொரிந்து "அம்மா! என் அறியாமைக்கு நான் வருந்துகிறேன். என்னை மன்னித்து விடுங்கள். இனி நான் உங்கள் ஆணையை ஒரு போதும் மீறமாட்டேன். இதோ போய்ப் பசியாறுகிறேன்" என்று கூறிச் சென்றான்.

உடனே, அவன் தாயார் அவனை அன்போடு அழைத்துத் தன் அருகில் அமர்த்திவிட்டு, அடுக்களைக்குச் சென்று, அவனுக்கு வேண்டிய ஆகாரத்தைத் தானே எடுத்துக் கொண்டு வந்து, "என் கண்ணே, கருணா! நீ எனக்கு இன்னும் சின்னஞ் சிறு குழந்தை யாகத்தான் தோன்றுகிறாய்!! உனக்கு நான் என் கையி

ளுலேயே உணவூட்டுகிறேன்; வாயைத்திறடா!!!" என்ருள்.

தாயன்பில் கட்டுண்டு கிடக்கும் கல்லூரி மாணவ ளுகிய கருணுகரன், சிறு குழந்தையைப்போல் வாயைத் திறந்து, தன் தாயூட்டும் ஆகாரத்தை அருந்திக் கொண் டிருக்கிருன்.

அப்போது, யாரும் எதிர்பாராத வண்ணம், புத்த கமும் கையுமாக 'மளமள'வென அங்கு வந்த காந்தா மணி, அக் காட்சியைக் கண்டதும், அடக்க முடியாச் சிரிப்படைந்து 'கலகல'வெனச் சிரிக்கிருள்.

அச்சிரிப் பொலி கேட்டுத் திரும்பிப் பார்த்தாள் கருணுகரனின் தாயார். அவள் கண்ணெதிரில் சிரித் துக்கொண்டே நிற்கும் காந்தாமணியைக் கண்டதும், "சிரிடி சிரி; நல்லாச் சிரி. சிரிச்சுச் சிரிச்சு என் வெண் கலச் சிங்கத்தைச் சீரழித்த சிமாட்டிச் சிறுக்கியே! சிரிடி சிரி; உன் வயிறு வெடித்துச் சாகும்படி சிரிடி..." என்று சீறிஞள்.

சிறிதும் எதிர்பாராத அந்த சீற்றத்தைக் கண்டு, அன்றைக்குத்தான் முதன் முதல் கருணுகரனைத் தேடிக் கொண்டு அங்கு வந்த காந்தாமணி கதி கலங்கி அசை வற்று நின்று விட்டாள்! கருணுகரனின் தாயார் ஒரு ஞானப் பைத்தியம் என்று, அவள் கேள்விப்பட்டிருக் கிருள்!! ஆனுல், அது இப்படி ஒரு நல்லபாம்பை போல் சினந்து சீறும் என்று தெரிந்திருந்தால், அவ்வளவு பெரிய மகனுக்கு அந்த அரைப் பயித்தியம் தன் கையி ஞல் உணவூட்டுவதைக் கண்டும் பரிகாசமாய்ச் சிரித்தே இருக்க மாட்டாள்!!!

காந்தாமணிக்கு நேர்ந்ததைக் கண்டு பரிதாபமும், வெட்கமும் அடைந்த கருணாகரன் தன் தாயாரிடம், "அம்மா! அந்தப் பெண் பல்கலைக் கல்லூரியில் என்னோடு கூடப் படிக்கும் என் சிநேகிதை காந்தாமணி!!" என்றான்.

அதற்கு அவள், "ஓகோ! அப்படியா? நான் என் வெண்கலச் சிங்கத்தை வீழ்த்திய வேல் விழியாள் என்றல்லவோ எண்ணி விட்டேன்!! தப்புத் தப்பு; மன்னிச்சுக்கோ. எனக்குச் சில சமயங்களிலே புத்தி பேதலித்துவிடும்; அப்போது, நான் இப்படித்தான் ஏதாவது தாறுமாறாக உளறி விடுவேன்! இதை எல்லாம் ஒரு பெரிய குற்றமாக மனதிலே வைத்துக் கொள்ளாதேம்மா! வா, பயப்படாதேம்மா! சும்மா வா" என்று எழுந்து போய் காந்தாமணியின் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு வந்து கருணாகரன் கிட்டே விட்டுவிட்டு, "ஊம். நீங்களெல்லாம் சின்னஞ் சிறுசுகள்! உங்கள் மனம் போலப் பேசிச் சிரிச்சு விளையாடுங்கள்! நான் தோட்டத்துப் பக்கம் போகிறேன்!" என்று கூறிவிட்டுப் போய்விடுகிறாள்.

பிறகு, கருணாகரன் காந்தாமணியைச் சாடையாகக் கவனிக்கும் போது, அவள் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிக் கிடப்பதைக் கண்டு, ஒன்றும் புரியாதவனாய் தலை கவிழ்ந்த வண்ணமிருந்தான்.

சிறிது நேரம் செல்லவும் இருவரும் ஏக காலத்தில் தலை நிமிர்ந்து, வாய் திறந்து, "அந்த வெண்கலச் சிங்கம்......?" என்று ஏதோ பேச ஆரம்பித்துப் பிறகு

இருவருமே அவர்களில் ஒருவர் பேசட்டும் என்று தத் தம் வாயை ஏக காலத்தில் மூடியுங் கொண்டனர்!

அப்பால், கருணுகரன் காந்தாமணியை நோக்கி, "ஏதோ, வெண்கலச் சிங்கம்......என்ற பேச் செடுத் தாயே என்ன?" என்று கேட்டான்.

அதற்கவள், "ஆம். அந்த வார்த்தையை என் தந்தை எப்போதோ, யாரிடமோ கூறிக் கொண்டிருக் கும் போது, நான் கேட்டிருப்பதாக எனக்கு ஞாபகம்! ஆனுல், அது எங்கே? எப்போது? யாரிடம்? என் பதுதான் எனக்குத் தெளிவாகத் தெரியவில்லை" என்ருள்.

அதைக் கேட்டு அளவில்லா ஆச்சரியமும், புத் துணர்ச்சியும் கொண்ட கருணுகரன், காந்தாமணியின் கரங்களைப் பற்றி குதூகலமாய்க் குலுக்கிப் பாராட்டி விட்டு, அவள் கூடவே கல்லூரிக்குப் புறப்பட்டுப் போகிருன்.

3. நரகத் திரை!

காந்தாமணி கருணாகரன் வீட்டிற்குச் சென்றிருந்த அதே நேரத்தில் கதிஜாபீபீ, திருவல்லிக்கேணியில் உள்ள காஜா முஹைதீன் வீட்டைத் தேடிக் கண்டு பிடித்துக்கொண்டு, கொஞ்சங்கூடச் சந்தடி செய்யாமல் மெதுவாய் உள்ளே நுழைந்தாள்! அவ் வீட்டின் முன் கூடத்திலேயே நாற்காலிகள் சில போடப்பட்டுள்ளன!! அக் கூடத்தில் இருந்துகொண்டே, இடது பக்கமும் வலது பக்கமும் உள்ள அறைகளின் ஜன்னல்கள் மூலம் அவ்வறைகளுக்குள் என்ன நடைபெறுகின்றன என்று கவனிப்பதற்கு ஏதுவாய் இருப்பதைக் கதிஜா கண்டாள்!!!

எனவே, மளமள வெனக் கூடத்தைத் தாண்டி உள்ளே போய்விடாமல், கூடத்தின் இருபக்கங்களிலும் உள்ள ஜன்னல்கள் வழியாய் உள்ளே உற்று நோக்கினுள். அப்போது, அவ்வறைகளின் ஒன்றில் காஜா முஹைதீனுடைய தந்தையாகிய பீர்முஹம்மது என்பவர் தன்னுடைய மைத்துனராகிய மௌலானு மௌலவி முஹம்மதுக்கனி ஆலிம் இராவுத்தரோடு பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்தாள். அதை ஒற்றுக் கேட்க வேண்டும் என்று கதிஜாவுக்குத் தோன்றவே, அவள் அந்த ஜன்னல் அருகே கிடந்த ஒரு நாற்காலிமீது உட்கார்ந்துகொண்டு, அவ்வறைக்குள்ளிருந்து வரும் ஓசையை மிகவும் கூர்ந்து கிரகித்துக் கேட்கலானுள்.

"என் மகன் காஜாமுஹைஹதீனுக்குத் தங்கள் மகள் ஸலிமாவைத் திருமணம் செய்து வைப்பதில் எனக்கு யாதொரு ஆட்சேபனையும் இல்லை! தங்கள் சகோதரி ஹாஜராலும், இரவும் பகலும் என்னிடம் அதையேதான் உபதேசம் செய்தவண்ணம் இருக்கின்ருள்!! ஆனால், காஜாவுக்குக் 'கோஷாவே' பிடிக்காது; அவன் கல்லூரி மாணவன் பாருங்கள்!!!" என்ருர் பீர்முஹம்மது இராவுத்தர்.

அதற்கு அம் மௌலாஞ இராவுத்தர் மிகவும் ஆத்திரமாக, "கல்லூரி மாணவனுய் இருந்தால், முஸ்லிம் மதாச்சாரத்தையே இழந்து, கிறிஸ்துவரைப் போலோ, இந்துவைப் போலோ மனைவியை முக்காடில்லாமல் தெருவில் கூட்டிக்கொண்டு திரிவாஞ?" என்று கேட்டார்.

"அவன் தாயார் ஒரு கிறிஸ்துவப் பெண்ணுக இருந்தவள்தானே! அது உமக்குத் தெரியாதா?" என்று வெகு நிதானமாகக் 'குட்டை' வெளியிட்டார் பீர்முஹம்மது. அதைக்கேட்ட, மௌலாஞ இராவுத்தரைவிட, ஒற்றுக் கேட்கும் கதிஜாபீபீயே அதிக ஆச்சரியமுற்ருள்!

"ஆமாமாம். அந்த விபரத்தையும் உம்ம வாயிலிருந்தே கேட்கவேண்டும் என்று நான் வெகு நாட்களாய்ச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்! இப்போது, இங்கு உம்ம மகன் காஜாவும் இல்லை; இதுதான் நல்ல சந்தர்ப்பம்!! கொஞ்சம் விபரமாக, ஆதியோடந்தம் வரை சொல்லுமே, கேட்கலாம்!!!" என்ருர் மௌலாஞ இராவுத்தர்.

“ சரி சொல்கிறேன் ” எனக் கூறிவிட்டுத் தனது இரண்டாந் தாரமாகிய ஹாஜராளைக் கூப்பிட்டு, “ உன் அண்ணனிடம் என் முதல் தாரத்தின் வரலாற்றைக் கூறப்போகிறேன். களைப்புண்டாகாமல் இருப்பதற்காக இன்னும் இரண்டு கோப்பைத் தேநீர் போட்டுக் கொண்டு வா ” என்று சொல்லி அனுப்பிவிட்டுத் தன் கதையைக் கூறத் தொடங்கினர் :—

“ நான் என்னுடைய வாலிபப் பருவத்தில் ஒரு பெரிய கலைக் கல்லூரியில்ச் சேர்ந்து சிறப்புக் கலைப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றுக் கொண்டிருக்கும்போது, அக் கல்லூரியின் தலைமைச் சைத்திரிகராகிய பிலிப் துரையின் மகள் மேரி என்பவளோடு பழகும் வாய்ப்பு ஏற்பட்டது.

அம்மேரி அதிக அழகும் இளமையும் வாய்ந்த ஒரு தமிழ்ப் பெண்ணைப் போலவே இருந்தாள். தமிழ் மொழியிலும் தேர்ச்சி பெற்றிருக்கும் அவள் தந்தையாகிய பிலிப் துரையிடமே தமிழும் கற்றுத் தமிழ்ப் பைபிளைப் படித்துத் தமிழருக்கும் கிறிஸ்துவ ஞானம் போதிப்பதில் தனிச் சிரத்தை உடையவளாய்த் திகழ்ந்தாள்.

அத்தகைய மேரியிடம், என்னுடைய உப அத்தியட்ச சைத்திரிகனாக இருந்த இரமணன் எனும் ஒரு ஆரிய சமாஜ் பேர்வழி கிறிஸ்துவ ஞானப் பிரியனைப் போல் நடித்துக் கொண்டும், அவளை நத்திக் கொண்டும் திரிந்தான்

ஒரு சமயம் அவர்கள் இருவரும் என்னை நோக்கிக், ‘கருப்புப் பார்ப்பான் எப்படியோ, அப்படித்தான்

தமிழ்ப் பேசும் தமிழ் முஸ்லிம்களும்!' என்று கூறிப் பரிகாசம் பண்ணினர்.

அப்போதே, நான் எப்படியாவது அந்த மேரியைக் கெடுத்துவிட வேண்டும் என்று என் மனதிற்குள் தீர்மானம் செய்து கொண்டு, அவர்களை நோக்கி, 'அது அப்படியல்ல! இத்தென்னாட்டில் ஆரியரும், அவர்களுக்குப் பின்னால் வந்த வெளிநாட்டாரும், மேனாட்டாரும், அவர்தம் கலப்புற்ற பட்டாணியரும், சட்டைக்காரரும், பார்ப்பனரும் தவிர, மற்றவரெல்லாம் திராவிடர்களே!! தென்னாட்டின் வடக்கில் லெப்பை என்றும், கிழக்கில் மரைக்காயர் என்றும், தெற்கில் இராவுத்தர் என்றும், மேற்கில் மாப்பிள்ளை என்றும் அழைக்கப்படும் முஸ்லிம்கள் எல்லோரும் பிறப்பால் தமிழ் நாட்டுக் கிறிஸ்துவரைப் போல், தமிழர் அல்லது திராவிடர்களே ஆவார்கள்!!!' என்று மிகவும் அழுத்தம் திருத்தமாகக் கூறினேன்.

என்னுடைய வார்த்தைகளில் உள்ள உண்மையைக் கூர்ந்துணர்ந்து வியந்த மேரி, 'விளையாட்டாகப் பீர்முஹம்மதோடு பேசினாலும், அவர் வினையமாகக் கூறும் பதில்களில் எப்போதுமே மதிக்கத் தக்க மகத்தான உண்மைகள் அடங்கி இருப்பது வழக்கம்!' என்று புன்முறுவலுடன் கூறிக் கண் சிமிட்டினாள்.

அதனால் எனக்குண்டான மகிழ்ச்சிக்கு அளவே இல்லை! நான் எண்ணிய காரியம் கைகூடிவிடும்போலவே எனக்குத் தோன்றியது.

அன்றுமுதல் நான் அவளோடு அதிகமாக நெருங்கிப் பழக ஆரம்பித்தேன். அதனால், இரமணன்

முயற்சிக்கு இடையூறு ஏற்பட்டது. அவன் முதலில் என்னை எச்சரிக்கை செய்தான். நான் அவன் எச்சரிக்கையைப் பொருட்படுத்த வில்லை. அப்பால் மேரியிடம் சென்று, 'அவள் நெருப்போடு நெருங்கிப் பழகுவதாகக் கூறி அவளையும் எச்சரித்தான்.'

அதற்கவள், 'நெருப்பு ஆபத்தானதே! ஆயினும்' அவசியமானதும் அல்லவா?' என்று கூறிவிட்டாள். அத்தோடு இரமணன் அவளைவிட்டு விடாது, 'பீர் முஹம்மது ஒரு சாதாரண நெருப்பல்ல; தங்கள் கிறிஸ்துவ மதத்தையே எரிக்கும் இஸ்லாமிய நரகம் என்பதும் ஞாபகம் இருக்கட்டும்!' என்றும் பயமுறுத்திப் பார்த்தான்.

'அந்நரகத்தை மறைக்க, அன்பெனும் திரை என்னிடம் இருக்கிறது இரமணு! நீ அதைப்பற்றி எல்லாம் அதிகக் கவலைப்பட வேண்டாம்!! உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ!!!' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டாள் மேரி.

மேரியின் மனதை மட்டுமின்றி அவளுடைய காதலையும் நான் எப்படியோ கொள்ளை கொண்டு விட்டேன் என்பதைக் கண்ட இரமணன் பொறாமை கொண்டு அவளுடைய தந்தையிடம் எங்களைப் பற்றிக் கோள் மூட்ட ஆரம்பித்து விட்டான்.

அதனால் ஏற்பட்ட, பிலிப் துரையின் கடுமையான கண்டிப்பும், இரமணின் இடையறு எதிர்ப்பும், ஆரம்பத்தில் அம்மேரியைக் கெடுக்க மட்டுமே எண்ணிக் காதல் நாடகம் புரிந்த என்னைக் கடைசி வரையில் அவளைக் கைவிடாதவனாக்கி, இணைபிரியா உண்மைக்

காதலனும், காதலியுமாய்ச் சமைத்து விடடது! அவளையும், என்னையன்றி உயிர் வாழ முடியாதவளாய் ஆக்கிவிட்டது!! பின்னர், நாங்களே நாயகனும் நாயகியுமாய் 'ரிஜிஸ்டர்' கலியாணம் செய்து கொண்டோம்!!!

நாங்கள் கணவனும் மனைவியுமாவதற்கு வெகு நாட்களுக்கு முன்பே கலைக் கல்லூரியில் இருந்து நான் விலக்கப்பட்டுவிட்டேன். எங்கள் கலியாணத்தைத் தடை செய்வதற்குப் பிலிப்துரையும், இரமணனும் எடுத்துக் கொண்ட கடுமையான முயற்சிகள் அனைத்தும் வியர்த்தமாயின.

அதன் பிறகு, அப் பிலிப்துரையும் தன் கலைக் கல்லூரியையும், குடும்ப வாழ்வையுங்கூடத் துறந்து விட்டுப் பாதிரி வாழ்வைத் தேடிக்கொண்டு போய்விட்டார் என்று கேள்விப்பட்டேன். ஆனால், இரமணன் மட்டும் எங்களை விட்டுவிடாமல், வஞ்சம் தீர்க்கும் நெஞ்சினனாய், நிழல்போல் எங்களைத் தொடர்ந்து கொண்டிருந்திருக்கிறான் என்பது பின்னர்தான் எனக்குத் தெரிந்தது.

நாங்கள் கணவனும் மனைவியுமாக 'ரிஜிஸ்டர்' கலியாணம் செய்து கொண்டு பல மாதங்கள் ஆன பிறகுதான், என் மனைவியாகிய அம்மேரி, 'டவுன் காசியாரிடம்' போய், இஸ்லாம் மதத்தைத் தழுவி அலிமாபீபீ என்று பெயரிட்டுக் கொண்டுவந்தாள்! ஏனென்றால், அதற்குச் சில மாதங்களுக்கு முன்பே அவள் கர்ப்பவதி ஆகிவிட்டிருந்தாள்!! அப்பால்தான் காஜா முஹைதீனைப் பெற்றாள்!!!

காஜா முஹைறதீன் பிறந்த மூன்ரும் ஆண்டு ஆரம்பத்திலேயே அவள் மீண்டும் மூன்றுமாத கர்ப்பினியாகி விட்டாள். அந்த ஆண்டில்த்தான் நாகூர் ஆண்டவர் கந்தூரியும், அதையடுத்துள்ள வேலாங் கன்னியின் விழாவும் சேர்ந்தாற்போல் அடுத்தடுத்து வந்தன. அவ்விரண்டு வேடிக்கைகளேயும் கண்டு களிப்பதற்காக நாட்டிலுள்ள இந்து—கிறிஸ்துவ—முஸ்லிம் மக்கள், கூட்டம் கூட்டமாக நாகபட்டினம் நோக்கிப் புறப்பட்டனர் ; நானும், என் கர்ப்பவதியான மனேவியும், மகனுங்கூடத்தான் புறப்பட்டோம்.

'காபிர்'களாகிய இந்துக்களின் கோவில்களில் நடைபெறும் தேர்த் திருவிழாவிற்கும், நாகூர் ஆண்டவர் கோவிலில் நடைபெறும் சந்தனக்கூடு கந்தூரி விழாவிற்கும் அதிக வித்தியாசம் இல்லே. ஆதலாலேயே இவ் விழாவிற்கு முஸ்லிம்களோடு, இந்துக்களும் ஏராளமாக வந்திருந்தனர். அவர்களில் இரமணனும் ஒருவனுக இருந்திருக்கிருன் என்பது 'பீரோட்ட' தினத்தன்று தான் எனக்குத் தெரிந்தது.

நாகூர் ஆண்டவர் கந்தூரி விழாவின் இறுதி நாளன்று நடைபெறும் வேடிக்கைதான் 'பீரோட்டம்' என்பது. அது, அந்தி நேரத்தில் நாகூர் ஆண்டவர் கோவிலில் இருந்து எழுந்து, நாகூர் கடற்கரையை நோக்கி ஓடும் ஒரு 'பீருமஸ்தா' னுடைய வேடிக்கை யாகும். அவர் அக்கடற்கரையில் உள்ள ஒரு குறிப் பிட்ட இடத்தின் ஊற்று நீரில் தன்னுடைய வேடிக்கை யைச் செய்து காட்டுவார்.

அந்த வேடிக்கையையும் கண்டு களிப்பதற்காக, அன்றிரவு அவர் பின்னால் ஓடிய கூட்டத்தோடு கூட்டமாக நானும் எனது மனைவியுடன் காஜா முஹைஹதீனைத் தூக்கிக் கொண்டு ஓடினேன்.

அப்பீர்மஸ்தான் அவ்வூற்றை அடைந்ததும், தன் கையால் அதைத் தோண்டி இறைத்து அதில் பூ, எலுமிச்சம்பழம் முதலியவைகளைப் போட்டு ஏதோ வேடிக்கை பண்ணினாராம்! அப்போது, அந்நீர் இனிப்பாய் இருந்ததாக எல்லோரும் பேசிக் கொண்டனர்!! எங்களால் அவ்வூற்றை எட்டிக்கூடப் பார்க்க முடியவில்லை; அவ்வளவு பெரிய கூட்டம்!!!

அலைகடல் கரைமீது, மக்கள் கடல்போல் நிறைந்து ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கும் அந்நேரத்தில், வெண்ணிலவும் பட்டப் பகல் போல் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

எந்த முட்டாளோ, அந்தக் கூட்டத்துள் புகுந்து, 'அப்பீரு மஸ்தான் மகத்துவத்தால், அவ்வூற்று நீர் மட்டுமின்றிக் கடல் நீரும் இனிப்பாய் இருப்பதாகப்' புரளி பண்ணி விட்டான்!

அப்புரளிக் கூற்றை நம்பி அநேக அப்பிராணிகள், கடல் நீரையும் அள்ளிப் பருகிப் பார்ப்பதற்காக ஓடினர்! அவர்களோடு எனது மனைவியும் ஓடினாள்!! நான், காஜாமுஹைஹதீனைத் தூக்கிக் கொண்டு அவளுக்குப் பின்னால் ஓட்டமும் நடையுமாய்ச் சென்றேன்!!!

அப்போது, எனக்கும் அவளுக்கும் இடையில் அந்தப் பாவிப் பயல் இரமணன் எங்கிருந்தோ வந்து புகுந்து ஓடுவதைக் கண்டேன்! எனினும், ஐந்தாண்டு

களுக்குப் பிறகுகூட அவன், அவளை வஞ்சம் தீர்த்துக் கொள்வதற்காகவே அங்கு வந்திருப்பான் என்று நான் எண்ணவே இல்லை !!

கர்ப்பவதியாகிய எனது மனைவியைத் தொடர்ந்து ஓடிய இரமணன் அவளைக் கடலுள் தள்ளித், தானும் அவள் கூடவே பாய்ந்து கொலையும், தற்கொலையும் ஒரு மின்னல் வேகத்தில் செய்து முடிப்பானென்று நான் எப்படி முன்னக்கூடியே அறிந்து அதைத் தடுத்திருக்க முடியும் ?

ஒன்றுமே செய்ய முடியாத நான் என் உயிரையும் அக்கடலுக்கே அர்ப்பணித்து விடத்தான் துடித்தேன் ! ஆனால், அங்கு கூடியிருந்த மக்கள் மிக்கப் பரபரப் படைந்து என்னைத் தடுத்துக் கரையிலேயே நிறுத்தி, இரண்டு வயதுப் பாலகனுய் அப்போது என் கையி லிருந்த என் மகன் காஜாமுஹைதீன் முகத்தைச் சுட்டிக்காட்டிப் புத்திமதியும் கூறித் தேற்றிவிட்டனர்.

அப்பால், அக்கூட்டத்தில் உள்ளவர்களில் சிலரும், செம்படவர்களில் பலரும் அவ்வாழக்கடலில் எவ்வ ளவோ முயன்று தேடியும், அவர்களின் பிணங்களைக் கூடக் கண்டுபிடித்துக் கொண்டு வர முடியவில்லை. ஆதலால், அவற்றை ஏதாவதொரு பெரிய மீன் வந்து இழுத்துக் கொண்டு போயிருக்கும் என்று என்னிடம் கூறிவிட்டனர்.

'அதுவும் நல்லதுதான் ! அந்தப் பிணத்தைப் பார்த்து இந்த மனிதன் புலம்பித் தவித்து அழுகாதிருப் பதற்காக நாகூர் ஆண்டவர் செய்த நன்மைதான் அது!!'

என்றும் அந்நாகூர் ஆண்டவரின் பக்தர்களில் சிலர் பேசிக் கொண்டதும் என் காதுகளில் விழுந்தது. கடைசியாகத் தாரமிழந்த நானும், தாயிழந்த என் மகனும் சென்னைக்குத் திரும்பினேம்.

ஒரு கப்பல் மக்களையும் நடுக் கடலில் ஒருமிக்கக் காப்பாற்றியதாகக் கூறப்படும் நாகூர் ஆணடவரால், ஒரே ஒரு அபலையாகிய என் மனைவியைக் கரை ஓரத்தில் கூடக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டதே! என்ற எண்ணம் என் மனதில் வெகு நாட்கள்வரை இருந்து வந்தது. அப்பால், தங்கள் சகோதரியாகிய ஹாஜராளைத் திருமணம் செய்துகொண்ட பிறகுதான், 'எல்லாம் அவரவர் தலை விதிப்படிதான் நடக்கும்' என்று உபதேசிக்கப்பட்டு அந்த எண்ணத்தைக் கைவிட்டேன்!!

ஆனல், என் மகன் காஜா முஹைதீன் மட்டும் தன் தாயாரின் பரிதாப முடிவைத் தெரிந்த கால முதல், பல்கலைக் கல்லூரி மாணவனய்த் திகழும் இக்காலம் வரையில், 'இன்னும் அந்த நாகூர் ஆண்டவரின் ஈன நிலையை எண்ணிக்கொண்டே இருக்காமல் இருக்க இயல வில்லையே!' என்றுதான் சொல்லிக் கொண்டே திரிகிருன்'' என்று கூறி முடித்தார் பீர்முஹம்மது இராவுத்தர்.

அப்போது, தேநீர் கொண்டு வந்த அவருடைய மனைவி ஹாஜராள், "நம் காஜாவுக்கு என் அண்ணன் மகள் ஸலிமாவைக் கலியாணம் செய்து வைத்து விட்டால், அவனும் உங்களைப் போலவே, அந்தத் துக்ககரமான எண்ணத்தைத் துறந்தே விடுவான்!'' என்று சொன்னுள்.

அதற்கு மௌலானா இராவுத்தர், தன்சகோதரியை நோக்கி, "அதென்னம்மா முடியும்? அவன்தான் 'கோஷாப்' பெண்ணே கூடாது என்கின்றானமே?" என்றார்.

"'கோஷா' கூடாதா? யார் சொன்னது? அல்லாஹ் நரகத்திலல்லவா போடுவான்?" என்று மிகவும் ஆச்சரியமாகப் பேசினாள் ஹாஜராள்.

"அந்த நரகத் திரையைப் பற்றி அவனுக்குக் கொஞ்சங்கூட அக்கரை இல்லையே! அதற்கு நாம் என்ன செய்யலாம்!!" என்றார் பீர்முஹம்மது இராவுத்தர்.

"நாம் என்ன செய்யலாமா? நல்லாக் கேட்டீர்கள் போங்கள்! நாம்தானே நம்ம பிள்ளையைத் திருத்த வேண்டும்!! மார்க்கக் கட்டளைக்கு விரோதமாக நடந்தால், நாளைக்கு........" என்று ஹாஜராள் தன் பேச்சை முடிப்பதற்குள், மௌலானா இராவுத்தர் இடையில் குறுக்கிட்டு, "அல்லாஹ்வின் முன்னிலையில் நாம் அவமானப்பட்டு, 'ஹூதமா' எனும் நரகத்தில் உள்ள நெருப்புக் கம்பங்களில் கட்டப்பட்டு எரிக்கப் படுவோம் என்பது ஒரு புறமிருக்க, இன்றைக்கு இங்குள்ள நம் இனத்தாரின் முன்னிலையில் எவ்வளவு கேவலமாகப் பேசப் படுவோம் என்பதைப் பற்றியாவது சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டாமோ?" என்றார்.

அதற்குப் பீர் முஹம்மது இராவுத்தர், அம் மௌலானா இராவுத்தரை நோக்கி, "ஆமாம். மைத்துனரே! நீர் ஒரு ஆலிமாகி, முல்லாத் தொழில் புரிந்து கொண்டிருக்கிறீர். 'கோஷா' இல்லாமல் உமது

மகள் தெருவில் திரிந்தால், அது உமது பிழைப்பையே பாதித்தாலும் பாதிக்கலாம்!! ஆதலால், இதைப் பற்றிக் காஜா முஹைதீனிடம் நேரில் கூறி அவன் மனதை அறிவதுதான் நல்லது!!!" என்று தெரிவித்தார்.

அதற்குச் சற்று முன்பே, காஜா முஹைதீன் வெளியிலிருந்து வீட்டுக்கு வந்துவிட்டான்! ஆனால், அவன், வீட்டு முன் கூடத்தில் அமர்ந்து கொண்டு ஜன்னல் வழியே அறைக்குள் கவனம் செலுத்திக் கொண்டிருக்கும் கதிஜாவைக் கண்டு ஆச்சரியமுற்றவனாய், அவளறியாவண்ணம் அவளுக்குப் பின்னால் வந்து நின்று கொண்டிருந்தான்!!

அவ்வறைக்குள் பேசப்படுவது காஜாவின் குடும்ப விஷயமாக இருந்தாலும், அப்போது அங்கு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட, நரகத்திரை பற்றிய கருத்து கதிஜாவின் உள்ளத்தைக் கவரக்கூடியது ஆதலால், அவள் அவ்விடத்தை விட்டு, நகர்ந்துவிட மனமில்லாமல் இருந்திருக்கிறாள் என்று காஜா எண்ணிக் கொண்டான்.

அப்பால், காஜாவின் சிற்றன்னையாகிய ஹாஜராள் தற்செயலாய் ஜன்னல் பக்கம் திரும்பிப் பார்க்கும் போது, காஜா யாரோ ஒரு பெண்ணோடு வந்து கூடத்தில் இருப்பதாக எண்ணிக்கொண்டு, "அதோ, அவனும் வந்து விட்டான்! அவனையே கூப்பிட்டுக் கேட்டு விடுங்கள்!!" என்று தன் கணவனிடம் கூறினாள்.

அதைக் கேட்டதும் பீர்முஹம்மது இராவுத்தர் அந்த ஜன்னல் பக்கம் திரும்பிப் பார்த்தார். அதே

சமயம், கதிஜாவும் திடுக்கிட்டு எழுந்து திரும்பினுள். அவள் நெற்றியில் அரும்பிய சின்னஞ் சிறு முத்துக்கள் போன்ற வியர்வைத் துளிகளைத் தன் கைக் குட்டையால் துடைத்துக் கொண்டே புன்முறுவல் பூத்தான் காஜா முஹைறதீன். அவள் வெட்கத்தினுல் தலை கவிழ்ந்தாள். அப்பால், அவன் அவள் கரங்களைப் பற்றி இழுத்துக் கொண்டு அவ்வறைக்குள் சென்முன். அவள் ஒரு கைதியைப் போல் அங்கு போய் நின்முள்.

அவனையும், அவளையும் கண்டு வியப்புற்றிருக்கும் தன் தந்தை முதலானேருக்கு, அவன் அவளைத் தன் கல்லூரியில் தன்னேடு கூடப் படிக்கும் மாணவிகளில் ஒருத்தி என்று அறிமுகப் படுத்தியதோடு, அவளைப் பற்றி அவன் அறிந்துள்ளவற்றையும் கூறி அவர்களை மேலும் திகைக்கச் செய்தான்.

கதிஜாவின் தகப்பனுர் பெயர் ஆலிஜனுப் கனக சபாபதி முதலியார் என்றவுடன் அம்மூவரும் ஆச்சரியத்தால், மூச்சுப் பேச்சற்றுக் கண்களை அகல விரித்தனர்! பின்னர், அவர்கள் தம் குடும்பப் பேச்சைச் சற்று நேரம் ஒத்திப் போட்டுக்கொண்டு, கதிஜாவையே வலியுறுத்தி, அவள் குடும்பத்தைப் பற்றிய விபரத்தைக் கொஞ்சம் கூறுமாறு கேட்டுக் கொண்டனர்.

"என் தகப்பனுர் கனகசபாபதி முதலியார்தான் என்பதே, எனக்கு விபரம் தெரிந்த கால முதலாய் நான் அறிந்திருக்கிற உண்மையாகும்! என் தாயாரைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது!! அவளை நான் பார்த்ததே இல்லை!!! அவளைப்பற்றிய விபரம் ஏதேனும் என் தந்தையிடம் வந்து, எவரேனும் கேட்டுவிட்டால்

உடனே, அவர்கள்மீது அவர் சீறி விழுவதை நான் பார்த்திருக்கிறேன். நான் அழுதால், அவரும் அழுவார்; நான் சிரித்தால், அவரும் சிரிப்பார். எனக்கு ஒரு சிறந்த ஆலிமைக் கொண்டு குர்-ஆன் முழுவதையும், அருத்தத்தோடு ஓதுவித்திருக்கிறார். நான் ஐந்து நேரமும் அல்லாஹ்வைத் தொழுகவேண்டும் என்பதுதான் அவர் விருப்பம்.

ஆனால், என் தங்கை காந்தாமணியும், அவரும் மட்டுமே இந்து மதாச்சாரப்படி திருநீறு அணிந்து முருகக் கடவுளை வழிபடுவர். என்னைப் போலவே ஐந்து நேரமும் அல்லாஹ்வைத் தொழுகக்கூடிய குலாம்காதர் எனும் ஒரு தொண்டு கிழவரும் எங்கள்கூடவே இருக்கிறார்; அவர்தான் என் தந்தையின் குமஸ்தா. எங்களுக்கெல்லாம் பொதுவாகச் சமைத்துப் போடுவதற்கு, எந்த மதத்தைப்பற்றியும் எவ்விதஅக்கரையும் இல்லாத ஒரு சமையல்க்காரியும் உண்டு. அவ்வளவுதான் எங்கள் குடும்பத்தைப் பற்றி எனக்குத் தெரிந்திருப்பவைகள்." என்று கூறி முடித்தாள் கதிஜா.

"அதற்கு மேல் ஒன்றும் தெரியாத கதிஜாவிடம் அனுவசியமான கேள்விகளைக் கேட்க வேண்டாம்! அவள் என் கல்லூரித் தோழி. அவள் குணம் எனக்குத் தெரியும். அவள் மனம் அல்லாஹ்வைத் தொழுவதற்கன்றி வேறெதற்கும் வருந்தக் கூடாதென்ற கொள்கை உடையவள். அவளை யாரேனும் வருத்தினால், அத்தகையோரின் சகவாசத்தையே நிறுத்தி விடுவாள். நரகத்தைப் பற்றி நினைந்து நடுங்குபவள்; ஆனாலும், நரகத்திரையை நிராகரித்துவிட்டவள்" என்று கதிஜாவைப் பற்றி மேலும் சில கூறி முடித்தான் காஜா.

அதன் பிறகு, மௌலானா மௌலவி முஹம்மதுக் கனி ஆலிம் இராவுத்தர், நரகத் திரையைப் பற்றிய தனது விவாதத்தைத் தொடர்ந்து நடத்த ஆரம்பித்தார் :—"நம்மை நரகத்தின் பக்கம் இழுத்துவிடும் இயல்புடையவைகளை, நாம் காணாதிருக்கும்படி மறைக்கும் திரையைத்தான் நரகத் திரை என்று நான் குறிப்பிடுகிறேன். அப்படியானால், ஒவ்வொருவருக்கும் அவரவருடைய கண்ணிமைகளையே நரகத் திரைகள் என்று கூறலாமா? என்றால், அது முடியவே முடியாது! கண்ணிமைகளை நரகத்தின் வாயல்கள் என்றே கூற வேண்டும் !! ஏனென்றால், எந்தப் பாவத்தையும் உடனே பார்த்து அநுபவிக்கும்படி நம்மைத் தூண்டுவது போல், அடிக்கடி திறந்த வண்ணம் இருப்பவைகள் நம்முடைய கண்ணிமைகளே ஆகும் !!! ஆதலால், 'பர்தாத்' திரையையேதான் நரகத் திரை என்று நான் நிச்சயமாகக் குறிப்பிடுகிறேன்.

நம்முடைய அல்லாஹ்வும் நம் நபியை நோக்கிக் கூறி இருக்கிறான் : 'நபியே! நீர் உம்முடைய மனைவிகளுக்கும், உம்முடைய பெண் மக்களுக்கும், விசுவாசிகளின் பெண்களுக்கும், அவர்கள் தங்கள் தலை முந்தானைகளை (நரகத் திரையை) இறக்கி (முகத்தை மறைத்து)க் கொள்ளும்படி நீர் கூறுவீராக! அதனால், அவர்கள் கண்ணியமானவர்கள் என அறியப்பட்டு, எவருடைய துன்பத்திற்கும் அவர்கள் உள்ளாகாது இருப்பதற்கு இது சுலபமான வழியாகும்......' என்று!

மேலும், அந்நரகத் திரையை யார் யார் முன்னிலையில் போட்டுக்கொள்ள வேண்டியதில்லை என்பதையும்

அல்லாஹ்வே நபி மூலம் நமக்கு அறிவித்திருக்கிருன்: '...பெண்கள் தங்களுடைய கணவர்கள், தங்களுடைய தந்தைகள், தங்களுடைய கணவர்களின் தந்தைகள், தங்களுடைய குமாரர்கள், தங்களுடைய கணவர் களின் குமாரர்கள், தங்களுடைய சகோதரர்கள், தங்க ளுடைய சகோதரர்களின் குமாரர்கள், தங்களுடைய சகோதரிகளின் குமாரர்கள், தங்களுடைய அடிமைகள், அல்லது பெண்களின் விருப்பமற்றுத் தங்களை அண்டிப் பிழைக்கும் ஆண்கள், பெண்களின் மறைவான அவ யவங்களை அறிந்து கொள்ளாத சிறுவர்கள் ஆகிய வர்களைத் தவிர, மற்றெவர் முன்னும் தங்களுடைய அலங்காரத்தை வெளிப்படுத்தாதீர்கள்...' என்றும்!! எனவேதான், நரகத் திரை நமது முஸ்லிம் பெண்களின் சமுதாயத்திற்கு மிகவும் இன்றியமையாதது என்று நான் உறுதியாகக் கூறுகிறேன்" என்ருர்.

"அதை நான் எனது மனப்பூர்வமாக ஒப்புக் கொண்டு அதன்படியே அநுஷ்டிக்கிறேன் என்பதோடு, அந்த நரகத் திரை விதியை ஒரு அணுவும் பிசகாது அப்படியே அநுஷ்டித்துக் கொண்டிருக்கும் ஸலீமா பீபீ எனும் எனது அண்ணன் மகளையே, என் கணவன் மகனுகிய காஜா முஹைதீன் கலியாணம் செய்து கொள்ளவேண்டும்! என்றும் வலியுறுத்திக் கூறு கிறேன்" என்ருள் ஹாஜரா‌ள்.

அவளுடைய வார்த்தையைக் கேட்டு ஆத்திரப் பட்டுத் துள்ளி எழுந்த கதிஜா: "மௌலானு கூறு வதை அவருடைய மனைவி ஏற்றுக்கொள்வதாகக் கூறி ஞலும், அல்லது ஒவ்வொரு கணவனின் மனைவிகளும்

அவ்வாறே கூற வேண்டியவர்களாய் இருந்தாலும், சுதந்தரமாகவும் சமத்துவமாகவும் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிற புதுமைப் பெண்ணினத்தின் சார்பாகக் 'கோஷா' அல்லது 'பர்தா' முறையை, நம் நாட்டிலும் அடியோடு நிராகரிக்க வேண்டும் என்று கூறவே நான் விரும்புகிறேன்! அதற்குத் 'துருக்கியின் தந்தை' என முஸ்லிம் உலகத்திற்கே ஓர் முன்மாதிரியாய் விளங்கிய முஸ்தபாக்கமால்பாட்சா, 'கோஷாவை' ஒழித்த துணிச்சலையும், அதனால் அந்நாடு அடைந்துள்ள முன்னேற்றத்தையுமே சிறந்த அத்தாட்சிகளாகக் குறிப்பிடுகிறேன்!!

மௌலானா இராவுத்தர் குதர்க்கமாகக் கூறும் நரகத்திரை, பெண்களுக்கு இப்பூலோகத்திலேயே நரக வேதனையைக் கொடுக்கக் கூடியது என்பதை, அவரும் அவரினமும் அத்திரையைச் சற்றேனும் அணிந்து பார்த்தாலல்லவோ தெரியும்?

அப்படியே அந் நரகத்திரையை மிகவும் சகிப்புத் தன்மையோடு பெண்கள்மட்டும் அணிந்து கொண்டதில் தான் என்ன பலன் கிட்டிவிட்டது? 'கோஷா'ப் பெண்களில் விபசாரிகளே இல்லையா? அல்லது, 'கோஷா' அற்ற பெண்கள் எல்லோருமே விபசாரிகளாய்ப் போய் விட்டனரா?

நரகத் திரையை மிகப் பொறுமையோடு அணிந்து சகித்துக் கொண்டிருந்த, முஹம்மது நபியின் மனைவிகளில் ஒருவளாகிய ஆயிஷா மீது கூட, விசுவாசிகளாகிய ஆண்களில் ஒரு கூட்டத்தினர், விபசார அவதூறு செய்யவில்லையா? அதற்காக அல்லாஹ், முஹம்மது

நபியின் மனைவிகள் அத்தனை பேருக்கும், 'நபியுடைய மனைவிகளே! உங்களில் எவளேனும் பகிரங்கமான யாதொரு மானக்கேடான காரியத்தைச் செய்வாளாயின் அதற்குரிய தண்டனையை அவர்களுக்கு இரு மடங்காக அதிகரிக்கப்படும். இஃது அல்லாஹ்வுக்கு மிக்க சுலப மானதே!' என்று குர்-ஆன் 33-ம் அத்தியாயம், 30-வது வசனத்தின் மூலம் எச்சரிக்கை செய்திருக்கவில்லையா?

ஆனால், நரகத் திரையே அணிந்திருக்காத, 'காபிர்' எனும், முஸ்லிம் அல்லாத 'பிர்அவ்'னுடைய மனைவி யாகிய ஆசியா என்பவளையே பெண்களில் சிறந்தவள் என்று அல்லாஹ் அதே குர்-ஆனில் 66-ம் அத்தியாயம், 11-வது வசனத்தின் மூலம் மிகவும் பாராட்டியும் இருக்க வில்லையா?

ஆகவே, அல்லாஹ்வுடைய தூதராகிய முஹம்மது நபியுடைய அருமை மனைவிகளுக்குக் கடுமையான 'கோஷா' முறைகள், நரகத் திரைகள்போல் இருந்தும், அல்லாஹ் வுடைய பாராட்டுதலை, அவர்களில் ஒருவ ளேனும் பெற முடியவில்லை! அதற்கு மாறாக அல்லாஹ் வுடைய எச்சரிக்கையைத்தான் பெற்றிருக்கின்றனர்!! ஆனால், அல்லாஹ் வுடைய மதத்திற்கு விரோதியாகிய 'பிர்அவ்'னுடைய மனைவிக்கோ, நரகத்திரையே இருந் திருக்காதல்லவா? எனினும், அவள் அல்லாஹ் வுடைய எச்சரிக்கைக்குப் பதிலாகப் பாராட்டுதலை யன்றோ பெற்றிருக்கிறாள்!!!" என்று மிகவும் பெருமிதமாகப் பேசி முடித்தாள்.

உடனே, காஜா முஹைதீனும், அவர் தந்தையாகிய குடும்பத் தலைவர் பீர்முஹம்மதும் மகிழ்ச்சிப் பெருக்

குற்றுக் கரகோஷம் செய்து கதிஜாவின் பேச்சைப் பாராட்டினர்.

அதனுல், மௌலாஞ இராவுத்தரின் முகம் சுட்ட கத்திரிக்காயைப் போல் சுருங்கிவிட்டது! அவர் சகோதரி ஹாஜராளுக்கு வந்த கோபத்திற்கு எல்லேயே இல்லே. கதிஜாவைக் கொன்று தின்றுவிடுபவள் போல் முறைத்துப் பார்த்துவிட்டுக் காஜாமுஹைறதீனே நோக்கி: “இந்தாப்பா, அடே காஜா! நான் சொல்வதைக் கேள். இந்தப் பெண்ணேப் போலக் ‘கன்ஞ பின்ஞனு’ பேசவெல்லாம் என் அண்ணன் மகளுக்குத் தெரியாது; ஆனுல், இவளேவிட் நல்ல அழகி. இவளேப் போல இங்கிலீஷ் பள்ளிக்கூடத்தில் படிக்கா விட்டாலும், ஏதோ கொஞ்சம் நன்ருகவே எழுதப் படிக்கத் தெரிந்தவளேதான். இப்படி கண்டவனேடெல்லாம் பேச மாட்டாள்; காதல்க் கடிதங்களும் எழுத மாட்டாள். தெருவில் போகிறவன் வருகிறவன் மனதை எல்லாம் கவரும்படியாக முக்காடில்லாமல்த் திரியவு மாட்டாள். உனக்கு யார் வேணும்? இவளா, அவளா? உடனே ஒரு முடிவாகச் சொல்லிவிடு!” என்று ‘படபட’ வெனப் பேசினுள்.

“அடடடடே! உங்கள் கலியாண விவகாரங்கள் எல்லாம் உங்களோடேயே இருக்கட்டும் அம்மா!! என் பேச்சிற்கும் நரகத் திரைக்கும் மட்டுந்தான் சம்மந்தமே ஒழிய, காஜாவின் கலியாணத்திற்கும் என் பேச்சிற்கும் யாதொரு சம்மந்தமும் கிடையாது!!! நான் போய் வருகிறேன். ‘குட்பை’” என்று கூறிவிட்டுக் கதிஜா

எழுந்து போய்விட்டாள். உடனே காஜாவும் எழுந்து பின் தொடர்ந்து சென்றான்.

"பார்த்தீர்களா! இருந்த வெள்ளத்தை, வந்த வெள்ளம் கொண்டு போகிற விதத்தை?" என்று மிகவும் பரிதாபகரமான பாவனையில் தன் கணவனை நோக்கிக் கூறினாள் ஹாஜராள்.

---

4. நால்வரின் வெற்றி !

சென்னை சர்வ கலாசாலைப் பட்டமளிப்பு விழாவும், வருடாந்திர ஆண்டு விழாவும் வெகு விமரிசையாக நடைபெறுவதற்காகப் போட்டிப் பந்தய விளையாட்டுகள் பலவும் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தமையால், ஏனையக் கல்லூரிகளின் சிறப்பு வாய்ந்த மாணவர்கள் சிலரும் வந்து இவ் விழாக்களிலும், போட்டிகளிலும் பங்கு கொண்டு பெரிதும் சிறப்பித்துள்ளனர்.

கல்வி அமைச்சரே, அவ் விழாக்களுக்குத் தலைமை தாங்கி, வெற்றி பெற்ற மாணவர்களுக் குரிய பட்டங்களையும், பரிசுகளையும், வழங்குவதற்காக அங்கு வந்திருந்தார் ! அவருக்குப் பெரிய பெரிய மலர் மாலைகளைச் சூட்டி வரவேற்பளித்த தலைமை நிர்வாகி அவரைப் பலவாருகப் புகழ்ந்து பேசினுர் :—

"வருக, வருக ! வளமார் தமிழகத்தின் வண்டமிழ்க் கல்வி அமைச்சரே வருக !! தங்கள் வருகை, எங்களுக்குப் பேருவகை தருவது போல், தங்கள் தகை, தமிழகத்தின் அறிவுப் பகையை அழிக்கவும் ! தங்கள் வகை, தமிழகத்தின் திருப் பகையைத் தீர்க்கவும் !! தங்கள் ஈகை, உலகை உய்விக்கவும் உதவும் !!!" என்ருர்.

அதற்குக் கல்வி அமைச்சர் அளித்த தலைமை உரையில், "ஐயோ ! அத்துணை புகழுக்கும் நான் எப்படி ஆளாவேன் ? ஆக்கல், காத்தல், அழித்தல்

ஆகிய முத்தொழிலும், நம்முடைய மும்மூர்த்திகளுக்கே உரியவை யாகும் என்றெண்ணிடும் முழுமூட நம்பிக்கை உடைய முத்தமிழ் மக்களுக்கன்ருே, நான் கல்வி அமைச்சனுக உள்ளேன்?

கல்விக்குச் சரசுவதியையும், செல்வத்திற்கு லட்சுமியையும், கருணைக்குக் காளியையும் அதிகாரிகளாய் ஏற்று பஜனை பண்ணும் பண்புடைய பாழுந் தமிழருக்கன்ருே, நான் கல்வி அமைச்சனுகவும், என் தோழன் நிதி அமைச்சனுகவும், என் தலைவன் பிரதம அமைச்சனுகவும் ஏற்பட்டு இருக்கின்ருேம்?

எங்களால் என்ன செய்ய முடியும்? எங்கள் அரசாங்கம் மத சார்பற்றதென்று சொல்லிக் கொள்ளப் பட்டாலும், எங்களைச் சட்ட சபைகளுக்குத் தேர்ந்தெடுப்போராகிய, எங்களால் ஆளப்படும் மக்கள் அனைவரும் முழுக்க முழுக்க மத சார்புடைய முழு மக்களன்ருே? அவர்கள் மனம் கோணிருல், எவர் தாம் மந்திரிகளாக வரமுடியும்? எனவே, இத் தமிழகம் மட்டுமின்றி, இந்திய உபகண்டம் முழுவதிலுமே உள்ள 'மந்திரிகளுக்கு அழகு, தந்திரமாகப் பேசிப் பேசித் தத்தம் பதவி காலத்தை நீடிக்கச் செய்துகொள்வதுதான்!' இதைத் தவிர, வேறெதையேனும் எங்களிடம் எதிர்பார்க்கும் மக்கள், ஏமாந்த மாக்களே ஆவர்!!" என்று வெகு விளக்கமாகப் பதிலளித்த பின்னர், அக் கல்வி அமைச்சரிடம் கொடுக்கப்பட்ட நிகழ்ச்சிநிரலில் பொறிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்குக் குறிக்கப்பட்டுள்ள பட்டங்களையும், பரிசுகளையும் வழங்கினுர்.

கடைசியாகக் கல்வி அமைச்சர் முன்னிலையில் இரண்டிரண்டு பேர்களாய் நால்வர் வந்து நின்றனர். அவர்கள் நால்வரும் ஒருங்கே 'பி. ஏ.' பட்டங்களும், முறையே 'டென்னிஸ்,' 'டேபிள் டென்னிஸ்' பந்தாட்டங்களில் முதற் பரிசுகளும் கொடுக்கப் பெற்றனர். அவர்களின் பெயர்கள் : ராஜாமுஹைதீன், கருணகரன், கதிஜாபீபீ, காந்தாமணி என அழைக்கப் பட்டதைக் கேட்டதும் கல்வி அமைச்சர் ஆச்சரியம் மிக்கவராய் அவர்களையே கூர்ந்து நோக்கிவிட்டுக் கூறலானர் :—

" மாண்பு மிக்க மாணவி-மாணவர்களே ! மதமே அற்ற மகத்தானதோர் எதிர்கால இன்பச் சமுதாயத்தின் சிறந்த மாதா-பிதாக்களே !! வருங்கால மந்திரிகளே !!!

சொர்க்கத்திற்கு விருந்தளித்தும், நரகத்துடன் போராடியும் வரும் முற்கால முழு மக்களின் சந்ததிகளாய் இக் காலத்திலே நீங்கள் இருக்கின்றீர்கள்! இனி, எக் காலத்திலும் உங்களை மத மெனும் பேய் பிடித்தாட்டா திருக்க வேண்டும் !!

எதனையும் நம்பக் கூடாது ! ஆராய்ந்துதான் அறிய வேண்டும் எனும் அறிவுச் சுடர் கொழுந்து விட்டெறியும் பல்கலைக் கல்லூரிப் பிள்ளைகளே !! பெண்களே !!! உங்களில் நால்வர் வெற்றியின் சின்னங்களாய்—மத வெறி அற்றவர்களாய்—ஒற்றுமைக்கு ஓர் எடுத்துக் காட்டாய் இங்கிருப்பதை காண என் உள்ளம் இறும்பூதெய்துகிறது. இந் நால்வரைப் போல், இந் நாடே விளங்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

கடவுள் மதங்களைக் கயவர்களும் நம்புகின்றனர் என்று எல்லோருமே கூறுகின்றனர்! ஆனால், நமது திருக்குறளறிஞர் திருவள்ளுவ நாயனார் கூறியது என்ன? 'தேவ ரனையர் கயவ ரவருந்தாமேவன செய் தொழுக லான்' என்றாரல்லவா? இதன் பொரு ளென்ன? 'கயவர்களேதாம் கடவுள் மதக்காரர்கள்' என்பது வெட்ட வெளிச்சமாகி விட்டதல்லவா? இன்னும் ஏன் நமக்கந்த மூட நம்பிக்கை?

கடவுளையும் மதத்தையும் காட்டுமிராண்டி காலப் பாமரர்கள் நம்பினர்! அவர்களைப் போலவேதான் குரு மார்களும், தீர்க்கதரிசிகளும் நம்பினர்!! பிறகு, கற் றறிந்த மேதைகளும் நம்பினர்—கல்வியறிவே சிறிது மற்ற முட்டாள்களும் நம்பினர்!!!

பல்கலை பயில் விஞ்ஞானக் கல்லூரி மாணவ மணிகளும், பட்ட மரம் போலுற்ற முட்டாள் திருமேனி களும் கடவுள் மத நம்பிக்கை விஷயத்தில் மட்டும் சரிசமமான பேதைகள்தாமோ? என்று சற்றேனும் சிந்தித்துப் பார்ப்போர், கட்டாயம் இந் நால்வரின் வெற்றியை இந்நாட்டின் வெற்றியாக மட்டுமின்றி, இவ் வுலகத்தின் வெற்றியாகவே உயர்த்திவிடும் தொண்டாற்றக் கடமைப் பட்டுள்ளனர்" என்று பேசி முடித்து விட்டு, வந்தனோபசாரங்களையும் ஏற்றுக் கொண்டு விடை பெற்றுச் சென்றார்; விழாக்களும் முடிந்தன.

மறு வாரம், மாலை நேரம், கனகசபாபதி முதலி யாரின் மாளிகையிலே ஒரு மாபெரும் பாராட்டுக் கூட்டமும், தேநீர் விருந்தும் நடைபெறுகிறது! தன்

னுடைய பெண் மக்கள் இருவரும் 'பி.ஏ.' பட்டம் பெற்றுள்ளதைத் தனது பந்து மித்திரர்களும், மற்றவர்களும் அறிய வேண்டும் என்பதற்காக, கனகசபாபதி முதலியாரே முன்னின்று அவற்றைச் சிறப்பாக நடத்துகிறார். அவற்றில் காஜாமுஹைதீனும், கருணாகரனும் கலந்து கொண்டது மட்டுமின்றி, முதலியாருக்கு உற்ற துணையாக இருந்து விருந்தினரை வரவேற்பது முதல், பரிமாறுதல் வரை உள்ள சகல அலுவல்களையும் வெகு உற்சாகமாகக் கங்காணிக்கின்றனர்.

கனகசபாபதி முதலியார் ஒரு பெரிய கோடீசுவரராவதற்குக் காரணமாக இருந்த அவருடைய சிற்பத் தொழிற்சாலையின் பெருமையைப் பற்றிப் பேசாதாரே இல்லை! அவ்வளவு சிறப்பு வாய்ந்த அத்தொழிற்சாலையைச் சில காலத்திற்கு முன்புதான், எக்காரணத்தினாலோ திடீரென்று மூடி விட்டார் முதலியார்!! அன்று முதல், அது ஒரு கண்காட்சி சாலையாக அலங்கரிக்கப்பட்டு, அதை விரும்பிப் பார்க்க வரும் முக்கிய கலைஞர்களுக்கும், பிரமுகர்களுக்கும் மட்டுமே திறந்து காட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது!!!

இன்று, அத்தகைய சிறப்பு வாய்ந்த கண்காட்சி சாலையிலேயே அப்பாராட்டுக் கூட்டத்தையும், தேநீர் விருந்தையும் நடத்திவைக்க வேண்டும் என்று முதலியாரிடம் பிடிவாதமாகக் கேட்டு அநுமதி பெற்றிருக்கும் காஜாமுஹைதீனுக்கும், கருணாகரனுக்கும் ஏற்பட்டுள்ள மட்டற்ற மகிழ்ச்சியைச் சாதாரணமாக வருணித்துவிட முடியாது.

அசாதாரணமான அவர்கள் மகிழ்ச்சிக்கும், மனக் கிளர்ச்சிக்கும் போதிய காரணமில்லாமலில்லை! அக் கண்காட்சி சாலையும், மாளிகையும் அடையாற்றுக் கடற்கரை ஓரமாகவே அமைந்திருக்கிறபடியால், அம் மாபெரும் மாளிகையைச் சுற்றி வளைந்தோடும் அவ் வடையாறு கடலில் சங்கமமாகும் காட்சியை, அக் கண் காட்சி சாலையின் வெண்கலச் சிற்பக் கூடத்தில் வீற் றிருந்த வண்ணமே கண்டு களிக்கலாம்!!

அதே சமயத்தில் 'ஆதம்' காலத்திற்கும் முந்தியே தோன்றியுள்ள முழு நிர்வாண 'பிதிகான்த்ரோபஸ்' மாந்தர் உருவம் முதல், அரை நிர்வாண மகாத்மாக் காந்தி உருவம் வரை உள்ள விதவிதமான உயிர் ஓவி யங்களை வெண்கலச் சிலைகளாய்க் காணலாம்! நீக்ரோ அழகிகளிலிருந்து, பாரிஸ் பசுங்கிளிகள் வரை உள்ள பாவையரின் தோற்றங்களையும் பார்க்கலாம்!! இன்னும், உலகில் உள்ள அதிசயங்களை எல்லாம் நேரில் சென்று பார்ப்பது போலவே, அச்சிற்பக் கலாசாலைக்குள் சற்றே உலாவினால் பார்த்துப் பரவசமடையலாம்!!!

கனகசபாபதி முதலியாரின் மாளிகை தென் னாட்டின் சிற்பக் கலைக்கே ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது! அதில் அதிகக் கதவுகளில்லை. ஆனால் ஏராளமான பட்டுப் படுதாக்கள் தொங்கும்! ஒவ்வொரு படுதாவின் பின்னும் அலங்காரமான பெரிய பெரிய கூடங்கள் உள்ளன! அவற்றில் ஒன்றுதான் வெண் கலச் சிற்பக் கலைக்கூடம்! இக்கூடத்திற்கு மாத்திரம் பெரியதோர் கதவு பிற்காலத்தில் போடப்பட்டிருக் கிறது.

அக் கூடத்தின் சுவர்கள் மிகவும் அகலமான வைகள். அச்சுவர்களின் உள்ளே சிற்சில உள்ளறைகளும் உள்ளன. அக்கூடத்தின் கீழ்தளத்திலுள்ள உள்ளறை ஒன்றில் இருந்து, மூன்றுவது தளத்தின் உப்பரிகை வரைக்கும் இரகசியமாகவே ஏறி இறங்குவதற்குச் சாதகமாக அவற்றிற்குள் வளைந்து ஏறும் சுழல் படிக்கட்டுகளும் அமைக்கப்பட்டு உள்ளன. உள்ளறையின் கதவுகள் எல்லாம் நிலைக் கண்ணாடிகளால் அமைக்கப்டிருப்பதால், பழகின ஆட்களைத் தவிர வேறு யாராலும் அவ்வழிகளை இலகுவில் கண்டு கொள்ளவே முடியாது.

இத்தகைய இரகசிய அறைகளையும், மாடங்களையும், கூடங்களையும் உடைய அம் மாளிகையில் கனகசபாபதி முதலியாரும், அவருடைய இரண்டு பெண் மக்களும், ஒரு சமையல்காரியும், ஒரேஒரு கிழக் குமஸ்தாவும் மட்டுமே இப்போது வசித்துக்கொண்டிருக்கின்றனர்.

அக் கிழக் குமஸ்தாவின் பெயர்தான் குலாம்காதர்! அக் குலாமின் அலுவலறையும், அவ் வெண்கலச் சிற்பக் கலைக் கூடத்தின் அகலமான சுவருக்குள்தான் இருக்கிறது! எனவே, அக்கலைக் கூடத்தின் திறவுகோல் எப்போதும் குலாமிடமே இருக்கும்! யாரேனும் அக் கண்காட்சி சாலையைக் காணவேண்டும் என்று முதலியாரிடம் அனுமதி பெற்றுக் கொண்டு வந்தாலும், குலாம்தான் அவற்றை எல்லாம் ஒரு அளவோடு காட்டி, எவருக்கும் எவ்வித சந்தேகமும் ஏற்படாதவாறு அனுப்பி வைப்பது வழக்கம்.

குலாம், அச் சிற்பத் தொழிற்சாலை ஆரம்பிக்கப் பட்ட காலத்திலிருந்து முதலியாரிடம் வேலைபார்த்து வரும் ஒரு புராதனப் பேர்வழி. இப்போது, 'அட்லாஸ்' சித்திரம் போலச் சொள்ளையும், சுருக்கமுமாக இருக்கும் அவர் முகத்தில் கட்டாந்தரைப் பயிர் போல் முளைத் திருக்கும் வெண் தாடி மயிர்களும், கூன்விழுந்த முதுகும், குழி விழுந்த கண்களும், அவற்றைக் காக்கும் வெள் ளெழுத்துக் கண்ணாடியும் அவருடைய பருவத்தின் முதிர்ச்சியை முறையிடுவனவாய் உள்ளன. என்றாலும், கதிஜாவைப் போல் ஐந்து முறையும் அல்லாஹ்வைத் தொழுகத் தவறமாட்டார்.

அந்தக் குலாமை கூடக் காஜாவும், கருணாகரனும் அன்றைக்குக் 'குல்லாப்' போட்டு வைத்திருந்தனர்! காஜாவைவிடக் கருணாகரனே அக் கிழவரோடு அதிகம் நெருங்கிப் பழகினான்!! அத்தனை பெரிய விருந்துபசாரப் பாராட்டுக் கூட்ட அமளிகளுக் கிடையிலும் கதிஜாவும், காந்தாமணியும் முறையே காஜாமீதும், கருணாகரன் மீதும் கண்ணாய் இருந்தனர். ஆதலால், அவ்விருவரின் ஒவ்வொரு போக்கின் நோக்கத்தையும் நோட்டமிட்ட வண்ணமாகவே விளங்கினர். ஆனால், அன்றைக்கு ஒருநாள் மட்டுந்தான் கனகசபாபதி முதலியார் தன் வாழ்க்கையின் அந்தரங்கம் யாவையும் மறந்து கலங்க மற்ற மனதோடு குதூகலமாய் விளங்குகிறார்.

எப்படியோ ஒருவாறு தேநீர் விருந்து முடிந்து, பாராட்டுக் கூட்டம் கனகசபாபதி முதலியார் தலைமையி லேயே ஆரம்பமாகியது. அவ்வாறு முதலியாரையே தலைமை தாங்குமாறு வலுக் கட்டாயமாகப் பிரரே

பித்தான் கருணாகரன். அதையே ஆதரித்துப் பேசினான் காஜாமுஹைதீன். அப்பால், நிகழ்ச்சி நிரலை எழுதி முதலியாரிடம் கொடுத்துவிட்டுக் கூட்டத்தினின்றும் நழுவினான் கருணாகரன்.

முதலியார் தன் தலைமை உரையில் 'பெண் கல்வியின் முக்கியத்துவம்' பற்றிப் பெரிதும் வலியுறுத்தி வெகு விளக்கமாகப் பேசிக்கொண் டிருக்கும்போது, காஜாவும் கூட்டத்திலிருந்து காணமற் போய் விட்டதைக் கவனித்தாள் கதிஜா. அதற்குச் சற்று முன்புதான் காந்தாமணி எழுந்து, கருணாகரன் நழுவிய வழியே போய்க் கொண்டிருப்பதையும் கண்டாள்! எனவே, கதிஜாவும் எழுந்து காந்தாமணியைத் தேடிச் சென்றாள். அப்போது முதலியாரின் தலைமை உரை முடிந்து, மணிக்கணக்காக வெகு கவர்ச்சிகரமாகப் பேசும் ஒரு பிரபலப் பேச்சாளர் வந்து, 'பெண் ஏன் அடிமையானாள்?' எனும் பொருள்பற்றி பேச ஆரம்பித் துள்ளார்.

கருணாகரன், குலாம் காதரைத் தேடிக் கஷ்டப் பட்டான்! கடைசியாகத் தற்செயலாய், அவர் ஒரு இரகசிய அறையின் கண்ணாடிக் கதவைத் திறந்து கொண்டு வெளியில் வந்து, பாராட்டுக் கூட்டத்தை நோக்கிப் போய்க் கொண்டிருப்பதைச் சற்று தூரத்தில் உள்ள ஒரு பெரிய வெண்கலச் சிலையின் பின்னால் ஒலிந் திருந்து கண்டு கொண்டான்!!

பிறகு, அக் குலாம் கூட்டத்தில் போய் அமரும் வரை காத்திருந்த கருணாகரன், அக்கண்ணாடிக் கதவைத் திறந்துகொண்டு அந்த இரகசிய அறைக்குள் நுழைந்

தான். நுழைந்ததும் அவன் கண்ட முதல் காட்சியே அவனைத் திடுக்கிடும்படி செய்துவிட்டமையால், அவன் தேடி வந்த வெண்கலச் சிங்கத்தையும் மறந்து அங்கேயே ஸ்தம்பித்து நின்று விட்டான்.

கருணாகரனைப் பெற்ற தாயாரின் உருவம் ஓர் வெண்கலச் சிலையாக அவன் எதிரில் நின்று கொண்டிருக்கிறது! அதன் கழுத்தில் அப்போதுதான் போடப்பட்ட ரோஜா மலர் மாலையின் மணமும், அதன் காலடியிலிருந்து கிளம்பும் ஊதுபத்தி, சாம்பிராணிப் புகையும், கொந்தளிக்கும் அவன் உள்ளக் கடலிலே கோடா கோடி எண்ண அலைகளை உண்டாக்கி அவனை அலைமோதச் செய்தன.

அச் சமயம், அங்கு யாரோ வரும் காலடிச் சப்தத்தைக் கேட்ட கருணாகரன், பதட்டம் அடைந்து, கண்ணாடிக் கதவை அடைத்துக் கொண்டிருக்கக் கூடத் துணிவின்றித் தாயாரின் சிலைக்குப் பின்னால் இருக்கும் சுழல் படிக்கட்டுகளில் ஏறிச் சுழன்றோடிப் போய் விட்டான்.

கருணாகரனைத் தேடிவந்த காந்தாமணி, அங்கு திறந்திருக்கும் கண்ணாடிக் கதவையும், அக் கதவை உடைய இரகசிய அறைக் குள்ளிருந்து வெளியே தெரியும் மின்சார விளக்கொளியையும் கண்டு ஆச்சரியப் பட்டாள்! ஏனென்றால், அச் சிற்பக் கூடத்தின் சுவர் களுக்குள் இரகசிய அறைகளிருக்கும் மர்மம் முதலியாருக்கும், குலாம் காதருக்கும் தவிர, அதுவரையில் வேறு எவருக்குமே தெரியாமல் மறைத்து வைக்கப்பட்டிருந்தது.

அந்த இரகசிய அறைக்குள் நுழைந்த காந்தாமணி, முதல் வேலையாக அக் கண்ணாடிக் கதவை அடைத்துக் கொண்டாள். எனவே, அவளுக்குப் பின்னால் அங்கு வந்த காஜாவுக்கும், கதிஜாவுக்கும் அச் சிற்பக் கலைக் கூடத்தில் புதிதான கண்டுபிடிப்பு எதுவும் கிடைக்கவில்லை. எனினும், அவர்களுக்கு முன்பு ஒருவர் பின் ஒருவராக அங்கு வந்த கருணாகரனும், காந்தாமணியும் எப்படி மாயமாக மறைந்தனர் என்ற சந்தேகம் மட்டும் அவர்கள் உள்ளத்தின் உள்ளே அழிக்க முடியாத ஆழத்தில் ஒரு பெரிய கேள்விக் குறியாகப் பதிந்து இருந்தது.

கருணாகரனைத் தேடிக்கொண்டு அங்கு வந்ததாகக் காஜாவும், காந்தாமணியைத் தேடிக்கொண்டு அங்கு வந்ததாகக் கதிஜாவும் ஒருவருக்கொருவர் வெளிப்படையாகச் சொல்லிக்கொண்டு சற்று நேரம் அங்கேயே நின்று பேசிக் கொண்டிருந்தனர்.

“தங்கள் தந்தை, பெண் கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றிப் பிரமாதமாகப் பேசி விட்டாரே! இவ்வளவு நேர்த்தியாகப் பிரசங்கம் செய்வாரென்று நான் எதிர்பார்க்கவே இல்லை!!” என்றான் காஜா.

“அவர் அகராதியில், ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரே அருத்தந்தான்! ஏனென்றால், அவருக்கு ஒரு ஆண் குழந்தைகூட இல்லையல்லவா?” என்றாள் கதிஜா.

“இருந்தால்க்கூட என்ன? அவர் இரண்டையும் சமமாகவே பாவிப்பார்! சொத்தில்கூடச் சரி பங்கு எழுதி வைப்பார்!! அப்படித்தான் செய்ய வேண்டுமென்பதற்கு ஆணித்தரமான ஆதாரங்களை ஆயிரக்

கணக்கில் எடுத்துக் காட்டிப் பேசினுரே !!!" என்று கதிஜாவிடம் பேசிக் கொண்டே அவன் கவனத்தை எங்கெங்கோ செலுத்திக் கொண்டிருக்கிருன்.

"அப்படியா பேசினுர்? எங்கே, அவர் பேசிய ஆணித்தரமான ஆதாரங்களில் ஒன்றைச் சொல்லுங்கள் பார்க்கலாம்!" என்ருள் கதிஜா.

"ஒன்றென்ன! ஓராயிரம் சொன்னுரே!! நீங்கள் கேட்கவில்லையா?" என்று கூறிவிட்டு அங்கிருந்து எங்கோ மெதுவாய் நகர்ந்தான் காஜா.

"நான் அவரிடம் கேட்காததால்தானே உங்களிடம் கேட்கிறேன்! அந்த ஓராயிரத்தில் ஒன்றையேனும் சொல்லுங்களேன்!!" எனக் கேட்டுக் கொண்டே அவனைத் தொடர்ந்தாள்.

"ஒன்ரு .....? எவ்வளவோ சொல்லலாமே!" என்ருன் காஜா. அப்போது, அவனெதிரில் சற்று தூரத்தில் உள்ள நிலைக்கண்ணுடிகளுக்கு இடையிலே ஏதோ ஒரு சிறிய வெளிச்சம் மின்னல் போல் தோன்றி மறையக் கண்டு உடனே அந்த இடத்தை நோக்கிச் சரேலெனச் சென்ருன்.

" 'எவ்வளவோ...' என்று ஏமாற்றிவிட்டு எங்கே ஓடப் பார்க்கிறீர்கள்? அந்த, 'எவ்வளவோ' என்பதில் ஒன்றையாவது உருப்படியாகச் சொல்லுங்கள் பார்க்கலாம்!" என்று பேசும் போக்கிலேயே கதிஜாவும், காஜாவைத் தொடர்ந்து சரேலெனச் சென்ருள்.

உண்மையில், கதிஜாவின் கவனமும் வேறு எதை எதையோ கவர்ந்து கொண்டிருக்கிறது. அவள் காஜா

வோடு பேசுவதுகூட இன்னதென்று அவளே அறிய வில்லைதான்! அதனுல்தான், காஜா அவளை நோக்கித் திடீரென்று, "நீங்கள் என்னை என்ன சொல்லச் சொல்கிறீர்கள் ?" என்று திருப்பிக் கேட்கவும், அவள் அவனோடு எதைப்பற்றிப் பேசிக் கொண்டு வந்தோம் என்பதைக்கூட மறந்துவிட்டுத் தன் தலையைச் சொறிந்து கொண்டு, கண்களை இறுக்கி மூடிச் சிந்திக்கலானுள்!

மறுவினுடி, அவள் தன் கண்களைத் திறந்து பார்க்கும்போது, அவளுக்கு ஏற்பட்ட வியப்பினுல் அவளுடைய க்ண்கள் கிழிந்து போகுமோ என்று அஞ்சத் தக்க அளவுக்கு அகலமாய் விரிந்தன! காரணம், அவளருகில் நின்றுகொண்டிருந்த காஜாவும் மாயமாய் மறைந்து விட்டான்!!

காஜா மறைந்த மர்மத்தைக் கண்டு பிடிக்கக் கதிஜா வுக்கு அதிக நேரமாகவில்லை! சற்று முன்பு காஜாவின் பார்வையில் பட்டு மறைந்த அதே போன்ற வெளிச்சம் அவள் எதிரிலுள்ள ஒரு பெரிய நிலைக் கண்ணுடியில் தோன்றி மறைந்ததைக் கண்டாள்! உடனே பின்பக்கம் திரும்பிச் சற்று முயற்சி செய்து ஒரு நிலைக் கண்ணுடிக் கதவைத் திறந்துவிட்டாள். உள்ளே காஜா இருப்பான் என்று எதிர்பார்த்தாள்! ஆனுல், அவள் எதிர்பாராத விதமாய்க் காந்தாமணியே அங்கு இருக்கக் கண்டாள்!!

கதிஜாவைக் கண்ட காந்தாமணி "அக்காள்!" என்று அலறிப் பாய்ந்து, கட்டிப் பிடித்துக் கொண்டு கண்ணீர் சொட்டினுள்! "காரணம் என்ன?" என்று வியப்புடனும், பரிவுடனும் வினவினுள் கதிஜா. அதற் கவள், "முதலில் இந்த அறையை விட்டு வெளியேற

வேண்டும்" என்று கூறிக் கதிஜாவோடு வெளியில் வந்து நிலைக் கண்ணாடிக் கதவை அடைத்துவிட்டு, "அக்காள், நீங்கள் வந்து இக்கதவைத் திறந்து என்னைக் காப்பாற்றி இருக்காவிட்டால், நான் வெளியே வரும் வழியே தெரியாமல், சுழல் படிக்கட்டுகளில் ஏறிச் சுழன்று சுழன்றும், அறை யறையாய் அலைந்து அலைந்தும் சாக வேண்டியதுதான் !" என்றாள்.

"அப்படியா...? ஆஹா ! நீ யேன் இங்கு வந்தாய்? எப்படி இந்த அறைக்குள் நுழைந்தாய்? எங்கே கருணாகரன்?" என்று மளமளவெனக் கேட்டாள் கதிஜா.

"அவரைத் தேடிக் கொண்டுதான் இங்கு வந்தேன்! எப்படியோ திறந்திருந்த ஒரு அறைக்குள் நுழைந்து விட்டேன் !! அங்கிருந்து சுழல் படிக்கட்டுகளில் ஏறிக் கருணாவைத் தேடினேன்!!! எங்கு தேடியும் கருணாவைக் காணோம். எனக்கோ, களைப்பு உண்டாகிவிட்டது. நான் வெளியே வர முயற்சித்தேன். எல்லா அறைகளும் ஒன்று போலவே இருக்கின்றன. வழியே தெரியவில்லை. பயத்தினாலும், களைப்பினாலும் உயிரே போய்விடும் போலிருந்த சமயந்தான் நீங்கள் என்னைக் காப்பாற்றினீர்கள் அக்காள்" என்று கூறினாள் காந்தாமணி.

"சரி சரி. மற்றவைகளைப் பிறகு பேசிக் கொள்ளலாம் ! கூட்டம் முடியக் கூடிய நேரமாகி விட்டது !! நாமாவது அங்கு போயிருக்கலாம் வா !!!" என்று காந்தாமணியை அழைத்துக்கொண்டு கதிஜா, கூட்டத்திற்கு வந்து சேர்ந்தாள்.

அவர்கள் அங்கு வந்த சிறிது நேரத்திற் கெல்லாம் முதலியாரின் முடிவுரையும் முடிந்தது. உடனே

கதிஜா எழுந்து எல்லோருக்கும் நன்றி யறிதலைத் தெரிவித்துக் கொண்டாள். பிறகு, காந்தாமணி எழுந்து எல்லோருக்கும் வந்தனோபசாரம் கூறியதும், கூட்டம் கலைந்து சென்றது.

அப்பால், கனகசபாபதி முதலியார் தன் இரு கண்மணிகளையும் முறையே, "கதிஜா—காந்தா!" என்று அன்போடு அழைத்து, "உங்கள் இருவரின் வெற்றி விழாவைப் பாராட்டி மகிழ உங்களைப் பெற்ற அன்னை இன்று உயிரோடு இல்லாவிட்டாலும், வெண் கலச் சிலையாக உள்ளாள் வாருங்கள் காட்டுகிறேன்" என்று அழைத்துக் கொண்டு சென்றார்.

குலாம், முதலியாரின் குறிப்பறிந்து, அவருக்கு முன்னால் ஓடோடியும் போய் அந்த இரகசிய அறையைத் திறந்து வைத்தார்.

இரு மருங்கிலும் தனது இரு பெண் மக்களும் சூழக் கனகசபாபதி முதலியார் வந்து அவ்வறைக்குள் நுழைந்தார். அப்போதுதான் போடப்பட்ட ரோஜா மலர் மாலையை அணிந்துள்ள வெண்கலத் தாயைக் கண்டு வியப்புற்றனர் கதிஜாவும், காந்தாவும்.

"இதுதானப்பா எங்கள் அம்மா? இந்த உருவத்தை இவ்வளவு காலமாய் எங்களுக்குக் காட்டாமல், ஏனப்பா இப்படி மறைத்து வைத்திருந்தீர்கள்?" என்று மிக்க உருக்கத்தோடு கேட்டாள் காந்தாமணி.

அப்போது, முதலியார் நிஷ்டையில் இருப்பவர் போல் நின்றார்! அவர் கண்களில் இருந்து கண்ணீர் வெள்ளம் பெருகிக் கொண்டிருந்தது.

குலாம், காந்தாமணியின் வாயை மூடிக் கொள்ளு மாறு சமிக்கை செய்து காட்டினர். கதிஜா அந்த வெண்கலச் சிலையைக் கூர்ந்து நோக்கும்போது, அதன் வலக் கரத்தின் விரல்களிடையே சொருகி வைக்கப்பட்டிருந்த ஒரு கடிதத்தைக் கண்டாள். உடனே, மெது வாய் அதை உருவி எடுத்து, விரித்துப் பார்த்தாள்; பிறகு, எல்லோரும் அறியும் வண்ணம் உரக்கச் சப்தம் போட்டுப் படித்தாள்: "நாம் இருவ ரல்ல! நாம் நால்வர்!! நாமடைந்த வெற்றி, நால்வரின் வெற்றி!!!"

கதிஜாவின் உரத்த குரல் கேட்டுத் திடுக்கிட்டுக் கண்விழித்து நிஷ்டை கலைந்த கனகசபாபதி முதலியார், தன் இரு புத்திரிகளையும் அழைத்துக்கொண்டு உடனே அங்கிருந்து போய்விட்டார். பிறகு, மீண்டும் அச் சிற்பக் கலைக் கூடம் முழுவதும் முன்போலவே மூடி விடப்பட்டது.

---

5. காதல் கொள்ளை!

“ அற்றீ பூத்த ஆலுங்கா டப்பருக்கு
நெற்றிக் கண்ணென்று நெருப்பு—அது
பற்றிடுமென்றே கங்கை பதியிருந்தாளம்மானே ”

என்று முணங்கிக்கொண்டே கனக சபாபதி முதலியார் தனது இரும்புப் பெட்டியைத் திறந்து, இருட்டைப் பகலாக்கும் வைரக் கற்களையும், நவரத்தின மணிகளை யும் பார்த்துப் பூரிப்படைந்து கொண்டிருக்கும் நள் ளிரவு நேரத்திலே யாரோ, எங்கிருந்தோ திடீரென அங்கு ஓடிவரும் காலடிச் சப்தத்தைக் கேட்டுத் திடுக் கிட்டுப் படீரென இரும்புப் பெட்டிக் கதவை அடைத்து விட்டுக் கைத்துப்பாக்கியைக் கையில் எடுத்துக்கொண்டு எச்சரிக்கையாக இருந்து கொண்டார் முதலியார்.

இரகசியப் பாதை வழியாக அப்படி மிகப் பரபரப் புடன் அங்கு ஓடிவந்த குலாம், தன் வாய் குளற முதலியாரை நோக்கி, “ ஆபத்து... ஆபத்து... ஆபத்து! அந்த வெண்கலச் சிங்கம் இருக்கும் இரகசிய அறை யின் மேல்த் தளத்தில் யாரோ, எப்படியோ வந்து புகுந்துள்ளனர் !!” என்றார்.

அதைக் கேட்டதும், அணுக்குண்டு விழுந்த ஹிரோஷிமா மக்களின் மனதைப்போல், பொசுங்கிய உள்ளத்தினராய் மாறிய முதலியார் குலாமை நோக்கி, “ போலிச் சிங்கம் இருக்கும் அறையிலா, உண்மை சிங்கம் இருக்கும் அறையிலா ?” என்று, அவரையும்

அறியாமல் அவர் வாய் உளறிவிட்டது. அதைக் கேட்டு ஆச்சரியப்பட்ட குலாம், "அதிலும், இரண்டு வெண்கலச் சிங்கங்கள் உண்டா?" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டார்.

"ஆமாங்காணும். ஒன்று சொர்க்க அறையிலும், மற்றொன்று நரக அறையிலும் இருப்பது உமக்குத் தெரியாதா?" என்று மிகக் கடுகடுப்பாய்க் கேட்டார் முதலியார். அதற்குக் குலாம், "அன்னியரின் நடமாட்டங்களின் ஓசை நடுத் தளத்தில்த்தான் கேட்டது" என்றார்.

"ஆமாமாம். அங்கிருந்துதானே உமக்குக் கேட்டிருக்கக் கூடும்! நரக அறையில் நடமாட்டம் இருந்தாலும், நாயனே இருந்தாலும், அந்த ஓசையை உம்மால் எப்படி கேட்க முடியும்? சரிசரி. நீர் நேரே சொர்க்க அறைக்குப் போய் அங்கே நடப்பதைக் கவனியும். நான் நரக அறையைப் போய்ப் பார்த்து விட்டு அங்கே வருகிறேன்" என்று கூறி முதலியார், குலாம் காதரை அவர் வந்த வழியே திருப்பி அனுப்பி விட்டு, இரும்புப் பெட்டியைப் பொருத்தி அமைத்திருக்கும் சுவரில் உள்ள எஃகுத் தகட்டுக் கதவைத் திறந்துகொண்டு, அதற்குள் நுழைந்து தானும் மறைந்துவிட்டார்.

அப்படி மறைந்த அம் முதலியார், வெகு நேரத்திற்குப் பிறகு, காந்தாமணியின் படுக்கை அறையிலுள்ள சுவரில் பொருத்தப் பட்டுள்ள நிலைக் கண்ணாடிக் கதவைத் திறந்துகொண்டு அங்கு தோன்றினார். அவர்

எதிர்பார்த்தபடியே அங்குள்ள படுக்கையில் காந்தா மணி படுத்துத் தூங்கிக்கொண்டு இருக்கவில்லைதான்!

அடுத்தபடியாக, அதற்குப் பக்கத்திலுள்ள கதிஜா வின் படுக்கை அறையைப் போய்ப் பார்த்தார். அங்குள்ள படுக்கையில் கதிஜாவும் இல்லை என்று கண்டார்! உடனே, தன் இரும்புப் பெட்டி இருக்கும் அறையை நோக்கித் திரும்பினர்; அதன் அருகிலுள்ள கதிஜாவின் தொழுகை அறையில் கதிஜா, நபியைப் போல் நடு நிசித் தொழுகையைத் தொழுது கொண்டு இருப்பதை ஜன்னல் வழியே தெரியும் மங்கலான மின்சார விளக் ஒகொளியில் கண்டு ஆச்சரியப்பட்டு அப்படியே அசர்ந்து நின்றுவிட்டார் முதலியார்!!

கதிஜா தன் கரங்களை உயர்த்தி மார்பகத்தில் மடக்கிக் கட்டிக்கொண்டு, முதலியார் நிற்கும் மேற்குத் திசையை நோக்கிய வண்ணம் தொழுகைப் பாய் மீது நின்று கொண்டிருந்தாள். அவள் கண்கள் அரைவாசி மூடித் திறந்திருந்தன. அவள் வாய் அரபி மொழியில் எதையோ முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

முதலியார், தனக்கு நேரே அவள் குனியப் போவ தையும், பிறகு அவள் மண்டியிட்டுத் தன் நெற்றியைப் பாயில் வைத்துக் கொண்டு முகங்குப்புற விழுந்து கிடக்கப் போவதையும் பார்க்க விரும்பியவராய் அங்கேயே நின்று கொண்டிருந்தார்.

வெகு நேரமாகியும், அவள், அவர் எதிர்பார்த்தபடி எதுவும் செய்யாமல் நின்று கொண்டேதான் இருந்தாள்! முதலியார் முகக்குறி மாறியது!! அவர் மனதிற்குள் ஏதோ சந்தேகம் உதிக்கத் தொடங்கியது!!!

அப்போது, கதிஜாவின் முகக்குறியும் மாறியது; அவள் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது! அதைக் கண்ட முதலியார், வேத புராணங்களில் கூறப்படும் கொடூரமான நரகலோகத்தின் கோரக் காட்சிகளை எல்லாம் ஒருங்கே திரட்டிக் கண்ணுக்கு நேரே காண்பவர் போல் பயந்து கதிகலங்கியவராய் அங்கிருந்து அகன்று விட்டார்!!

"ஆகா! மீண்டும், அதே அற்புதம்!! நரகத்தில் நாயனைக் கண்ட நம் தந்தையைப்போல், கதிகலங்கியவராய் நடுநடுங்கிக் கொண்டே சென்று விட்டாரே முதலியார்!!!" எனக் கூறிய வண்ணம் கதிஜாவின் முதுகிற்குப் பின்னாலே நின்று கொண்டிருந்த காஜா, அவள் புயங்களைப் பிடித்துத் தனக்கு நேரே திருப்பிக் கொண்டு, அவள் முகத்தைப் பார்த்தான். உடனே அவள், அவன் உதடுகளில் தன் விரலை வைத்து அழுத்தி, "உஸ்...! சப்தம் போடாதீர்கள்!!" என்றாள்.

சற்று நேரம் மௌனமாக அவள் அருகிலேயே நின்றான்காஜா. பிறகு, அவளை நோக்கி, "அம் முதலியார் ஏன் உன் கண்ணீரைக் கண்டு அப்படிப் பயப்பட வேண்டும்?" என்று மெதுவாய்க் கேட்டான்.

"என் கண்ணீர் துளிகளைக் கண்டு என் தந்தை பயந்து நடுங்கக் கூடியவராய இல்லாதிருந்தால், இந் நேரம் என் கதி என்னாகி இருக்கும்?" என்று அவனையே திருப்பிக் கேட்டாள் கதிஜா.

"ஆம். அல்லாஹ்வைத் தொழுவது போல் நின்று, என்னை உன் முதுகிற்குப் பின்னால் வைத்து மறைத்தும்,

கண்ணீர் வடித்து அழுவது போல் நடித்து அம் முதலியாரைத் துரத்தியும் இருக்காவிட்டால், நம் இருவரின் மானமும் இந் நேரம் மலை மேல் கொளுத்திய நெருப்பு போலாகி இருக்கும்! நல்ல வேளையாக மதத் திரை நம் மானத்தைக் காப்பாற்றிவிட்டது!! ஆனால், அந்தத் திரை மறைவில் அநேக அயோக்கியர்களும் ஒளிந்து கொள்கிறார்களே என்பதுதான் என் கவலை!!! சரி. அது எப்படியோ போகட்டும். உன் பதில் என் கேள்விக்கு உரிய கருத்தில் தெளிவை ஏற்படுத்தவில்லையே?" என்றான் காஜா.

அதற்கவள், "என் கண்ணீரைக் கண்டால் அவர் பயப்படுகிறார் என்பது மட்டுந்தானே எனக்குத் தெரியும்! ஏன் பயப்படுகிறார் என்பது எனக்கும் தெரியாததுதானே!!" என்றாள்.

"எல்லாம் ஒரே மர்ம மயமாகவே இருக்குமானால், நாம் எந்தத் துப்பைக் கொண்டுதான் துலக்கம் பெறுவது?" என்று கதிஜாவிடம் கூறி மனஞ் சலித்துக் கொண்டான் காஜா.

"இதற்குள்ளாக இப்படிச் சலிப்படைந்து விடுவதானால், நீங்கள் இதில் தலையிடாமலே இருந்திருக்கலாமே? நீங்களாகவே வந்து இதில் வலியத் தலையிட்டீர்கள்! அதை நானாகத் தெரிந்துகொண்டு உங்களுக்கு உதவி செய்யலாமே என்று உங்களைப் பின் தொடர்ந்தேன்! நீங்கள் என்னையும் ஏமாற்றிவிட்டு அந்தச் சிற்பக் கலைக் கூடத்தில் எங்கோ மறைந்தீர்கள்! நான், எனக் கென்ன என்று திரும்பிவிட்டேன்! பிறகு, நடு நிசியில் எங்கிருந்தோ வந்து என் படுக்கை அறைக்குள்

நுழைந்தீர்கள்! நான் பயந்தேனு? இல்லை. எனக்குத் தான் தெரிந்து விட்டதே, இந்த மாளிகை முழுவதுமே மர்ம வழிகளை உடைய நரகலோகமாக இருக்கிற தென்று! அப்பால், காந்தாமணியின் படுக்கை அறையைக் காட்டச் சொன்னீர்கள்! ஏனென்று கூடக் கேட்காமல், உடனே கூட்டிக்கொண்டு போய்க் காட்டினேன்! அங்கு காந்தாமணியைக் காணேம்! திடீரென்று கண்ணுடிக் கதவைத் திறந்து கொண்டு கள்வனைப் போல் வந்த என் அப்பாவைக் கண்டோம்! அவரறியாமல் இங்கு வந்து தொழுகை நாடகமும், அழுகை நாடகமும் நடத்தி அவரிடமிருந்து தப்பித்தோம்! இதற்கு மேல் நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள் செய்கிறேன்! இனி மேல்ச் சொல்வதற்கோ, செய்வதற்கோ ஒன்று மில்லை என்ருல், வெளியே போகும் வழியை காட்டுகிறேன் உங்கள் வீட்டுக்குப் போய்ச் சேருங்கள்!" என்று மூச்சுவிடாமல் மளமளவெனப் பேசி முடித்து விட்டாள் கதிஜா.

அவள் பேச்சு முழுவதையும், அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த காஜாவின் உள்ளத்தைப் போலவே உடலும் களைத்திருப்பதைக் கண்ட கதிஜா, அவனுடைய களைப்புத் தீரும்படி கொஞ்சம் பேரீச்சம் பழங்களும், திராட்சைச் சாறும் கொண்டு வந்து கொடுத்துப் புசிக்குமாறு கேட்டுக் கொண்டாள்.

காஜா, பேரீச்சம் பழங்களை மிகப் பிரியமாகச் சாப்பிட்டுவிட்டுப் புட்டியிலுள்ள திராட்சைச்சாற்றைக் கதிஜாவிடம் சுட்டிக் காட்டி, இது நம் மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட பானந்தானு?" என்று கேட்டான்.

“ஏனில்லை? ‘யுஸ் கௌன மிர்ரஹீக்கிம் மக்தூமி. கித்தா முஹூ மிஸ்குன் வஃபீ தாலிக்க ஃபல் எதனு ஃபஷில் முதனு ஃபிஷூன்.’ என்று அல்லாஹ்வே குர்-ஆன் 83: 25, 26-வது வசனங்களின் மூலம் கூறி இருக்கின்றானே!” என்றாள் கதிஜா.

“அதற்கு என்ன அருத்தம்?” என்று கேட்டான், காஜாமுஹைஹதீன்.

“முத்திரை இடப் பட்டிருக்கும் கலப்பற்ற திராட்சைச் சாறு அவர்களுக்குப் புகட்டப்படும். அது கஸ்தூரியால் முத்திரை இடப் பட்டிருக்கும்; அபிலாஷைக் கொள்ள விரும்புவோர் அதனையே அபிலாஷிக்கவும்” என்றாள் கதிஜா.

“யாருக்கு? எங்கே புகட்டப்படும்?” என்று கேட்டான் காஜா முஹைஹதீன்.

“இன்பம் நிறைந்த சுவனபதியில் சுகவாசிகளாய் இருக்கும் நல்லோருக்குப் புகட்டப்படும் பானம் இது!” என்றாள் கதிஜா.

“அது எப்படி இதுவாகும்? இது எப்படி அதுவாகும்?” என்று கேட்டான் காஜாமுஹைஹதீன்.

அதற்குக் கதிஜா, ‘வ மன் கான ஃபி ஹாதிஹி அய்மா, ஃபஹூவ ஃபில் ஆகிரத்தி அய்மா’ என்றால், என்ன அருத்தம் தெரியுமா? ‘எவர்கள் இம்மையில் குருடர்களாகி விட்டார்களோ, அவர்கள் மறுமையிலும் குருடர்களே!’” என்று கூறிக் கொண்டே அந்தப் புட்டியிலுள்ள திராட்சைச் சாற்றை எடுத்துக் காஜாவின் வாயில்

ஊற்றிக் குடிக்கச் செய்து விட்டு, மிஞ்சியதைத் தானும் நன்ருகக் குடித்துக் கொண்டாள்.

இரவு முழுவதுமே விழித்துக் கொண்டிருந்த களைப்பு இருவருக்குமேதான் இருந்தது. அத்தோடு, சிற்பக்கலைக் கூடத்திலுள்ள மர்ம அறைகளின் படிக் கட்டுகளிலே ஏறி இறங்கிச் சுழன்று சுழன்று கருணு கரனைத் தேடியும் கண்டுபிடிக்க முடியாமல் போன சோர்வும் காஜாவுக்கு அதிகமாக இருந்தது.

திராட்சைச் சாற்றைக் குடித்த பிறகு, அவர்க ளுக்குச் சற்று வெறி ஏற்பட்டது! எனினும், அவர்கள் களைப்பும், சோர்வும் தீர்ந்து இருவருமே புதிய ஊக்க மும், உற்சாகமும் அடைந்தனர்!! அப்பால், ஒருவருக் கொருவர் மனதுவிட்டுக் கள்ளம் கபடு இல்லாமல் உரையாடவும், உளவறியவும் தொடங்கினர்!!!

"மிஸ்டர் காஜா! நான், என் மனதில் மறைத்து வைத்திருந்ததைச் சொல்கிறேன் கேளுங்கள்: 'நரகத்தில் நாயன்......' என்ற சொல் உங்கள் வாயிலிருந்து வந்த அன்றே உங்கள்மீது எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது! நீங்கள் அதைப்பற்றி எவ்வளவுதான் 'ஆதம்—ஷைத் தான்' கதைகளைச் சொல்லி மறைத்துவிடப் பார்த் தாலும், என்னிடம் அதை மறைத்துவிட உங்களால் முடியவே முடியாது!! ஏனென்ருல், என் தந்தையாகிய கனகசபாபதி முதலியாரிருக்கிருரே, அவர் என்னுடைய கண்ணீர் வடியும் முகத்தை, அவருடைய நரக அறையில் இருக்கும் நாயனுடைய முகத்திற்கு ஒப் பிட்டுத்தான் அப்படிப் பயப்படுகிருர் என்பது எனக்குத் தெரியும்!!! ஆதலால், உங்களுக்கு எப்படி அந்த

இரகசியம் தெரிந்தது என்பதை என்னிடம் ஒளிக்காமல் சொன்னால், நான் எனக்குத் தெரிந்த இரகசியங்களை எல்லாம் உங்களிடம் ஒளிக்காமல் சொல்லிவிடுவேன்" என்று தெள்ளத் தெளிய கூறினாள் திராட்சை ரசப் போதையில் இருக்கும் கதிஜா.

அதைக் கேட்ட காஜா, "ஆம். கதிஜா, இப்போது தான் எனக்கும், உன்னிடம் என் உள்ளத்தைத் திறந்து காட்டிவிட வேண்டும் என்ற நல்லெண்ணம் உதயமாகி இருக்கிறது! எல்லாம் இந்தத் திராட்சைச் சாற்றின் மகிமையேதான்!! எதுவுமே அளவுக்கு அதிகமானால் கெடுதல்த்தான்; மதுவும் அளவோடு அருந்தினால் நன்மையேதான்!!! அதனால்தான் நம் அல்லாஹ்வும் குர்-ஆன் 2-ம் அத்தியாயம் 219-வது வசனத்தின் மூலம் நபியை நோக்கிக் கூறி இருக்கிறான்: 'சாராயத்தைப் பற்றியும், சூதாட்டத்தைப் பற்றியும் உம்மிடம் கேட்கின்றனர். நீர் கூறும், அவ்விரண்டிலும் பெரும் பாபங்களும் இருந்தாலும், மனிதர் களுக்குச் சில பிரயோசனங்களும் இருக்கின்றன. ஆனால், அவை களில் உள்ள பாபம், அவைகளில் உள்ள பிரயோசனத்தைவிட மிகப்பெரிது!' என்று. எனினும், அது என்ன பாபமென்று விவரிக்கவே இல்லை. அந்தப் பாபப் பூச்சாண்டிக்குப் பயந்து அதிலுள்ள பிரயோசனத்தை இழந்துவிடக் கூடாது என்ற எண்ணத்தாலோ என்னவோ, உமர் கய்யாம் போன்ற பெரிய பெரிய மகான்கள் எல்லாம் மதுக் கிண்ணங்களும், மங்கையர் கன்னங்களும் தங்கள் உதடுகளை விட்டு எந்நேரமும் நீங்கா வண்ணம் கண்ணும் கருத்துமாய்க் காத்து வந்திருக்கின்றனர் போலும்! இப்போது, நாம் மட்டுமென்ன! அதற்கு

எப்படி விதிவிலக்காவோப்?" எனக் குளறிக் குழைந்து கதிஜாவோடு கொஞ்சிக் குலாவ ஆரம்பித்தான்.

நட்சத்திரங்களைப் போல் மின்னும் கதிஜாவின் கண்களிலும் காதல் போதைக் குரிய குறிப்புகளே தோன்றலாயின. நாணத்தால் அவள் கன்னங்களும் சிவந்தன; செவ்விதழ்களும் இன்பத்தை நுகரவே துடித்தன. என்றாலும், அச்சத்தினால் பாதிக்கப்பட்ட அவள், தன் நெஞ்சத்தின் குமுறலையே வாய் திறந்து கக்கினாள் :—

"காஜா! காதலெனும் கடலைக் கடந்தவர் யார்? நமது நபி நாயகமே அக்கடலுள் ஆழ்ந்து மூழ்கியவர் தான் என்பதை அல்லாஹ்வே திருக் குர்-ஆன் 33–ம் அத்தியாயம் 52-வது வசனத்தின் மூலம்: '(நபியே! இப்போதிருக்கும் உம்முடைய மனைவிகளுக்குப்) பின்னர், வேறு யாதொரு பெண்ணும் உமக்கு ஆகுமானதல்ல. அன்றி, யாதொரு பெண்ணின் அழகு உம்மை ஆச்சரியப்படுத்திய போதிலும், உம்முடைய மனைவிகளில் எவளையும் நீக்கி, அதற்குப் பதிலாக அவளை எடுத்துக் கொள்வதும் உமக்கு ஆகுமானதன்று. ஆயினும், உமது வலக்கரம் சொந்தமாக்கிக் கொள்ளும் (வைப் பாட்டி யாயின், அப்) பெண் அவ்வாறன்று. (அவள் உமக்கு ஆகுமானவளே)......' என்று விசேஷ அனுமதி கொடுத்து அவர் ஆசைதீர அநுபவிக்கும்படி செய்திருக்கும்போது, நம் மாசற்ற காதலுக்கு மத்தியிலே மாபெரும் மலையாக இருப்பது எது? என் இன்ப வாழ்வின் பாதையிலே எனக்கு இடையூறளிக்கும் முட்காடாய் முளைத் திருப்பது எது? அன்புத் தாயை அறியாமல், அருமைத் தந்தையைப் புரியாமல், அந்தரங்கத்தில் அனாதையாயும், பகிரங்கத்தில் ஒரு பணக்கார முதலியாரின் மகளாயும்

பாசாங்காய் பலகாலம் வாழ வைத்திருப்பது எது? எல்லாம் அந்த 'நரகத்தில் நாயன்...!' எனும் ஒரே ஒரு இரகசியத்தைத் தவிர வேறெதுவும் உண்டா? சொல்லுங்கள்!'' என்ருள்.

அக் குமுறலைக் கூர்ந்து கேட்ட காஜாவின் உள்ளத்தில் வெடிப்பு விழும் உணர்ச்சி ஏற்பட்டது போன்ற அதிர்ச்சி அடைந்தான்! அவளுடைய கண்ணீர் துளிகள், அணுக்குண்டுகள்போல் மாறி அவனுடைய எஃகு இதயத்தைத் தாக்கிற்று!! அதனுல் அவன் மறைத்து வைத்திருந்த ஒரே ஒரு சிறு இரகசியக் குறிப்பையும் கதிஜாவிடம் இழந்துவிட வேண்டியவன் போலானுன்!!!

எனவே, வில் போல் வளைந்த புருவங்களை உடைய கதிஜாவின் கடைக்கண் பார்வையால் கட்டளை இடும் முன்பே, அவள் குறிப்பறிந்து நடக்கும் சிற்ருளைப் போல் அவள் கரங்களைப் பற்றிய வண்ணம், "சரி. நீயும் என் கூடவே வா, எப்படியும் விடிவதற்குள் அந்த நரக அறையைத் தேடிக் கண்டு பிடித்து விடலாம்!'' என்ருன்.

அதற்கவள், உடனே அவன் கூடப் புறப்பட்டுப் போகாமல், "இந்த மர்ம மாளிகைக் குள்ளே ஒரு நரக அறை இருப்பது உங்களுக்கு எப்படித் தெரியும்'' என்று கேட்டாள்.

அதைக் கேட்ட காஜா பதிலளிப்பதற்கு மீண்டும் சற்றே தயங்கினுன்! இந்தத் தடவை கதிஜா மீண்டும் தன் கண்ணீர் துளிகளையே கனத்த ஆயுதங்களாய்

உபயோகப் படுத்தவில்லை !! மற்றொரு புதிய ஆயுதத்தை வீசுவது போல், புன்னகை பூத்தாள்; புருவங்களைச் சாதுரியமாக உயர்த்தி நெளித்துச் சிமிட்டினாள்; அரை விழியால் அன்பு ததும்பப் பார்த்தாள்; கடைக்கண் நோக்கிலே காதலைத் தேக்கினாள்; மோக லாகிரியை முதிரச் செய்யும் தன் மாதுளை மலர் இதழ்களை மெது வாய் மடித்துச் சிங்கப் பல்லால் சிறிதே கடித்தாள் !!!

'செத்துவிடுவேன் உன் ஆசையால்; இனியொன் றும் செய்யாதே!' என்பது போல், உடனே வாய் திறந்தான் காஜா :—"கதிஜா! கருணாகரனின் தாயாரைப் பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா? சரி. உனக்குத் தெரிந்தாலும், தெரியாவிட்டாலும் பரவா இல்லை. அவள், இந்த ஊராருக்கு ஒரு அரைப் பயித்தியம்! ஞானப் பயித்தியங்களுக்குக் குரு !! கருணாகரனுக்குக் கடவுள்!!! எனக்குப் புரிந்துகொள்ள முடியாத ஒரு புதிர் !!!!

அவள் பகலிலே 'காபிர்' ஆக இருப்பாள்; இரவிலே முஸ்லிமாக நடிப்பாள்! நீயோ எந்நேரமும் முஸ்லிமேதான்; ஆனால், ஒரு முதலியாருடைய மகள்!! உங்கள் இருவருக்கும் இருக்கும் வேற்றுமைச் சூழ்நிலை கள் என் சிந்தனையைக் கவர்ந்தன. நான் பல தடவைகள் கருணாகரனோடும், அவன் இல்லாமல் தனியாகவும் சென்று அவளைப் பற்றிய வரலாற்றை அறிந்து கொள்ள முயன்றிருக்கிறேன்.

என் முயற்சி முழுவதும், அவளிடம் 'விழலுக் கிறைத்த நீர் பொல்' வீணாகத்தான் போயிற்று. ஆனால், ஒன்று! என்னைக் கண்டவுடன் அவள் என்ன

சொல்வாள் தெரியுமோ? அதுதான் அந்த 'நரகத்தில் நாயன்......!'

ஆமாம். என்னைக் கண்டாளே இல்லையோ, அவ்வளவுதான்: 'நரகத்தில் நாயனைக் கண்டு உன் தந்தை நடு நடுங்கிப் போகும் நாள் ஒன்று வரும்! அந்த நாளில்த்தான் என் கைகளில் இரத்தக் கறை படிந்திருக்கும்!! வெண்கலச் சிங்கத்திற்கு விடுதலை கொடுக்கும் நாளும் அதுதான்!!!' என்று முகட்டைப் பார்த்துக் கொண்டு முழங்குவாள்.

நான் எப்போது போனாலும், எப்படிப் போனாலும் அவள் அப்படித்தான் முழங்குவாள்! அதைத் தவிர, வேறொன்றுமே சொல்லமாட்டாள்!! எனக்கோ, அதைக் கேட்டுக் கேட்டுச் சலித்துப் போய்விட்டது. அதன் பிறகுதான், அங்கு நான் அடிக்கடி போய் வருவதை நிறுத்திக் கொண்டு, இங்கு அதிகப் போக்கு வரத்து உடையவனாய் இருக்க வேண்டும் என்று எண்ணினேன்.

முதல் நாள் இங்கு வந்து உன்னைக் கண்டேன்; உன் கண்ணீர்த் துளிகளைக் கண்டு உன் தந்தை நடுங்கும் நடுக்கத்தையும் கண்டேன்! மறுநாள் கருணாகரனைக் கண்டபோது, இந்த மாளிகையில் உள்ள வெண்கலச் சிற்பக் கூடத்தில் ஒரு இரகசியமான வெண்கலச் சிங்கமும் இருக்கக் கூடும் என்று காந்தாமணி மூலம் அறிந்ததாகக் கேள்விப்பட்டேன்!! அந்த வெண்கலச் சிங்கத்தைக் கண்டுபிடிக்கும் பொறுப்பை அவனும், அந்த 'நரகத்தில் நாயனை' கண்டு பிடிக்கும் பொறுப்பை நானும் ஏற்றுக் கொண்டு, சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தோம்!!! பிறகு, இச் சந்தர்ப்பம் எப்படிக் கிடைத்

தது என்பதுதான் உனக்குத் தெரியுமே" என்று கூறி முடித்தான்.

குதூகலம் கொப்பளித்தது கதிஜாவின் மலர் முகத்தில்; கொண்டாட்டம் பொங்கி எழுந்தது அக் கன்னியின் அகத்தில்; ஆனந்தப் பூரிப்பால் துள்ளி விளையாடினுள் புள்ளி மானைப் போல்; அதே சமயம் ஆசையும் வெட்கமும் ஒன்று கலந்த கடைக்கண் பார்வையைக் காஜா மீது ஒரு கணம் செலுத்தினுள்; மறு கணம் அதையே அன்பு நிறைந்த—காதல் கனிந்த குறுநகை மிளிரும் குறும்புப் பார்வையாகவும் மாற்றினுள்.

என்ன செய்வான் இளங் காளையாகிய காஜா? எப்படி வெல்வான் அவள் இன்பக் காதல் விழிகளின் கணைகளை? இருவருமே புதுப் பருவ எழில் கொழிக்கும் புத்தம் புதுக் காந்தச் சிலைகளன்ருே? எனவே, ஒருவரை யொருவர் பார்த்தனர்—ஈர்த்தனர்—கவர்ந்தனர்—இறுகக் கட்டியணைந்தனர்—இனிய முத்த மாரிபொழிந்தனர்! இனி, என்றுமே இணைபிரியாத ஒருயிரும், ஒருடலும் போலவே ஆயினர்.

அந்நிலை குலையாது அப்படியே அவர்கள் ஆயுட் கால மெல்லாம் இருக்க வேண்டும் என்று எண்ணி இருப்பர்! ஆனுல், எவ்வளவு நாழிகை இருந்தனரோ? விடிவதற்கு வெகு நேரத்திற்கு முன்பே அவர்கள் வேருெரு வேலையிலும் ஈடுபடத் துணிந்தனர்.

இருவரும் ஒருவரை யொருவர் வாரி அணைத்த வண்ணமே தரையில் படுத்திருந்தனர். அத்தரையின் அடித் தளத்திலே எழும் அபயக் குரலையும், வேதனை தாங்காது யாரோ விடும் பெரு மூச்சையும் காது வைத்

துக் கவனித்துக் கேட்கும் முயற்சி உடையவர்களாய் இருந்தனர்.

“என்ன காஜா! சப்தம் கேட்கிறதா? இந்தத் தரைக்குக் கீழே உள்ள பாதாள அறைதான் அந்த நரக அறையாக இருக்க வேண்டும்!! இது என் தொழுகை அறை; எனவே, நான் ஒரு நாளைக்குக் குறைந்தது ஐந்துதடவைகளாவது இத் தரையில் என் காதை வைத்துக் கவனித்துக் கேட்டுக் கொண்டேதான் வருகிறேன் எனக்கு விபரம் தெரிந்த கால முதலாக!!!

ஆரம்பத்தில் இதை நான் அறிந்த போது, இது ஏதாவதொரு பிசாசின் செயலாக இருக்கலாமோ என்று எண்ணினேன். பிறகு, என் தந்தை இடம் இதைப் பற்றிக் கேட்ட போது, அவர் என் கன்னத்தில் ஓங்கிப் பயங்கரமான ஒரு அறை அறைந்து விட்டு, ‘இனிமேல், நீ இந்த அறையில் நடப்பதற்காக உன் பாதங்களையும், நாயனைத் தொழுவதற்காக உன் நெற்றியையும் தவிரக், காதுகளைத் தரையில் வைத்து அவன் குரல்களைக் கேட்பதற்காக உபயோகப்படுத்தக் கூடாது! என்று எச்சரிக்கை செய்தார். அச்சம்பவம் என் சிறு பிராயத்தில் நடந்தது. எனினும், அதை நான் என்றுமே மறக்க முடியாதபடி செய்து விட்டார். அப்பால், சில ஆண்டுகளுக்குப் பிறகு, அவர் என்னைக் காணும் போதெல்லாம் ‘நரகத்தில் நாயன் போடும் கூக்குரல் உன் செவிகளுக்கு எட்டாதிருக்கும்படி ஐந்து நேரமும் அல்லாஹ்வைத் தொழுது ‘துஆ’க் கேட்டுக் கொண்டு வாம்மா’ என்று கூறிடுவார்” எனச் சொல்லிக் கொண்டே வந்த கதிஜா, திடீரென்று தன் பேச்சை நிறுத்திவிட்டுச் சிறிது நேரம்

மிகவும் கூர்மையாகத் தனது காதைத் தீட்டிக் கொண்டவள் போல் கவனித்துக் கேட்கலானுள்.

பிறகு காஜா, கதிஜாவை நோக்கி: "என்ன கதிஜா! கவனித்தாயா? நீ சொல்கிறபடி பாதாள அறையிலிருந்து சப்தம் கேட்கிறதே ஒழிய, அது வேதனைக் குரலாக இல்லையே?" என்ருன்.

"ஆமாம். இன்றைக்கு எல்லாமே விந்தையாகத் தான் இருக்கிறது! நேற்று வரை வேதனைக் குரலாகவும், பெருமூச்சாகவும் கேட்டுக் கொண்டிருந்த அடித் தளத்தின் அபயக் குரலில், இன்றைக்குக் காதல் கீதம் கேட்கிறதே?" என்று கூறி ஆச்சரியப்பட்டாள் கதிஜா.

"நரகத்தில் உள்ள நாயனிடம், சொர்க்கத்தில் உள்ள முத்துப் பவளங்களாலான கூடாரங்களில் வசிக்கும் 'ஹூருல்ஈன்' எனும் கண்ணழகிகளாகிய அல்லாஹ்வின் கன்னிப் பெண்கள் வந்து எப்படிக் காதல் புரிந்து கொண்டிருக்கக் கூடும்?" என்று கேட்டான் காஜா.

அதற்குக் கதிஜா, "அதைப்பற்றிப் பரிகாசம் பண்ணிக் கொண்டிருக்க இது சமயமல்ல காஜா! இப்போதே, எப்படியாவது இந்தப் பாதாள அறைக்குப் போகும் வழியைத் தேடிக் கண்டு பிடித்தாக வேண்டும்!!" என்று கூறிக் கொண்டே துரிதமாக எழுந்தாள்.

"என்னது! உனக்கும், இந்தப் பாதாள அறைக்குப் போகும் பாதை தெரியாதா?" என்று மிக்கப் பரபரப்புடன் கேட்டுக் கொண்டே அவள் கூடவே எழுந்தான் காஜா.

"தெரியாது காஜா, தெரியாது! தெரிந்திருந்தால், என் பிரச்சினைகள் எப்போதோ தீர்ந்து போயிருக்

குமே!!" என்று கதிஜா கூறிக் கொண்டிருக்கும் போது, காஜா ஆழ்ந்த சிந்தனையில் ஒரு கணம் மூழ்கித் தெளிந்ததும், "ஆகா! அந்தப் பாதையாகத்தான் இருக்க வேண்டும்!! மர்ம அறைகளின் சுழல் படிக் கட்டுகளிலே சுற்றிச் சுற்றிப் பாதிச் சாமத்தைப் போக்கிய என் பிரயாசை வீண் போகவில்லை!!! வாவா போய்ப் பார்க்கலாம்" என்று கூறிக் கதிஜாவையும் அழைத்துக் கொண்டு போய்க் காந்தாமணியின் படுக்கை அறையை அடைந்து, அங்கே முதலியார் தோன்றிய இடத்திலுள்ள நிலைக்கண்ணாடிக் கதவைத் திறந்து கொண்டு சுவருக்குள் செல்லும் பாதையில் புகுந்தான்; கதிஜாவும் அவன் கூடவே புகுந்து போனாள்.

காஜா, தான் எதிர்பார்த்ததை விட வெகு சுலப மாகவே அப்பாதாள அறைக் குரிய பாதையைக் கண்டு பிடித்துக் கதிஜாவிடம் காட்டினான்.

இருவரும் அந்த அறையை அடைந்ததும், அங்கு கண்ட காட்சி அவர்களுக்கு முற்றிலும் ஏமாற்றத் தையே அளித்தது! நரக வேதனையை அநுபவித்துக் கொண்டிருக்கும் நாயனைக் காண வந்த அவர்கள் கண் ணெதிரிலே, சொர்க்க போகத்தைத் துய்த்துக் கொண் டிருக்கும் கருணாகரனையும், காந்தா மணியையும் கண்டனர்!!

கட்டிளங் காளையாகிய கருணாகரன் மடிமீது காந் தாமணி ஒரு சின்னஞ்சிறு காதல் மதுக் குளம் போல்க் கிடக்கிறாள். அம்மதுவை மண்டும் வண்டுபோல், விநாடிக்கு விநாடி அவள் மாதுளை மல ரிதழ்களில்

ஊறும் சாற்றை முத்து முத்தாய்க் குலாவிக் குடித்துக் கொண்டிருக்கிறுன் கருணுகரன்.

அன்பினுல் மலர்ந்த மதி முகம்; அதில் வான வில் போல் வளைந்த புருவங்கள்; தாமரைக் கண்கள்; மின்னும் நெற்றிக்கு அப்பால் கருமுகிற் கூந்தல்; அத்தனையும் சிங்காரச் சிகரமாய் உடைய பொன்னுர் மேனி; அம்மேனியில் யானையின் மத்தகங்கள் போன்ற தனங்கள்; அவை குலுங்கும் வண்ணம் குறுகிய இடை; இவ்வளவோடு இளமையின் பரிபூரணப் பொலிவும் பொங்கிக் காலை இரவியைப் போல் பிரகாசமாய்ச் ஜொலிக்கிறுள் காந்தாமணி.

இத்தகையாளை இரவு முழுவதும் கட்டியணைந்து முத்தமிட்டு, முத்தமிட்டு, முத்தமிட்டுக் களைத்துப் போன கருணுகரன், கவி பாரதியின் கவிதை ஒன்றை அவளிடம் கூறுகிறுன்:

"வட்டங்க ளிட்டுங் குளம் அகலாத
மணிப் பெருந் தெப்பத்தைப் போலே—உனை
விட்டு விட்டுப் பல லீலைகள் செய்து உன்
மேனிதனை விடலின்றி
எட்டுத் திசையும் ஒளிர்த்திடுங் காலை
இரவியைப் போன்ற முகத்தாய்!—முத்தம்
இட்டுப் பல முத்தமிட்டுப் பல முத்தமிட்டுனைச்
சேர்ந்திட வந்தேன்."

கவிதையைக் கேட்டுப் புளங்காங்கிருதம் அடைந்து பூரிக்கும் காந்தாமணி, புன்னகை ததும்பும் தன் செவ்விதழ்களைத் திறந்து, "கருணு! காதலையே கடவுளென்று சொல்வாறும் உண்டு! கடவுளின் சொர்க்கத்

தைக் காட்டிலும், காதலே மேலான சொர்க்கம் என்று மேம்படுத்துவாறும் உண்டு !! அத்தகைய பேதைகளை நான் வெறுக்கிறேன்; காரணம், அவர்கள் தம் கற்பனைக் கடவுள்—சொர்க்கம் எனும் நாற்ற நாருகளுக்கு நறுமணம் உண்டாக்கப் பரிசுத்தமான காதல் மலர்களைப் பறித்து அவற்றில் தொடுத்துப் பாழ் படுத்து கின்றனர் !!!" என்றாள்.

அதைக் கேட்டுச் செவியில் சுவை உணர்ந்து இன்புற்ற கருணாகரன், "காதல் காந்தா! புத்தம் புதிய இனிய சொல்லடுக்கு நிறைந்த உன் பொன்மொழிகளைக் கேட்டுக் கொண்டிருப்பதிலும் சிறந்தது எது? உன் பவளச் செவ்விதழ்களில் ஊறும் காதல் கனி ரசத்தைச் சுவைத்துப் பருகுவதிலும் இனியது எது? இன்பத்தின் சிகரமாய் இருக்கும் கார்மேகக் கூந்தலிடை தோன்றும் சம்பூரணச் சந்திரிகை போன்ற உன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதிலும் பிரியமானது எது?" என்றான்.

அதற்குக் காந்தாமணி, கொஞ்சமும் கூசாமல், "நரகந்தான்!" என்று பதிலளித்து விட்டுச் சிணுங்கிக் கொண்டு சற்றே விலகினாள்.

அச்சிறு விநாடியில் சித்தங் கலங்கி விட்டான் கருணாகரன். "ஐயோ! நான் செய்த குற்ற மென்ன? கண்ணே, குற்ற மென்ன?" என்று கெஞ்சினான், கெஞ்சினான் அப்படிக் கெஞ்சினான். அவளோ, அதிகமாய் மிஞ்சிவிட்டு, அப்பால் மெதுவாய் அவன் பக்கம் திரும்பி, "நீங்கள் என் முகத்தைப் பார்ப்பதும், மொழியைக் கேட்பதும் எட்டி இருந்துதானே? அப்போது,

என்னைச் சுட்டிடும் நரகம் சுகமாக இருக்குமே!" என்றாள்.

"ஓகோ! 'தொடிற் சுடின் அல்லது, காம நோய் போல விடிற்சுடலாற்றுமோ தீ' என்று வினவுகின்றாயோ? நல்லது. நான் கேட்ட கேள்விகளால் நீ இவ்வாறு பிணங்கி, ஊடலின்பம் பெற்றாளே, இதைவிடச் சொர்க்கபோகம் வேறுண்டோ?" என்றான் கருணாகரன்.

அதற்குக் காந்தாமணி, 'புலத்தலின் புத்தேள் நாடு உண்டோ, நிலத்தொடு நீரியைந் தன்னா ரகத்து?' என்பதுதானே பொய்யா மொழி" என்றாள்.

"கண்ணே! உன்னை நான் காணாத போதெல்லாம், காணவேண்டும் காணவேண்டும் என்ற ஆவலே கட்டுக் கடங்காமல் என்னை வாட்டும்; உன்னை என் கண்ணாரக் கண்டபோதோ, உடனே கட்டியணைந்து இன்புறத் தழுவவேண்டும் என்ற எண்ணமே எனக்கெழும்; இப்படி உன்னை நான் தழுவிடும் போதோ, உன்னோடு இரண்டறக் கலந்து விடும்படியான காதல் தீ கொழுந்து விட்டெரியும் நரகத்திலே கிடந்து வேக வேண்டும் என்றே எனக்குத் தோன்றுகிறது!" என்றான் கருணாகரன்.

இதுவரையில் காஜாவோடு பொறுமையாய் நின்று கொண்டிருந்த கதிஜா, திடீரென்று கருணாகரனை நோக்கி, "நால்வரின் வெற்றியைப் பற்றி நாலு வரிகள் எழுதி வெண்கலச் சிலையின் விரல்களுக்கு இடையே சொருகிவிட்டு மறைந்த நண்பரே! அவ்வெற்றி நம் கரங்களில் கிட்டும் வரையில் நாம், காதல் கொள்ளைக்கு

இரையாகிக் கடும் நரகில் மறையாது இருக்க வேண்டும்" என்று சூளுரைத்தாள்.

கதிஜாவின் சூளுரை கேட்டுச் சுதாரித்து எழுந்த காந்தாமணியும், கருணுகரனும் வெட்கத்தினுல் தலை கவிழ்ந்து நிற்கின்றனர்! சூழ்ச்சி இருளைப் போக்கிப் பகுத்தறிவு ஒளி பரப்பப் புறப்பட்டவன் போலக் காலைக் கதிரவன் உதயமானுன்!! காலநிலை உணர்ந்த அவர்கள், உடனே அப் பாதாள அறையை விட்டுக் கிளம்பி காந்தாமணியின் படுக்கை அறைக்கு வந்ததும், மற்ற விபரங்களைப் பற்றி மறுபடியும் சந்திக்கும் போது பேசிக்கொள்ளலாம் என்று கூறிப் பிரிந்தனர்.

---

6. கொலையா — தற்கொலையா ?

இரவு முழுவதும் காதற் கொள்ளை நடந்த கனக சபாபதி முதலியார் மாளிகையில் ஒரு கோரக்கொலையும் நடந்திருப்பது, பொழுது புலர்ந்ததுமே கதிஜாவுக்குப் புரிந்துவிட்டது.

காந்தாமணியின் அறையிலிருந்து பிரிந்த கருணு கரனையும், காஜாவையும் கூட்டிக் கொண்டு போய் மாளிகைக்கு வெளியே வழியனுப்பிவிட்டுக் கதிஜா திரும்புகையில், வழக்கம் போல் வைகறை (பஜ்ர்)த் தொழுகையைத் தொழுது விட்டுத் தூங்கலாமே எனச் சிற்பக் கலைக் கூடத்தின் பக்கம் உள்ள குலாம் காதரின் அறையை நோக்கினுள்.

காரணம், தற்சமயம் அவளுக்கு இருக்கும் தூக்க மயக்கத்தில், அவள் தன் அறைக்கே நேராகப் போய்விட்டால், அங்கு 'அவளால்த் தனித்து நின்று தொழுக முடியாமல், அத்தொழுகைப் பாயிலேயே படுத்துத் தூங்கும் படியாய் நேர்ந்தாலும் நேரிடும்! ஆதலால், குலாம் காதருக்குப் பின்னுல் நின்று அவரைப் போலவே இரண்டு தடவை குனிந்து, மண்டியிட்டுத் தரையில் முட்டி எழுந்துவிட்டால், சரியாய்ப் போய்விடுமே என்று எண்ணியவளாய்க் குலாம் காதரின் அறைக்குள் வந்து நுழைந்தாள்.

அங்கு அவள் கண்ட காட்சிதான், 'கொலையா - தற்கொலையா?' என்று அவளால் புரிந்து கொள்ள முடியாதிருந்தது!

குலாம்காதர், தன் மண்டை ஓடுகள் உடைந்து நொறுங்கிச் சிதறியதால் ஒழுகிய இரத்த வெள்ளத்தில், மட்ட மல்லாக்கப் பிணமாய்க் கிடக்கிறார்! அவர் மார்பு மீது கனமான ஒரு வெண்கலச் சிங்கம் விழுந்து கிடக்கிறது!! அவர் கரங்களில் அச் சிங்கச் சிலையி லிருந்து உடைந்த வாலும், பிடரித் துண்டும் உள்ளன!!!

மேலும் ஏதாகிலும் உண்டோ என்று ஆராய்ந்து கொண்டிருக்கத் துணிவில்லாது கலங்கிய கதிஜா, உடனே முதலியாரின் படுக்கை அறையை நோக்கி ஓடினாள்.

முதலியார், தன் பஞ்சணை மீது கொஞ்சமும் கலங்காத நெஞ்சினராய் நித்திரை செய்து கொண் டிருக்கக் கண்டு, அவரைத் தன் கரங்களால் பிடித்து ஆட்டிக் குலுக்கி, "அப்பா......! அப்பா......!! அப்பா......!!!" என அலறி எழுப்பினாள் கதிஜா.

விழித்தெழுந்த முதலியார், வெகு நிதானமாய் "என்ன கதிஜா! ஏன் இப்படிக் கதறுகிறாய்?" என்று கேட்டார். அதற்குக் கதிஜா, "அப்பா! நம் குலாம் காதர், அவருடைய அறையிலேயே மாண்டு கிடக்கிறாரப்பா!!"—என்று மிக்கப் பரபரப்பாய்க் கூறினாள்.

"ஐயோப் பாவம்! அவருக்கும் வயதாகிவிட்ட தல்லவா? சரி, பிரேதத்தை மிகவும் சிறப்பாக எடுத்து அடக்கம் செய்யவேண்டும்!! முல்லாக்களை இங்கு அழைத்துக்கொண்டு வரும்படி ஆள் அனுப்பு கதிஜா!!!" என்று மீண்டும், யாதொரு பரபரப்பும் இல்லாமலே பதிலளித்தார் முதலியார்.

" அடடடா! உங்களுக்கு ஒரு விபரமும் தெரிய வில்லையேப்பா!! குலாம் காதர் கொலை செய்யப்பட்டிருக்கிறாரப்பா, கொலை செய்யப்பட்டிருக்கிறார்!!!" என்று குமுறினாள் கதிஜா.

"என்னது! கொலையா? எப்போது? எங்கே? யார் செய்தது? உடனே, போலீஸுக்குப் 'போன்' பண்ணு! ஊஹ்ஹூம்...வேண்டாம் வேண்டாம்; இப்போப் பண்ணாதே!! போய்ப் பார்த்துவிட்டுப் பண்ணலாம் வா வா!!!" என்று குளறிக்கொண்டே குலாம் காதரின் அறையை நோக்கி ஓடினார் முதலியார்; கூடவே ஓடுகிறாள் கதிஜா.

அங்கு, கதிஜா கண்ட கோரக் காட்சியையே முதலியாரும் கண்டு மனம் கலங்கினார்! ஆனால், அவருடைய கண்கள், அப் பிணத்தின் மீது கிடக்கும் வெண்கலச் சிங்கத்தின் உடைந்த பிடரிப் பொந்து வழியே அதன் உடலுக்குள் எதையோ தேடித் துருவித் துருவி ஆராய்ந்து கொண்டிருப்பதைக் கதிஜாவும் கூர்ந்து கவனித்தாள்.

அப்போது, அவருக்கும் ஏதாகிலும் ஆபத்து உண்டாகுமோ என்று அஞ்சினாள் கதிஜா. அதனால், அவரை அவ்வறையைவிட்டு வெளியில் அழைப்பதற்கு விரும்பியவளாய், "வாருங்களப்பா, போய்ப் போலீஸுக்குப் 'போன்' பண்ணலாம்!" என்று சொன்னாள்.

அதைக் கேட்ட முதலியார், கதிஜாவை அங்கிருந்து அனுப்பிவிட வேண்டும் என்று எண்ணியவராய், " ஆமாமாம். கதிஜா! நீ போய் உடனே, 'போனில்' போலீஸைக் கூப்பிட்டு 'எங்கள் மாளிகையில் உள்ள

ஒரு கனமான வெண்கலச் சிலை, எங்கள் கிழக் குமஸ்தா மீது தவறி விழுந்து விட்டபடியால், அவர் அந்த இடத்திலேயே மண்டை உடைந்து மாண்டு கிடக்கிறார் என்று தெரிவித்து விட்டு, அதற்கு அவர்கள் என்ன உத்தரவு இடுகிறார்களோ, அதையும் தெரிந்து கொண்டு வா போ" என்றார்; கதிஜா போய் விட்டாள்.

பிறகு, முதலியார் மெதுவாய்த் தனது வலது கரத்தை மட்டும் அச் சிங்கச் சிலையின் உடலுக்குள்ளே நுழைத்து, எதையோ துழாவித் தடவிப் பிடித்து வெளியே எடுக்க முயன்றார்.

அப்போது, ஒரு பெரிய வெடிச் சப்தத்தோடு அவ் வெண்கலச் சிங்கத்தின் உடல் இரண்டாகப் பிளந்தது! அதே சமயம், அதிலிருந்து கிளம்பிப் பாய்ந்த கூர்மை யான எஃகாலான சிறு கத்தி முதலியாரின் வலது கரத்தை முழங்கையோடு இரண்டாக வெட்டி வீழ்த்தி விட்டது!! வெட்டுண்ட அம் முழங்கை கீழே கிடந்து தனியே துடிப்பது போலவே, முதலியாரின் மிஞ்சிய உடல் பாகம் முழுவதுமேத் துடிதுடித்துக் கதறுகிறார்.

அகோரக் கதறலும், அதிர்வெடிச் சப்தமும் கலந்து, ஏக பயங்கரமான இடிமுழக்கம் போல், அம் மாளிகை எங்குமே எதிரொலித்தது. அப்போது, ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த காந்தாமணியும் விழித் தெழுந்து பயந்து நாலா பக்கமும் மிரண்டோடினாள்.

கதிஜாவோ, போலீஸாருக்கு அரைகுறையாய் 'போன்' மூலம் உளறிவிட்டு, அவர்கள் பதிலைக்கூட எதிர்பார்க்காமல், குலாம் காதரின் அறைக்கே திரும்பவும் ஓடி வருகிறாள்.

அங்கு, முதலியார் தனது வலது முழங்கையை இழந்து, இரத்தம் பீரிடும் இடத்தைத் தனது இடது கையால் பிடித்து அழுத்திக் கொண்டு அலறுவதைக் கண்டு, அதிர்ச்சியுற்ற கதிஜாவும் "அப்பா...! அப்பா..." எனக் கதறித் துடித்தாள்.

கதிஜாவைக் கண்டதும் முதலியார், தன் மனதைத் திடப்படுத்தித் தனக்குற்ற தாங்கொண்ணு வேதனையையும் தாங்கிக் கொண்டு, "கதிஜா! கதருதே; இதோ பார், நான் சொல்வதைக் கவனமாய்க் கேள்! எனக்கு ஒரு கை போய்விட்டதே என்று நீ கவலைப் படாதே! இதோ, இந்தக் கிழவன் தன் உயிரையே கொடுத்தும் பெற முடியாததை நான் பெற்றுவிட்டேன்! அதோ, வெட்டுண்டு கிடக்கும் என் கையில் இருக்கும் அந்த வெண்கலப் பேழையை உன் கையில் எடுத்துக் கொள்! ஒருவருக்கும் தெரியாமல் உன் தொழுகை அறைக்கு ஓடிப் போ! அங்கே நீல நிறச் ஜன்னலின் வெண்கலக் கம்பிகளுக்கு இடையே பதிக்கப் பட்டிருக்கும் சிறிய பளிங்குக் கல் பித்தானை அழுத்தினல், அந்த ஜன்னலுக்கு அடியிலிருக்கும் இரகசியப் பெட்டி ஒன்று வெளியே தோன்றும்! அதில் அப் பேழையைப் பத்திரமாக வைத்துவிட்டு, மீண்டும் அவ்விரகசியப் பெட்டியைச் சுவரை நோக்கித் தள்ளிவிடு, அது தானே முன்போல் மறைந்து விடும்! மற்றவைகளைப் பிறகு பேசிக்கொள்ளலாம்! ஊம் ஊம். போலீஸ் வருவதற்குள் அப் பேழையை எடுத்துக் கொண்டு ஓடு கதிஜா, ஓடு! ஊங்நும்; நில் நில். இன்னெரு முக்கியமான சங்கதி! கதிஜா, இந்த

நிலையில் நான் போலீஸார் முன் தோன்றக் கூடாது! தக்க பாதுகாப்பான இடத்தில் போய்ச் சில நாட்கள் மறைந்திருந்து, இவ்வூனக் கையின் புண்ணை ஆற்றிக் கொண்ட பிறகுதான் வருவேன்! அது வரையில் நீதான் என்னை எவருக்குமே காட்டிக் கொடுக்காமல் காப்பாற்ற வேண்டும்! போலீஸார் வந்து உன்னிடம், 'உன் தந்தை எங்கே?' என்று என்னைப் பற்றிக் கேட்டால், 'அவர் நேற்றிரவுதான் இலங்கைக்குப் புறப்பட்டுப் போனார். எப்போது திரும்புவார் என்பது, எங்களுக்குத் தெரியாது, என்று நீ கூறிவிட வேண்டும். தெரிகிறதா?" என்றார்.

இதற்குள்ளாகப் போலீஸ் 'வான்' வந்து கொண்டிருக்கும் சப்தம் கேட்கவே, முதலியார், கதிஜாவைப் பேழையை எடுத்துக் கொண்டு ஓடும்படி துரிதப்படுத்தி அனுப்பிவிட்டு, அங்கு துண்டிக்கப்பட்டுக் கிடக்கும் தனது முழங்கையைத் தன் வாயினால் கவ்வித் தூக்கிக் கொண்டு, இரகசிய அறையின் நிலைக் கண்ணாடிக் கதவைத் தனது வலது கால் பெருவிரலால்த் திறந்து அதற்குள் புகுந்ததும், அவ்வாறே அக் கதவை அடைத்துக் கொண்டு மறைந்தார்.

அப்பால், போலீஸ் 'வான்' அம் மாளிகைக்குள் வந்து நின்றதும், அதிலிருந்து போலீஸ் அதிகாரிகள் இறங்கி வந்தனர்.

கதிஜா, காந்தாமணியிடமும் சமையல்காரியிடமும் சங்கதியைச் சுருக்கமாகச் சொல்லி எச்சரிக்கை செய்து விட்டு வந்து, போலீஸ் அதிகாரிகளை அழைத்துக்

கொண்டு போய்க் குலாம் காதரின் அறையைக் காட்டினுள்.

போலீஸ் அதிகாரிகள் அந்த அறையையும் பிணத்தையும், அதன் மீது சிதறிக் கிடக்கும் வெண் கலச் சிலேயையும் வெகு கவனமாய்ப் பார்வை இட்டனர். பிறகு, தனிக் 'காரில்' சற்று தாமதித்து அங்கு வந்து சேர்ந்த துப்பறியும் சிங்கம் எனப் புகழ்பெற்ற சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் சித்தனும், சிரித்துக் கொண்டே எல்லாவற்றையும் மிக நுணுகி ஆராய்ந்தார்.

சி. ஐ. டி. சித்தனுடைய சிரிப்பு கதிஜாவின் உள்ளத்தைப் பெரிதும் வாட்டியது! அவர் மகாக் கெட்டிக்காரர் என்று ஏற்கனவே கேள்விப் பட்டிருக்கிருள் கதிஜா!! அவர் நீலக் கண்ணுடியையே நீண்ட நேரமாகக் கூர்ந்து நோக்கிக் கொண்டிருக்கும் போது, கதிஜாவின் உள்ளம் 'திக்குத் திக்' கென அடித்துக் கொண்டது!!!

போலீஸ் அதிகாரிகள், கதிஜாவின் வாக்கு மூலத்தைக் கேட்டு அப்படியே குறித்துக் கொண்டனர். அவள், தன் தந்தையாகிய கனகசபாபதி முதலியார் நேற்றிரவு இலங்கைக்குப் புறப்பட்டுப் போய்விட்டார் என்றதைத் தவிர, மற்றப்படி குலாம் காதரின் அசம்பாவித மரணத்தைப் பற்றி, அவள் கண்டதைக் கண்ட படியே கூறினுள்.

சி. ஐ. டி. சித்தன் கதிஜாவின் முகத்தையே கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்தார். அவள் அடிக்கடி கொட்டாவி விட்டுக்கொண்டும், கண்ணேச் சொருகும் தூக்க மயக்கத்தினுல் தொல்லேப்பட்டுக் கொண்டும்

இருப்பதைக் கண்டு, அவளிடம் சில குறுக்குக் கேள்விகள் கேட்க விரும்பியவராய் அவளைப் பார்த்து, "நீங்கள் இரவு முழுவதும் தூங்கவே இல்லை அல்லவா?" என்று திடீரெனக் கேட்டார்.

அப்போதுதான் அங்கு வந்து கொண்டிருந்த காந்தாமணியும், அந்தக் கேள்வியை கேட்டுத் திடுக்கிட்டுச் சிறிது தொலைவிலேயே நின்று விட்டாள்! ஆனால், கதிஜா சற்றே மிரண்டாளேனும், பிறகு, உடனே தன்னைச் சமாளித்துக் கொண்டு நிதானமாய், "ஆமாம்" என்று பதிலளித்தாள்.

"அப்படியானல், இரவு முழுவதும் தூங்காமல், இந்த அறையில் என்ன செய்துகொண்டு இருந்தீர்கள்?" என்று கேட்டார் சி. ஐ. டி. சித்தன்.

அதற்குக் கதிஜா, "இந்த அறையில் அல்ல; என்னுடைய அறையில், அல்லாஹ்வைத் தொழுது கொண்டும், குர்-ஆனை ஓதிக்கொண்டும், இரமலான் மாதத்திய நோன்பு நோற்பதற்குரிய ஆயத்தம் செய்து கொண்டும் இருந்தேன்! அதன் பிறகு, அதிகாலையில்த் தான் வைகறை (பஜ்ர்)த் தொழுகையைத் தொழுவதற்காகக் குலாம் காதரையும் எழுப்பிவிட இந்த அறைக்கு வந்தேன்!! அவரோ, இனி என்றைக்குமே எவராலுமே எழுப்பமுடியாத கோரநிலையில் கிடக்கக் கண்டேன்!!!" என்றாள்.

அம் மதத் திரையைக் கேள்விச் சூரியினல்க் குத்திக் கிழித்துப் பார்க்கும் துணிவில்லாத சி. ஐ. டி. சித்தன் அத்தோடு தன்வாயைப் பொத்திக் கொண்டு, மூக்கின் மேல் விரலை வைத்துச் சிந்திக்கலானார்.

"இந்த வெண்கலச் சிலைக்குள் வெடியும், விபத்தை விளைவிக்கக் கூடிய ஆயுதமும் அமைக்கப் பட்டிருந்த தற்குக் காரணம் என்னம்மா?" என்று கதிஜாவிடம் ஒரு போலீஸ் அதிகாரி கேட்டார்.

அதற்குக் காந்தாமணி, "அதெல்லாம் எங்கள் தந்தை வந்தப் பிறகு அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்! என் அக்காள் நோன்பு எனும் விரதம் அனுஷ்டித்துக் கொண்டிருக்கிறாள்!! எங்களை ஏன் வீண் தொந்தரவு செய்கிறீர்கள்?" என்று வெகு துணிகரமாகச் சொல்லிக் கொண்டே, கதிஜாவின் பக்கத்தில் வந்து நின்றாள்.

அவ்வளவுதான்! அப் போலீஸ் அதிகாரிகள் அனைவரும் மத சார்பற்ற அரசாங்கத்தைச் சார்ந்த வர்கள் என்பதைக் கொஞ்சமேனும் வெளிக்குக் காட்டிக் கொள்ளக்கூடத் தகுதி யற்றவர்களாய்த் தத்தம் வாயை மூடிக் கொண்டு விட்டனர்.

பிறகு, பிரேதம் டாக்டர் பரிசோதனைக்கு அனுப்பப் பட்டது. போலீஸார் வந்த வழியே திரும்பிச் சென்றனர். புலன் விசாரணை செய்யும் பொறுப்பு சி. ஐ. டி. சித்தனிடம் ஒப்படைக்கப் பட்டது.

அப் போலீஸ் அதிகாரிகள் அனைவரும் திரும்பிப் போன பிறகு, காந்தாமணி அழுதுகொண்டே, "அப்பா எங்கே அக்கா?" என்று கதிஜாவைக் கேட்டாள். அதற்குக் கதிஜா, "நீ நேற்றிரவு கண்டு பிடித்த இரகசிய அறைகளின் ஒன்றில்த்தான் அவர் ஒளிந்து இருக்கக் கூடும்! ஆனால், அவர் நமக்கு அந்த மர்ம அறைகளைப் பற்றி ஒன்றுமே தெரியாது என்று

எண்ணிக் கொண்டிருக்கும் போது, நீ அவரைத் தேடிக் கொண்டு அங்கு போவது தவறு! அவருக்கு நம் முடைய உதவி தேவை இல்லாமலே அந்த இரகசிய அறைக்குள் சிகிச்சையும் நடக்கக் கூடுமானால், நாம் அந்த அறைகளைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டிய மர்மம் இன்னும் அநேகம் இருக்கலாம்! எதற்கும், நீ போய்க் கருணாகரனையும், காஜாவையும் இங்கு அழைத் துக் கொண்டு வா! அதற்குள்ளாக நான் கொஞ்சம் தூங்கி எழுந்துவிடுகிறேன்!" என்று கூறிக் காந்தா மணியை வெளியே அனுப்பிவிட்டுக் கதிஜா தன் படுக்கை அறையில் போய்ப் படுத்துத் தூங்கினாள்.

காந்தாமணி முதலில் கருணாகரன் வீட்டிற்குத் தான் சென்றாள். அங்கேயே காஜாவும் இருக்கக் கண்டாள். அவர்கள் இருவரும் அந்த அரைப் பயித் தியம் அலமேலம்மா வோடு பேசிக் கொண்டிருந்த மையால், காந்தாமணி அந்த அறையில் நுழைவதற்குச் சற்று தயங்கியவளாய் வெளியே நின்று கொண் டிருந்தாள்.

அப்போது, பகல் பன்னிரண்டு மணி இருக்கும் ஆதலால், சமையல்காரி ஒரு பெரிய வாழை இலையை அவ்விருவருக்கும் மத்தியில் போட்டு, அரைப் பயித்தியம் அலமேலு இட்ட கட்டளைப்படி அந்த ஒரே இலையில் கருணாகரனும், காஜாவும் சாப்பிடும்படி உணவு பரிமாறிக் கொண்டிருக்கிறாள்.

அப்படி அந்தத் தமிழனும், துலுக்கனும் ஒரே இலையில் சாப்பிடுவதைப் பார்த்தவுடன் அருவருப்பு அடைந்து உடனே திரும்பிப் போய்விடவே விரும்

பினுள் காந்தாமணி! ஆனுல், அவளுடைய அக்காள் கதிஜா இட்ட கட்டளையையும், அக் கதிஜாவோடு ஒரே தட்டில் அவளும் பல தடவைகள் சாப்பிட்டு இருப்பதையும் நினைத்துக் கொண்டதும், அவளையும் அறியாமல் சிரித்துக் கொண்டே கூச்சமின்றி அவ்வறைக்குள் நடந்து விட்டாள்.

அவளை அந்த அறைக்கு உள்ளே கண்ட அரைப் பயித்தியம் அலமேலு, "வாடியம்மா வா...! உனக்குப் பாப்பாரப் புத்தி போயித், தமிழர் புத்தி வர இத்தனை நாழியாச்சுதா?" என்று கூறி வரவேற்பதைக் கண்ட கருணுகரன், தன் தாயார் அன்றைக்குப் போல், இன்றைக்கும் காந்தாமணியை ஏதாவது 'கன்னு பின்னு' வெனத் திட்டி விட்டாதிருக்கும் பொருட்டு உடனே, "அம்மா... அம்மா...! அவள் என் கல்லூரித் தோழி காந்தாமணி யல்லவா?" என்று சொல்லித் துடித்தான்.

அவன் அப்படித் துடிப்பதைக் கண்ட காஜா சிரித்துக் கொண்டே, "ஆமாம்மா! அந்தக் காந்தாமணி இந்தக் கருணுகரனுக்குக் கல்லூரித் தோழி மட்டுமல்ல; இப்போது, இவன் உள்ளத்தையே கொள்ளைகொண்டு ஒருயிரும் — உடலுமான கள்ளக் காதலியுங் கூட! ஆதலால், அவளை ஏதும் சொல்லிவிடாதே!! இவன் உள்ளம் உடைந்து உன்னைப் போல் 'மஜ்னு' ஆகிவிடுவான்; அவளோ, 'லைலா' ஆகிவிடுவாள்!!!" என்ருன்.

அதைக் கேட்டுக் காந்தாமணியும், கருணுகரனும் வெட்கத்தால் தலை குனிந்தனர்! அக் காட்சியைக்

கண்டு அரைப்பயித்தியம் அலமேலம்மா ஆனந்தக் கண்ணீர் வடித்துச் சிரித்தாள்.

அழுது கொண்டே சிரிக்கும் அரைப் பயித்தியம் அலமேலுவைக் கடைக் கண்ணுல் கவனித்த காந்தா மணி அவளருகில் நெருங்கி, "மாமி! நான் பாப்பாரப் புத்தியோடு இந்த அறையின் வாசலில் நின்று கொண் டிருந்தேன் என்பது தங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என ஆச்சரியமாகக் கேட்டாள்.

அதற்கு அப் பயித்தியம், "நான், முக்காலமும் முழு துணர்ந்த முழு ஞானச் 'சாயிபாபி' என்பது உனக்குத் தெரியாதா?" என்று அதட்டினுள்.

"தெரியா ததனுல்த்தானே கேட்கிறேன் மாமி! சரி. அப்படியானுல், 'இங்கு நான் ஏன் வந்திருக்கிறேன்? அதிகாலையில் எங்கு, யார் யாருக்கு, என் னென்ன ஆபத்துகள் ஏற்பட்டன? அவற்றைத் தொடர்ந்து தங்களுக்கும், மற்றவர்களுக்கும் என் னென்ன ஆபத்துகள் ஏற்படக் கூடும்?' என்பவைகளை எல்லாம் எனக்கு விபரமாகச் சொல்லுங்கள் பார்க்கலாம்!" என்ருள் காந்தாமணி.

அதைக் கேட்டு அவள் மனம் பதறி, "இது என்னடி புதுமாதிரியான கேள்விகளாய் இருக்கு? இம்மாதிரி என்னையே பாதிக்கும் கேள்விகளை இது வரையில், எந்தப் பாமரனே—ஞானப் பைத்தியனே—மூடப் பக்தனே எவனுமே என்னிடம் வந்து கேட்ட தில்லையே! நீ வந்து இப்படித் திடீரெனக் கேட்கிருயே? என் மனம் பதறுதே!! ஐயோ, யாருக்கு என்ன

நேர்ந்ததோ? எனக்கு ஒன்றுமே தெரியலேயே...! உள்ளதைத்தான் சொல்லேண்டி என் கண்ணே..." என்று காந்தாமணியை மிகவும் கெஞ்சினுள்.

இப்போது, காந்தாமணி தன் உள்ளத்தைச் சற்று உறுதிப்படுத்திக் கொண்டு, "மாமி! முதலில் நான் கேட்டேனே, 'எனக்குப் பாப்பாரப் புத்தி வந்தது தங்களுக்கு எப்படித் தெரிந்தது?' என்று, அதற்குப் பதில் சொல்லுங்கள்!! அப்பால்த்தான் மற்ற விபரம் எல்லாம்!!!" என்ருள்.

அதற்கப் பயித்தியம், "அடி அசடே! அதுவா இப்போது உனக்கு முக்கியம்? சரி. அதோ, பார் அந்தச் சுவரில் பதித்திருக்கும் நிலைக் கண்ணுடியை! நான் என் இருக்கையில் இருந்து கொண்டு அக்கண்ணுடியைப் பார்த்தால் அதில், இந்த அறையின் வாசலில் வந்து நிற்கும் மூடாத்மாக்களின் முழு உருவங்களையும் தெரிந்து கொள்ளலாமல்லவா? அவர்கள் கொண்டு வந்திருக்கும் வெளிப் பொருட்களை அக் கண்ணுடியே எனக்குக் காட்டுவதுபோல், அகப் பொருட்களை உணர்த்தும் முகக் குறியையும் அக் கண்ணுடியேதான் எனக்குக் காட்டும்! உன் முகத்தில் தோன்றிய அருவருப்பைக் கண்ணுடியில் கண்டேன்! அதற்கு காரணம் என்ன என்று கவனித்தேன்! உன் கண் பார்வை காஜாவும், கருணுகரனும் உட்கார்ந்து உணவருந்தும் ஒரே இலையின் மீது இருப்பதைக் கண்டேன்!! உன் உள்ளத்தை உணர்ந்து கொண்டேன்!!!" என்ருள்.

"இவ்வளவு சமத்தாக இருக்கும் நீங்கள் ஏன் பைத்தியமாக நடிக்கிறீர்கள் மாமி ?" என்று திடீரென மற்றொரு கேள்வியைக் கேட்டாள் காந்தாமணி.

"என் சமத்து எப்போதாவது, அபத்தமானால் அதை மறைப்பதற்காகத் தாண்டியம்மா !" என்று உடனே பதிலளித்துவிட்டு, காந்தாமணி கொண்டு வந்திருக்கும் செய்தியை அறிய அதிக ஆவலாய் இருந்தாள் அலமேலு.

"இரண்டு பேர் ஒரே இலையில் உணவு அருந்துவது 'எச்சில்' என்று எண்ணினால், அது பாப்பாரப் புத்தியாக இருக்கலாம் ! ஆனால், அது இருவருடைய சுகாதாரத்திற்கும் கேடாயிற்றே என்று எண்ணி அருவருப்படைந்தாலோ ?" என்று மிகவும் சாமர்த்தியமாக மீண்டும் ஒரு கேள்வியைக் கேட்டாள் காந்தாமணி.

அதற்குக் கொஞ்சமும் கூச்சமின்றி அந்த அரைப் பயித்தியம், காந்தாமணியை நோக்கி, "ஆமாம்...! அன்பு கெழுமிய நண்பர் இருவர் ஒரே இலையில் சாப்பிடுவது கூட சுகாதாரத்திற்குக் கேடு என்று எண்ணும் நீ, எப்படி உள்ளன்போடு உன்னைக் காதலிக்கும் ஒரு நண்பனின் உதட்டில் ஊறும் எச்சிலை உன் வாயால் உறிஞ்சிக் குடித்தாய் ?" என்று கேட்டாள்.

அவ்வளவுதான் ! காந்தாமணியின் கன்னங்கள் நாணத்தினால் செந்தீப் பற்றி எரிவதுபோல் சிவந்தன. கருணாகரனும், காஜாவுமோ அந்த விஷயம் அவளுக்கு எப்படித் தெரியும், என்ற ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர் ! ஆனால், காந்தாமணியின் முகத்திலோ, அளவில்லா

வெட்கத்தைத் தவிர. ஆச்சரியக் குறி யொன்றும் தோன்றவில்லை.

அவள், கவிழ்ந்த தலை நிமிராமல் அலமேலம்மாவை நோக்கி "அந்த விபரம் தங்களுக்கு எப்படித்தெரியும் என்று நான் தங்களைக் கேட்கமாட்டேன்! ஆனால் இப்போது அந்தப் பாதாள அறையில் என்ன நடை பெற்றுக் கொண்டிருக்குமோ, எனக்குத் தெரியாது! அதிகாலையில்த்தான் அவ் வெண்கலச் சிங்கம் என் தந்தையின் வலது முழங்கையை வெட்டி வீழ்த்தி விட்டதென்றும், அதற்கு முன்பே குலாம் காதரைக் கொன்று விட்டது என்றும் கேள்விப் பட்டேன்!! போலீஸார் வருவதற்கு முன்பே என் தந்தை, துண்டிக் கப்பட்ட அவருடைய வலது முழங்கையைத் தூக்கிக் கொண்டு இரகசிய அறைக்குள் போய் மறைந்து இருக்க வேண்டும்; பிறகு வந்த போலீஸார், குலாம் காதரின் பிரேதத்தை மட்டும் ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக்கொண்டு போயிருக்கின்றனர்!!!" என்றாள்.

அத்தனையையும் வெகு கவனமாகக் கேட்டுத் தெரிந்துகொண்ட அந்த அரைப்பயித்தியம் அலமேலு, உடனே அவ்வறையில் உள்ளவர்களை நோக்கி, "ஊம். நீங்கள் எல்லாம். இப்போதே எழுந்து இவ்வறையை விட்டு வெளியேறுங்கள்; நான் தனித்திருந்து தவம் புரிய வேண்டிய நேரம் வந்துவிட்டது!" என்று மிகக் கண்டிப்பான குரலில் கட்டளை இட்டாள்.

அப்பயித்தியத்தின் அத்திடீர்க் கட்டளையை எதிர் பார்த்துக் கொண்டிருந்தவள் போல் சமையல்காரச் சந்தானலட்சுமி முதலில் உணவுப் பாத்திரங்களையும்,

எச்சில் இலையையும் எடுத்துக் கொண்டு வெளி யேறினுள். அவளைத் தொடர்ந்து காந்தாமணியும், கருணுகரனும், காஜாவும் வெளியேறியதும், அவ் வறையின் கதவை அடைத்து உள்பக்கம் தாழிட்டுக் கொண்டாள் அப் பயித்தியக்காரி.

காந்தாமணி கூறிய விபரத்தைக் கேட்டு மிகவும் மனங் கலங்கும் கருணுகரனிடம், "அன்றிரவு இரகசிய அறையில் குலாம் காதரோடு நீ என்ன பேசிவிட்டு வந்ததாய்?" என்று கேட்டான் காஜா.

அதற்குக் கருணுகரன், "நான் அந்த குலாம் காதரைக் கண்டு பேசவே இல்லையே! என் தாயார் அடிக்கடி புலம்பும் போதெல்லாம் கூறும் அந்த வெண்கலச் சிங்கத்தைத்தானே, சுழல் படிக்கட்டுகளில் ஏறிச் சுழன்று சுழன்று தேடினேன்! எத்தனையோ அபூர்வமான அதி யற்புதச் சிலைகளை எல்லாம் கண்டேன்; என் தாயார் போன்ற உருவச் சிலைகளைக் கூடக் கண்டேன்!! ஆனுல், அவளை அரைப் பயித்தியம் ஆக்கிய அந்த வெண்கலச் சிங்கச் சிலையை மட்டுந்தானே என்னுல் காண முடியவில்லை!!!

கடைசியாக, ஒன்று கண்டேன். அதுவும் ஒரு வெண்கலச் சிலையிலிருந்துதான் விளங்கிக் கொண்டேன். அச் சிலையின் எதிரில் நின்று நான் பார்க்கும்போது, அது என் தாயாரைப்போல் எனக்குத் தோன்றியது; அச்சிலையின் வலது பக்கம் நின்று நான் பார்க்கும் போது, அதுவேதான் உன் தாயாராகிய அலிமாவின் புகைப்படத்தில் உள்ள உருவம் போலும் எனக்குத் தோன்றியது; அச் சிலையின் இடது பக்கம் நின்று நான்

பார்க்கும்போது, அதுவேதான் காந்தாமணியின் உருவம் போலும் எனக்குத் தோன்றியது; அச் சிலையின் பின்புறம் நின்று நான் பார்க்கும்போது, அதுவேதான் கதிஜாவின் உருவம் போலும் எனக்குத் தோன்றியது.

ஆகவே, நாம் நால்வரும் ஒரே வேரிலிருந்து விளைந்த நான்கு கிளைகளே என்று எண்ணினேன்—எழுதினேன் ஒரு துண்டுச் சீட்டில்; அதைச் சுருட்டி அச்சிலையின் விரல்களுக்கு இடையில் சொருகிவிட்டுப் பிறகு வெளியே வர வழி தேடினேன்.

தேடினேன் தேடினேன் தேடிக் கொண்டே இருந்தேன், நடுச்சாமம் வரையிலும். நான் வெளியேறுவதற்கு வழியே தெரியவில்லை. அப்பால், ஒரு அறையின் அடித்தளத்தில் யாரோ பெரிய குறட்டை விட்டுத் தூங்கும் சப்தம் கேட்டுக் காதைத் தரையில் வைத்துக் கவனித்தேன். அது குலாம் காதரின் குறட்டையாகத்தான் இருக்கவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டேன். ஆனால், அங்கிருந்து அவருடைய அறைக்குப் போகும் பாதையைக் கூட என்னால் கண்டு பிடிக்க முடியாமல் போகவே, அவரையாவது மேல் அறைக்கு வரச் செய்யலாம் என்று கருதிக் கொண்டு, நான் அந்த அறை அதிரும்படியாக என் பலம் கொண்டமட்டும் 'குதி குதி' எனக் குதித்தேன்.

கொஞ்சம் நேரம் கழித்து மீண்டும் தரையில் காது வைத்துக் கேட்டேன் குறட்டைச் சப்தம் கேட்கவில்லை. கதவைத் திறந்து மூடும் சப்தந்தான் கேட்டது. சரி. நான் நினைத்தபடிதான் நடக்கப் போகிறது என்று எண்ணிக் கொண்டு, அங்குள்ள ஒரு நிலைக் கண்ணாடிக்

கதவைத் திறந்து வைத்துக் கொண்டு பேசாமல் உட்கார்ந்திருந்தேன்.

வெகு நேரத்திற்குப் பின், அக்துலாம், கனகசபாபதி முதலியாரோடு என்னை நோக்கி வருவதைக் கண்டு நான் பீதி அடைந்து, அங்கு தொங்கிக் கொண்டிருந்த ஒரு பெரிய பட்டுத் திரைக்குள் ஒளிந்து கொண்டேன். பிறகு, என்னைத் தேடித் திரிந்த அவர்கள் பின்னாலேயே நானும், அவர்கள் அறியாவண்ணம் அவர்களையே தொடர்ந்து திரிந்து கொண்டிருந்தேன்.

அப்போது, இடை இடையே ஒரு வெள்ளைப் போர்வை போர்த்திய உருவம், பேயோ-பிசாசோ என்று எண்ணும்படியாத் தோன்றித் தோன்றி மறைந்து கொண்டே இருந்தது.

அப் பிசாசின் நோக்கம், என்னை அவர்கள் பின் தொடர்ந்து திரிய விடாமல் தடுத்து நிறுத்தி விடுவது தான் என்று நான் கண்டு கொண்டதும், அப்பிசாசைப் பற்றி எனக்கிருந்த கொஞ்ச நஞ்சப் பயமும் நீங்கி விட்டது. அப்பால், நான் எப்படியும் அந்த வெண்கலச் சிங்கத்தைக் கண்டுபிடித்து விட வேண்டும் என்று எண்ணிக் கொண்டு வெகு தீவிரமாய் அவர்களைப் பின் தொடர்ந்து திரியலானேன்.

என்னுடைய தீவிரத்தைக் கண்டு அப் பிசாசு செய்த தந்திரம் மகத்தானது! எப்படியோ, இந்தக் காந்தாமணி மீது நான் கொண்டிருக்கும் காதலை அது தெரிந்து கொண்டு, கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த காந்தாமணியைத் தூக்கிக் கொண்டு வந்து, அப்பாதாள

அறையில் அவர்களைத் தொடர்ந்து சென்று கொண்டிருந்த, என் பாதையில் போட்டுவிட்டுப் போய்விட்டது!! பிறகு, என்ன நடந்தது என்பதைத்தான் நீயும், கதிஜாவும் அங்கு நேரில் வந்து தெரிந்து கொண்டீர்களே..." என்று கூறி முடித்தான் கருணாகரன்.

அவற்றை எல்லாம் கூர்ந்து கேட்டுக் கொண்டிருந்த காஜா, காந்தாமணியை நோக்கி, "அந்தப் பிசாசு வேஷம் போட்டுக் கொண்டு வந்து உன்னைத் தூக்கிக் கொண்டுபோய்ப் பாதாள அறையில் போட்டது, இந்த அரைப்பயித்தியம் அலமேலுதானே, காந்தாமணி?" என்று கேட்டான்.

அதற்கவள், "ஆமாம். நானும் சற்று முன்புதான் அதைத் தெரிந்து கொண்டேன்! இதற்கு முன்புவரை, அது என் அக்காள் கதிஜா வாகத்தான் இருந்திருக்கக் கூடும் என்று நான் தவறுதலாக எண்ணி இருந்தேன்!" எனக் கூறினாள்.

"சரி. நீ எங்களுக்கு முந்திப் போய்க் கதிஜாவிடம், நாங்கள் இருவரும் இன்னும் கொஞ்சம் நேரத்தில் வந்து சேர்வதாகக் கூறினோம் என்று சொல்" எனக் காஜா, காந்தாமணியை அங்கிருந்து அனுப்பிவிட்டான்.

காந்தாமணி போன பிறகு கருணாகரன், காஜாவை நோக்கி, "இனி நமக்கு இங்கு என்ன வேலை?" என்று கேட்டான்.

அதற்குக் காஜா, "முதலியார் மாளிகையில் உள்ள இரகசிய அறைகளில், பேயாகத் திரிந்தது உன் தாய் தான் என்பதை நீ மறுக்கிறாயா?" என்று கேட்டான்.

"காந்தாமணியே ஒப்புக் கொள்ளும்போது, நான் எப்படி மறுக்க முடியும்? ஆனால், எனக்கு இன்னும் எதுவும் தெளிவாக வில்லையே!" என்றான் கருணா.

"சரி. சமையல்காரியையும் வெளியே அனுப்பி விட்டு, உன் தாயார் தவம் செய்யும் அறையின் கதவை உடைத்து உள்ளே ஆராய்ந்து பார்த்தால், ஒரு வேளை உனக்குத் தெளிவு உண்டாகலாம்!" என்றான் காஜா.

"அப்படியானால், இப்போது என் அம்மா அந்த அறைக்கு உள்ளே இல்லை என்று எண்ணுகிறாயா காஜா?" என்று கேட்டுக் கொண்டே போய்க் கருணா கரன், ஒரு நீண்ட பெரிய திறவுகோலை எடுத்துக் கொண்டு வந்து அவ்வறையின் கதவைத் திறந்து பார்த்தான். அதில், காஜா கூறியது போலவே, அவனுடைய தாயாரைக் காணாது வியப்புற்றான்.

"விஷயம் விளங்குகிறதா, கருணா?" என்று கேட்டுக் கொண்டே காஜாவும் உள்ளே நுழைந்தான். பிறகு, அவ்வறையின் கதவை அடைத்து உள் பக்கம் தாழிட்டு விட்டு, அவ்விருவரும் அதை ஆராய்ந்தனர்

சற்று முன்பு, அதிலிருந்த அரைப்பயித்தியம், காந்தாமணியிடம் சுட்டிக்காட்டிய அதே நிலைக் கண்ணாடிதான், இங்கும் உள்ள இரகசியப் பாதையின் கதவாக இருப்பதைச் சிறிது நேரத்தில் கண்டு பிடித்து விட்டனர்.

அப்பால், அவர்கள் இருவரும் அச்சுவருக்குள் இருக்கும் ஒரு சிறிய கிணறு போன்ற பாதையில் இறங்கிப், பூமிக்குள் ஓடும் சாக்கடை நீருக்கும், மழை நீருக்கு

மாகப் போடப்பட்டுள்ள ஒரு பெரிய இரும்புக்குழாய்த் தொடருக்குள் புகுந்து, சற்றே குனிந்த வண்ணம் வெகு நேரம் நடந்த பின்னர், முதலியாரின் மாளிகையைச் சுற்றி வளைந்தோடும் அடையாற்றங் கரையில் வந்து வெளிப்பட்டனர்.

அவ்வாற்றைக் கடந்து மாளிகைக்குள் போவதற்கு ஏதுவாகக் குறுகிய ஒரு இடத்தில், நீண்டதோர் பெரிய பனைமரம், பாலம் போல் குறுக்கே போடப் பட்டுள்ளதையும் கண்டு, அதில் ஏறப் போகும்போது, யாரோ ஒரு ஆள், அவர்களைக் கண்டதும், "'சிற்பக் கலைக் கூடத்தில் நடந்தது, கொலையா-தற்கொலையா?'—விடுதலைப்-பேப்பர் விலை ஒரு அணு......" என்று கத்துவதைக் கேட்டு, அவ்வாளை அழைத்து ஒரு அணுக் கொடுத்து ஒரு பேப்பர் வாங்கிக் கொண்டு செல்கின்றனர் கருணுவும், காஜாவும்.

அவர்கள் இருவரும் அப்பனைமரப் பாலத்தின் வழியாய் மாளிகையை அடைந்து, உள்ளே செல்கிற வரையில் அங்கேயே நின்று அவர்களையே கவனித்துக் கொண்டிருந்த அவ்வாள், தன் கையில் உள்ள பேப்பர்களை எல்லாம் அவ்வாற்று நீரில் எறிந்துவிட்டுக் கருணுகரனும், காஜாவும் வெளிப்பட்ட இடத்தை அடைந்து, அதே இரும்புக் குழாய்த் தொடருக்குள் நுழைந்து சென்ருர்! எனவே, அவர், ஒரு பேப்பர் விற்கும் ஆளைப் போல் வந்து அப்பக்கம் திரிந்து கொண்டிருந்த சி. ஐ. டி. சித்தனேதான் என்று தெரிகிறது.

---

7. நாயன் என்றால் யார்?

கதிஜா கண்ணயர்ந்த சிறிது நேரத்திற்குள் பிரம்மாண்டமான தோர் வெடிச் சப்தம் கேட்டுத் திடுக்கிட்டு பயந்து வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்து விட்டாள்! அது, அம்மாளிகையின் அடித்தளத்திலே வெடித்த வெடியின் சப்த்தமாக இருக்கக் கூடும் என்று அவளாக யூகித்துக் கொண்ட பிறகு, சமையல்காரியைக் கூப்பிட்டு விசாரித்தாள்.

அச் சமையல்காரியின் காதுகள் சற்று மந்தமே எனினும், அவள் அவ்வளவு பெரிய வெடிச் சப்தத்தைக் கொஞ்சங்கூடக் கேட்கவே இல்லை என்று அறவே மறுத்துவிடவே, கதிஜா மிகவும் வியப் புற்றாள்! 'ஒரு வேளை, கனவாக இருக்குமோ?' என்று முணங்கிக் கொண்டிருக்கும் போது, காந்தா மணியும் திரும்பி வந்து சேர்ந்தாள்.

கதிஜா விழித்துக்கொண்டு இருப்பதைக் கண்ட காந்தாமணி, "ஏனக்கா! நீங்கள் உறங்கவே இல்லையா?" என்று கேட்டாள்.

"நான் உறங்கத்தான் செய்தேன்; என்னுடைய 'ரூஹ்' உறங்கவில்லை போலும்! அது ஒரு பெரிய வெடிச் சப்தத்தைக் கேட்டுப் பயந்து கலவரம் அடைந்து, என்னையும் எழுப்பிவிட்டது!!" என்றாள் கதிஜா.

அதைக் கேட்டு ஆச்சரியம் அடைந்த காந்தாமணி, "'ரூஹ்' என்றால் என்னக்கா? பேய்—பிசாசு என் கிறார்களே அதுவா?" என்றாள்.

"பேயோ—பிசாசோ அதைப் பற்றிப் பிறகு பேசிக் கொள்ளலாம்! நீ, போய் வந்த சங்கதி என்னாச்சுது? அதைச் சொல் முதலில்" என்றாள் கதிஜா.

"கருணா வீட்டிலேயே காஜாவையும் கண்டேன். இருவரும் சற்று நேரத்தில் இங்கு வருவதாகச் சொல்லி என்னை முந்தி அனுப்பிவிட்டார்கள்! அவர்கள் வருகிற வரையில் நான் கேட்கும் கேள்விகளுக்கு நீங்கள் பதில் சொன்னால், நான் உங்களுக்கு ஒரு புதிய உளவு சொல்வேன்" என்றாள் காந்தாமணி.

அதற்குக் கதிஜா, "ஊம்! நீயும் உளவு சொல்ல வந்து விட்டாயா? சரி சரி. உன் கேள்விகளைக் கேள் பார்க்கலாம்!" என்றாள்.

— "ரூஹ் என்றால் என்ன?

— "இது என்ன! திரும்பவும் பழைய பல்லவியைப் பாட ஆரம்பித்து விட்டாயே?"

— "பதில் சொல்லக்கா!"

— "ரூஹ் என்றால் என்ன என்று எங்கள் முஹம்மது நபிக்கே தெரியாதே! அந்தக் காலத்தில் யூதர்கள் வந்து முஹம்மது நபியிடம் மூன்று கேள்விகள் கேட்டார்களாம்! அதில் முதல் கேள்வியே ரூஹைப் பற்றித்தானாம்! அந்த முதல் கேள்வியைப் பற்றி அல்லாஹ்வே, குர்-ஆன் 17-ம் அத்தியாயம்: 85-ம் வசனத்தில் 'ரூஹைப் பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கிறார்கள்.

அதற்கு நீர், அது எனது நாயனின் கட்டளையால் ஏற்பட்டது. வெகு சொற்ப ஞானமே யன்றி உங்களுக்கு (மாந்தருக்கு)க் கொடுக்கப்பட்டு வில்லை என்று கூறுவீராக !' என்று சொல்லி மழுப்பி விட்டிருக்கும் போது, என்னால் எப்படிப் பதில் சொல்ல முடியும் ?"

—" 'ரூஹ்' என்ற அரபி மொழிக்குத் தமிழில் என்னக்கா அருத்தம் ?"

—" உயிர் அல்லது ஆத்மா என்று பொருள் கொள்ளலாம் !"

—" அல்லாஹ் என்றால் என்ன ?"

—" ரூஹிற்கு உள்ள கதிதான் இதற்கும், குர்-ஆன் 20-ம் அத்தியாயம் : 110-வது வசனத்தின் மூலம், '...அல்லாஹ்வைக் கல்வி ஞானத்தைக் கொண்டு அறிந்து கொள்ள முடியாது' என்றுதான் கூறப்பட்டிருக்கிறது.

—" ஆச்சரியமாக இருக்கிறதே ?"

—" என்ன ஆச்சரியம் ?"

—" முக்கியமான மூலத்தை மூடி மறைத்து விட்டதே உங்கள் குர்-ஆன் ?"

—" ஆமாம். ஆயினும், சில உதாரணங்கள் மூலம், அம் மூலத்தைப் பற்றிய அலங்கோலத்தையும் காண லாம் ! அஃதாவது, ரூஹ் அல்லது உயிரின் போக்கு வரத்தைப் பற்றி குர்-ஆன் 39-ம் அத்தியாயம்: 42-வது வசனத்தின் மூலம், 'மாந்தர்கள் இறக்கும் பொழுதும், இறக்காமல் உறக்கத்தில் இருக்கும் பொழுதும் அல்லாஹ்வே அவர் களுடைய உயிரைக் கைப்பற்றுகிறான். பின்னர் எவர்கள் மீது மரணம் விதிக்கப்பட்டதோ அவர்களுடைய உயிரை நிறுத்திக்

கொள்கிருன். மற்றவர்க(ளின் உயிர்க)ளை, குறிப்பிடப்பட்ட காலம் வரையில் வாழ அவன் அவர்களிடமே அனுப்பி விடுகின்ருன்...' என்று கூறப் பட்டுள்ளது."

—"இது என்ன பெரிய அபத்தமாய் இருக்கிறதே? உறங்குவோர் உடல்களிலும் உயிர்ப்பு உண்டல்லவா?"

—"ஆம்! விஞ்ஞானத்தில் உண்டு. வேத ஞானத்தில் இல்லை."

—"சரி. அல்லாஹ்வைப் பற்றி என்ன உதாரணம் கூறப் பட்டுள்ளது?"

—"'அல்லாஹ், வானங்கள் பூமிகளின் பிரகாசமாக இருக்கிருன். அவனுடைய பிரகாசத்திற்கு உதாரணம், விளக்கு இருக்கும் ஒரு மாடத்திற்கு ஒப்பாகும். அவ்விளக்கு ஒரு பளிங்குக் கிண்ணத்தில் இருக்கிறது. அந்தக் கிண்ணமோ முத்தாலாகிய ஒரு நட்சத்திரத்தைப்போல் இருக்கின்றது. பாக்கியம் பெற்ற 'சைத்தூன்' மரத்தின் எண்ணெய் எரிக்கப்படுகின்றது. அது கீழ் நாட்டில் உள்ளது மல்ல; மேல் நாட்டில் உள்ளது மல்ல; அந்த எண்ணெய் நெருப்புத் தொடாவிடினும் பிரகாசிக்கவே செய்கிறது, பிரகாசத்திற்கு மேல் பிரகாசமாக. அல்லாஹ் தான் நாடியவர்களைத் தன் பிரகாசத்தின் பால் செலுத்துகின்ருன். மனிதர்களுக்கு அல்லாஹ் இத்தகைய உதாரணங்களைக் கூறுகிருன்...' "

—"அக்கா....அக்கா...அக்கா...! என்ன இது! சின்னப்பிள்ளை மாதிரி சிறு கதை சொல்லிக் கொண்டு இருக்கிருய்?"

—" சிறு கதையா? இல்லை இல்லை. அல்லாஹ்வைப்பற்றிய விளக்கம்! குர்-ஆன் 24-ம் அத்தியாயம் : 35-ம் வசனத்தில் அல்லாஹ்வே தன்னைப் பற்றித் திருவாய் மலர்ந்தருளி யுள்ளது."

—" நல்லா... அருளினுன்...? ஏனக்கா! ஒரு மாடத்தில் உள்ள முத்தாலான நட்சத்திரம் போன்ற பளிங்குக் கிண்ண அகல் விளக்கிற்கும், முஹம்மது நபியுடைய அல்லாஹ்விற்கும் என்ன சம்பந்தம்?"

—" அதில் பாக்கியம் பெற்ற 'சைத்தூன்' மரத்தின் எண்ணெய் அல்லவா ஊற்றி எரிக்கப் படுகிறது?"

—" எந்த எண்ணெய்யா இருந்தா லென்ன? பாக்கியம் பெற்ற 'சைத்தூன்' மரத்து எண்ணெய்யோ, அல்லது அபாக்கியம் பெற்ற ஆமணக்கஞ் செடியின் எண்ணெய்யோ, எதுவாக இருந்தாலும் மின்சாரமும், மெர்க்குரியும் சேர்ந்து எரிகிற விளக்கொளிக்கு ஈடாகுமோ? இனி, இந்த விளக்கொளியை எந்த அல்லாஹ்வுக்கு ஒப்பிடுவது?"

—" அந்த எண்ணெய்யின் பிரகாசத்திற்கு ஈடு கீழ் நாட்டிலுமில்லை, மேல் நாட்டிலுமில்லையே?"

—' ஆமாமாம். அதனுல்த்தான் நாகூர் ஆண்டவர் சமாதி முதல், நாற்பது முழ நீள அவ்லியாக்கள் சமாதி வரையுள்ள ஒவ்வொரு பிணக் குழியின் தலைமாட்டிலும், ஒவ்வொரு அகல் விளக்கை அல்லும், பகலும் எரியவிட்டு அதுதான் அல்லாஹ் என்று எண்ணிக் கொள்கின்றனர் போலும்!

அது போலவேதான், எங்கள் கோவில்களிலும் அகல் விளக்குகளும்—தீ வட்டிகளும் கடவுளைப் போல்

முக்கியத்துவம் பெற்றுள்ளன; 'அக்னி பகவான்' என்றே எங்களுக்கு ஒரு தனிக் கடவுளும் உண்டு!

கிறிஸ்துவர்களுக்குங் கூடப் 'பத்திச் சுவாலகர்' எனும் மெழுகுவத்தி விளக்கொளிக் கர்த்தர்களும் உள்ளனர் போலும்!

ஏதோ, ஒருவகை விளக்கொளியைப் பார்த்துக் கர்த்தர் என்றோ, கடவுளென்றோ, அல்லாஹ் என்றோ சொல்லலாமா அக்கா?"

—"ஏன் சொல்லக் கூடாது? அல்லாஹ்வே தன் குர்-ஆனில் தன்னைப் பற்றி அவ்வாறும் தெரிவித்துக் கொண்டிருக்கிறானே?"

—"அது ஒரு உதாரணந் தானே?"

—"உதாரணந்தான் அது! மோசே அல்லது மூஸா கண்ணாரக் கண்டது எது? அக்னி ஜுவாலையைத்தானே!! ஆனால், வேதங்களில் அவர், 'கர்த்தர் அல்லது அல்லாஹ்வைக் கண்டார்—பேசினார்' என்றெல்லாம் எழுதப் பட்டிருக்க வில்லையா?"

—"ஆமாக்கா. அந்தக் காலத்து மூடாத்மாக்களுக்கு நெருப்பும் அதன் சுவாலையும் ஒரு ஆச்சரியமான பொருளாக இருந்திருக்கவேண்டும்! அதனாலேயே இந்துக்களும் ஜோதியையே பரம்பொருள் என்று வருணித்திருக்கின்றனர்; இன்றைக்கும் வணங்குகின்றனர்!! விஞ்ஞானிகளோ, அதைப் படாத பாடு படுத்துகின்றனர்!!!"

—"ஏன்! மெஞ்ஞானிகள் மட்டும் என்ன, அதைச் சும்மா விட்டுவிட்டார்களா? எதைக் கடவுள்

கர்த்தர், அல்லாஹ் என்று வருணிக்கிருர்களோ, அதையேதான் வெறுக்கத் தக்க கொடிய நரகமாகவும், பாவாத்மாக்களைச் சுட்டெரிக்கும் பொல்லாத பயங்கரமான அக்னி ஆருகவும் வருணிக்கின்றனரே ?"

— "அப்படியானுல், நாயன் என்ருல் நரகம் என்றுதான் அருத்தமா ?"

— "அப்படித்தான் விளங்கிக் கொள்ளவேண்டும் போலிருக்கிறது ! அல்லது, அதைவிடக் கேவலமான ஷைத்தான் என்றுகூட எண்ணிக் கொள்ளலாம் !!"

— "ஏனக்கா இப்படிச் சொல்கிறீகள் ?"

— "நெருப்புக்கு நல்லது—கெட்டது எது என்று பகுத்தறிந்து பிரிக்கத் தெரியாததனுலோ - முடியாத தனுலோ, அதில் விழும் எதையும் சகட்டு மேனிக்கு எரித்துச் சாம்பலாக்கிவிடுகிறது ! ஷைத்தானே, நல்ல வர்களைத் தேடிக் கண்டு பிடித்துக் கெடுக்கிருன் !! அல்லாஹ்வும் அப்படியே, நல்லவர்களையே தேடிக் கண்டுபிடித்துச் 'சோதனை செய்கிறேன் சோதனை செய்கிறேன்' என்று சாக்குப்போக்குக் கூறிக்கொண்டு கெடுத்துவிடுகிருன் !!! ஏனென்ருல்,மாந்தரில் பெரும்பாலோரை நரகத்திற்கு இரையாக்குவதாய் அவன் ஏற்கனவே தீர்மானித்திருப்பதாகக் குர்-ஆனில் பல இடங்களில் கூறப்பட்டுள்ளனவே."

— "சரித்தான். நீங்கள் உங்கள் சூழ் நிலையை நினைத்துக் கொண்டு, மனோரஞ்சித மலரை முகர்வது போல், அல்லாஹ்வையும் முகர்ந்து பார்க்கிறீர்கள் போலும் ?"

—"என்னைத் தள்ளு குப்பையில்! அல்லாஹ்றவுக்கு நான் ஒரு பொருட்டல்ல!! ஆனால், அவன் அனுப்பியதாகக் கூறப்படும் நபிமார்கள்—தீர்க்க தரிசிகள் கதியைப் பார்!!! அல்லாஹ்றவும், ஷைத்தானும் ஆளுக்கொரு பக்கம் நின்று கொண்டு அவர்களைப் படாத பாடு படுத்தவில்லையா?

அந்தத் தீர்க்கத்தரிசிகளுக் குள்ளாகவே உயர்வு தாழ்வுப் பேதங்களைக் கற்பித்து சிலருக்குத் தன்னைக் காட்டியும், சிலரோடு மட்டும் பேசியும், சிலரைச் சித்திரவதை செய்து கொல்லும் படி வேடிக்கை பார்த்துக் கொண்டும் இருக்க வில்லையா? அப்படி எல்லாம் அல்லாஹ்றவே நாடினான் என்று குர்-ஆனில் 2-ம் அத்தியாயம்: 253-வது வசனமே வெட்கமில்லாமல் ஒப்புக் கொள்கிறதே?"

—"ஆமாமாம். பாவம்! அந்த இயேசு கிறிஸ்துவை இரத்த வேர்வைவிடச் செய்தும், தூணோடு இறுக்கிக் கட்டிவைத்து அடித்தும், அவர் தலையில் முள் முடி சூட்டிப் பரிகாசம் பண்ணியும், சிலுவையைச் சுமக்கச் செய்து சாட்டையால் அடித்தும், அச்சிலுவையிலேயே அவரை வைத்து ஆணிகளால் அறைந்தும், சித்திர வதை செய்து கொன்றும் போட்டார்கள் அல்லவா?

அப்போது அக்கிறிஸ்து, 'ஏலி! ஏலி! லாமா சபக்தானி' என்று மிகுந்த சப்தம் போட்டு, 'என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்' எனக் கதறியும் கர்த்தர், ஆதத்தைக் கெடுத்த சாத்தானைப் போல் பேசாமல்த்தானே இருந்திருக்கிறார்?"

—" அல்ல அல்ல. அப்பால், மூன்றும் நாள் வந்து கர்த்தர் அவருக்குப் புத்துயிர் கொடுத்தார் என்று பைபிளிலும், அப்படி எல்லாம் அவரைச் சிலுவையில் அறைந்து கொல்லும்படியாக அல்லாஹ் கைவிட்டு விடவில்லை என்று குர்–ஆனிலும் கூறிப் பெருமையாய்ப் பூசி மெழுகிப் பின்னர் வர்ணிக்கப்பட்டும் உள்ளன!"

—" இப்படியேதான் எங்கள் புராணக் கதைகளிலும் ஏராளமான சம்பவங்கள் உள்ளன. எங்கள் மூடக் கடவுளாலுங் கூடத்தான் எந்த பக்தரையும் சோதனை செய்யாமல் புரிந்துகொள்ளவே முடிவதில்லை! அந்தக் கடவுளின் சோதனை முடிவதற்குள், அந்த பக்தன் படாத பாடுபட்டுச் செத்துத் தொலைஞ்சு போவான்!! அப்பால்த்தான் அவனுக்கு மோட்சமும், அவன் சமாதி அல்லது சரித்திரத்தைக் கட்டியழுகிற கூட்டத்திற்குச் சுரண்டல் வேட்டையும் சுலபமாகக் கிடைக்கும்!!!

மேலும், சில துறவிகள் மூச்சைப் பிடித்துக் கொண்டு கடுமையான தவம் செய்ய ஆரம்பித்து விட்டால், இந்திரன் முதலான தேவர்களுக்கும், ஈஸ்வரன் முதலான கடவுள்களுக்கும் எரிச்சல் தாங்க முடியாத அளவுக்குத் தீப்பிடிச்சு எரியுமாம்! உடனே அத்துறவிகளின் தவத்தை கெடுக்க, ஷைத்தான்களைப் போல், தேவலோகத்திலிருந்து கொண்டோ, அல்லது இறங்கி வந்தோ ஏதாவது துர்கிருதிகளைச் செய்வார்களாம்!!"

—" அதனால்த்தான் சொல்கிறேன், கடவுள்களுக்கும் - ஷைத்தான்களுக்கும் வித்தியாசமே இல்லை

என்று! உங்கள் ஈஸ்வரனுக்காவது உருவம் கற்பித்து நெற்றியில் மட்டும் நரகம் இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது; உருவமற்ற அரூபமென்று வருணிக்கப்பட்ட நாயனெல்லாம் நரகமயமேதான்!! சரி. உன் கேள்விகள் எல்லாம் முடிந்து விட்டனவா?"

—"மன்னிக்கணும். அக்கா! நான் தங்களிடம் பேயைப்பற்றித் தெரிந்துகொள்ளவும், நம்மாளிகையில் இராக் காலங்களில் வந்து உலாவும் ஒரு இரகசியப் பேயைப்பற்றி உங்களுக்குத் தெரிவிக்கவுமே விரும்பித் தங்களிடம் கேள்விகள் கேட்டேன்!! அவை நம்மை எங்கேயோ இழுத்துக்கொண்டு போய்விட்டன!!!"

—"எவை இழுத்துக்கொண்டு போய்விட்டன?"

—"என்னுடைய கேள்விகள்!"

—"எவையும், எங்கேயும் இழுத்துக்கொண்டு போகவில்லை! நாம் இங்கேயேதான் இருக்கிறோம்!! நம்முடைய எண்ணங்கள் தாம் இவ்வுலகிலும், மறுவுலகிலும், மூன்று காலங்களிலும் சஞ்சரித்தன!!! எனவே, இம்மாதிரிக் கற்பனை செய்யப்பட்டவையே கடவுளும், பேய்—பிசாசுகளும் ஆயின என்பதை நீ, உன் பகுத்தறிவைக்கொண்டே பகுத் துணர்ந்து கொள்ளவேண்டும்."

—"ஆம். அக்கா! உண்மையை உணருவதற்கு என்று உள்ள ஒரே ஒரு ஆயுதம் பகுத்தறிவு ஒன்றே ஒன்றுதான் உண்டு! அதைத்தான், கடவுளையோ — பேயையோ அறிகிற அளவுக்கு உபயோகப்படுத்தாதே; அவை நம் அறிவுக்கு அப்பால் பட்டவை என்று கூறிவிடுகின்றனரே?"

—" 'அறிவுக்கு அப்பால் பட்டவை!' என்று தீர்மானித்து விட்டது எது? சோம்பேறிகளின் பகுத்தறிவுதானே? சுறு சுறுப்பாய் உணரும் பகுத்தறிவுக்கு அப்பால் பட்டவை எவையும் இல்லை என்பதைத்தான் வளரும் விஞ்ஞானிகள் நிரூபித்துக் கொண்டிருக்கின்றனரே?"

—" அப்படியானால், உங்களால் ஏன் உயிரைப் பற்றியும், பேயைப் பற்றியும் ஒன்றுமே சொல்ல முடியவில்லை?"

—" ஒன்றுமே இல்லாதவைகளைப் பற்றிக் கேட்டால், எப்படிச் சொல்ல முடியும்? அந்தக் காலத்திலேயே பகுத்தறிவில் மிகவும் சிறந்தவராய் விளங்கிய புத்தர் பெருமானே திட்டவட்டமாகக் கூறிவிட்டாரே, 'ஆத்மா அல்லது உயிரென்றோ, பேய்—பிசாசு என்றோ, கர்த்தா என்றோ, நித்தியவஸ்து என்றோ எவையும் இல்லை. இச்சொற்கள் யாவும் வெறும் கற்பனைச் சொற்களே' என்று!"

—" ஆமாம்! அப்படிச் சொல்லிய அவரும் ஒரு புதிய மதத் தலைவராகத்தானே கருதப்படுகிறார்?"

—" இல்லை புத்தர் கொள்கைக்குப் பௌத்தம் என்று பெயர்! பௌத்தம் என்பது, பிற மதங்கள் கூறும் கடவுள் கோட்பாட்டுக் கொள்கைத் தொகுப் பல்ல!! பௌத்தம் என்பது ஒரு மதமே அல்ல!!!

பௌத்தம் என்பது, 'மெய்யறிவு பெறுதலும், மெய்யறிவியல் வாழ்க்கையைப் பெறுதலும், அம்மெய்யறிவின் இன்ப நிலையை எய்தப் பெறுதலுமே' ஆகும் என்றார் புத்தர்.

மேலும், 'ஊன் வாட—உள்ளம் வாடத் தவம், விரதம், வணக்கம் முதலியன செய்வதினால் யாதொரு பயனுமில்லை; உண்மையையும் உணர முடியாது. எனவே, அவற்றை எல்லாம் நீக்கிவிட்டு அறிவையும், உடலையும் ஆக்கத்துறையில் பயன் படுத்தும்படி அதிக ஊக்கம் அளிக்கவேண்டும்' என்றார் புத்தர்."

—"அப்படியானால், அவரே ஏன் அரச பதவியையும், மனைவி மக்களையும் துறந்து காட்டிற்குப் போய் போதி மரத்தடியில் அமர்ந்து கடும் தவம் புரிந்தார்?"

—"கடுந்தவம் அல்ல, கடுமையான பகுத்தறிவு ஆராய்ச்சியைச் செய்தார்! அதன் பிறகு, அவர் அறிந்து தெளிந்த உண்மைகளைத்தாம் அவ்வாறு உலக மக்களுக்கு உணர்த்தி இருக்கிறார்!! அக்காலத்தில் அரச மரபினருக்குச் சமுதாயக் கொள்கைப் பிரச்சாரம் செய்யும் உரிமை இல்லாதிருந்தமையால், அவர் தன் மனைவி மக்களையும், அரச பதவியையும் துறந்து காட்டிற்குப் போய்க் கடுந்தவம் செய்யும் சம்பிரதாயச் சடங்கை நிறைவேற்றிவிட்டுத் திரும்பி வந்து, நாட்டு மக்களுக்கே உண்மையான அறிவைக் கொளுத்தும் உன்னதமான சமுதாய சேவைகளையே செய்து, மதாச்சாரக் கொள்கை எனும் நச்சரவுகளைத் தன்னால் கூடுமான அளவுக்கு அழித்து ஒழித்திருக்கிறார்."

—"இப்போது, உலகில் பரவி இருக்கும் பௌத்தக் கொள்கைகள் அப்படி இல்லையே?"

—"ஆமாம். புத்தர் காலத்திலும், அவருக்குப் பிறகு வெகு காலம் வரையிலுங் கூட, இன்றைய

விஞ்ஞான அறிவின் உதவி கிடைக்காது இருந்தமை யாலேயே, பௌத்தம் சிதைந்து சீரழிந்துவிட்டது.

பௌத்தவ உண்மையின் உயர்வைக் கண்டு பொறுமை கொண்ட பார்ப்பன ரிஷிகளும், ஆச்சாரியர் களும் அதை அடுத்து, மஹாயனம் எனும் வேதமதச் சார்புடைய பௌத்தமாக ஆக்கிக் கெடுத்துவிட்டனர் இந்தியாவில். இதுபோலவே, ஏனைய தேசங்களிலும் ஆங்காங்குள்ள புராண மத குருக்கள், அதை அடுத்து அவரவர் நோக்கம் போல் கெடுத்துள்ளனர்."

—"ஆமாம். அக்கா! ஆயிரக்கணக்கான ஆண்டு களாகவே இந்த மூடமதப் புரோகிதக் கூட்டம், இந்நாட்டிலும் சரி, வேறெந்நாட்டிலும் சரி, புத்தறி வுக்கும், பகுத்தறிவுக்கும், விஞ்ஞான வளர்ச்சிக்கும் முட்டுக் கட்டையாகவும், அடுத்துக் கெடுக்கும் அயோக்கியத் தனமாகவும் தலைமுறை தலைமுறையாய்த் தோன்றி வருவதின் தத்துவந்தான் என்ன?"

—"'செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திடலா மென்றே எண்ணி இருப்போர்
பித்த மனிதர் அவர் சொல்லும் சாத்திரம்
பேயுரை யாமென் றூதேடா சங்கம்'

என்று இக்காலத்தில் வாழ்ந்த கவி ப்ரதியார்ரும் எடுத் துரைத்தது போல், பேய்த்தேரை நீர் என்று நோக்கும் பேயர்களுக்கு, வயிற்றுப் பிழைப்பைத் தவிரத் தத்துவமேது—குறிக்கோளேது?"

—"அதென்னக்கா அது, 'பேயுரை - பேய்த்தேர் - பேயர்'?"

— " பேயுரை = பைத்தியக்காரப் பிதற்றல்கள் ; பேய்த்தேர் = கானல் ; பேயர் = பைத்தியக்காரர் ."

— " அவ்வளவுதானு ? சரி. அக்கா ! அந்த அரைப் பயித்தியம் அலமேலு மாமியைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா ?"

— " நேற்றிரவுதான், காஜா கொஞ்சம் சொல்லக் கேள்விப்பட்டேன் !"

— " அந்தப் பயித்தியம் இரவில் எப்படியே இங்கு வந்து நம் இரகசிய அறைகளுக்குள்ளே பே போலத் திரியுதக்கா !"

— " சரித்தான் ! உனக்கும் பயித்தியம் பிடிக் ஆரம்பித்து விட்டது போலிருக்கு ?"

அப்போது, " இல்லை இல்லை. காந்தாமல சொல்வது மறுக்கமுடியாத உண்மைதான் !" என் கூறிக்கொண்டே காஜா, கனகசபாபதி முதலியாரி இரும்புப் பெட்டி இருக்கும் அறைக்குள் இருந் வெளியே வந்தான்.

அவனைக் கண்ட கதிஜாவும், காந்தாமணிய ஒருங்கே வியப்புற்று, "நீங்கள்...?" என்று இருவரு ஏக காலத்தில் வாய் திறந்தவுடன், அவர்கள் கேட்க போகும் கேள்வியை முன்னக்கூடியே அறிந் கொண்ட காஜா, "நாங்கள், அந்த அரைப் பயித்திய பேய் போல் இம் மாளிகைக்குள் வரும் பாதையை கண்டுபிடித்து, அவ்வழியே வந்து, நரக அறை அடைந்து வெகு நேரம் ஆகிவிட்டதே !" என்முன்.

மேலும், அவர்களை நோக்கி, " நீங்கள் இருவரு சற்று நேரம் இங்கேயே இருங்கள் ; நான், எ

வீட்டிற்குப் போய், என் தந்தையையும் இவ்விடம் அழைத்துக் கொண்டு வந்ததும், நாம் நால்வருமே அந் நரக அறைக்குப் போகலாம்!!" என்று வெகு அவசரமாகக் கூறிவிட்டு, முதலியாரின் 'மோட்டார் காரை' எடுத்துக் கொண்டு காற்றினும் கடு வேகமாய்ப் போனவன், அதே வேகத்தில் அவனுடைய 'அத்தா' பீர்முஹம்மது இராவுத்தரோடு அங்கு திரும்பி வந்து சேர்ந்தான்.

அச் சிறிய பொழுதைப் பெரும் யுகாந்தமாகக் கருதிக் கழித்துக் கொண்டிருந்த கதிஜாவும், காந்தாவும் அவர்கள் வந்ததுமே, அவர்களோடு விரைந்து உள்ளே சென்றனர்.

---

8. சுவர்க்கத்தின் சாவி!

காஜாமுஹைறதீன், பாதாள அறையில் இருக்கும் மிகவும் மர்மமான இரகசியக் கதவைத் திறந்து கொண்டு நரக அறைக்குள் நுழைந்தான்; அவன் பின்னே பீர் முஹம்மது சென்றார்; அவரைத் தொடர்ந்து கதிஜாவும், காந்தாணியும் சென்றனர்.

அந்நரக அறைக்குப் போகிற மிகக் குறுகலான பாதையே ஒரு பயங்கரமான இருட் குகை போல் இருந்தது. நரகத்தின் துர்நாற்றம் அங்கேயே வீச ஆரம்பித்து விட்டது. அத்தோடு, நரகத்தில் இருக்கும் நாயன் விடும் வேதனைப் பெருமூச்சோ, அவ்விருட்டின் பயங்கரத்தை இரட்டிப்பாக்கிக் கொண்டிருந்தது.

அவ்விதமான பாதையை அவர்கள் கடந்ததுமே அகோரமான நரக அறையை அடைந்தனர்! அந்த அறையில் எங்கும் தீப் பற்றி எரிவது போல், நெருப்பு நிற மின்சார விளக்கொளி மிகத் தீட்சணியமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது!! அவ்வறையின் மண்தரை, பூசப்படாத புதைகுழி போல் பொந்துகள் நிறைந்ததாயும், அப் பொந்துகளில் பாம்பு, பூரான், பெருச்சாளி, தேள், நண்டு, வண்டு முதலிய விஷப் பிராணிகள் நிறைந்ததாயும் இருக்கிறது!!!

அத்தகைய நரகத்திலே அவர்கள் கண்ட நாயனை, அங்கு நடப்பட்டு உள்ள ஒரு பெரிய இரும்புச் சிலுவையிலே வைத்துச் செம்புக் கம்பிகளாலான விலங்குகளிட்டு, வெண்கலப் பூட்டுகளால் பூட்டப்பட்டு

இருக்கிறது! அந்நாயனின் தலை மயிரில் இரண்டு வீசை இரும்புக் குண்டும்; தாடி மயிரில் ஒரு வீசை ஈயக் குண்டும் கட்டித் தொங்கவிடப் பட்டுள்ளன!! அவன் உடம்பெல்லாம், சாட்டை அடியால் ஏற்பட்ட இரத்தக் காயங்களின் வடுக்கள் நிறைந்துள்ளன!!! அவன் வாயில் அன்ருடம் திணிக்கப்படும் காய்ந்த ரொட்டித் துண்டும், கொஞ்சம் நீர் நிறைந்த கடற் பஞ்சும் உள்ளன.

'இத்துணை கொடிய நரக வேதனைக்கு ஆளாகி மூச்சுத் திணறி, மேல் மூச்சு விட்டுக் கொண்டிருக்கும் இந்நாயன், எந்த உலகத்தைப் படைத்துப் பட்டினி போட்டு, பிச்சை எடுத் துண்ணச் செய்தானே?' என்று எண்ணும் காந்தாமணியின் வாய், "இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டிற் பரந்து கெடுக உலகியற்றி யான்" எனும் திருக் குறட்பா வொன்றை முணங்கியது.

அதே சமயம், அதே போல் அல்லாமல், அதற்கு எதிரிடையாய், 'அல்லாஹ், நபிமார்களை அனுப்பிவைத்த ஒவ் வொரு ஊர் மக்களையும், அவர்கள் பணிந்து வரும் பொருட்டு, வறு மையைக் கொண்டும், பிணியைக் கொண்டும் பிடிக்காமல் இருக்க வில்லை' என்று எண்ணிய கதிஜாவின் வாய்:

" வமா அர்ஷல்னு ஃபீ கர்யதிம் மின் நபிய்யி
இல்லா அகத்னு அஹ்லஹா பில் பஷாயி
வழ்ழராயி ல அல்லஹும் எழ்ழர்ரஊன "

எனும் திருக் குர்-ஆன் (7:94.) வசனம் ஒன்றை முணங்கியது.

" அட, பாவமே! இவன் செய்த கொடுமையை விட, இவன் அநுபவிக்கும் கொடுமை எவ்வளவு

பயங்கரமானதாக இருக்கிறது ?" என்ருர் அவனைக் கண்ட பீர் முஹம்மது இராவுத்தர்.

அப்போது, அக்கொடுங் காட்சியைச் சுற்றிக் கழுகுகள் போல், உட்கார்ந்திருக்கும் ஒரு கையிழந்த கனக சபாபதி முதலியாரும், வாழ்விழந்து அரைப்பயித்தியமான அலமேலம்மாவும் எரிமலைகள் போல் குமுறி எழுந்து " இல்லை......! இவன் செய்த கொடுமைகளை விட, இவன் அநுபவிப்பது மிகக் குறைவு !!" என்று அலறினர்.

அதைத் தொடர்ந்து, அதிக ஆத்திரம் அடைந்தார் முதலியார். அதனுல், வெட்டுண்ட கையின் வேதனை தாங்க முடியாது மயங்கிக் கீழே சாய்ந்தார். அச்சமயம் அவரருகே நின்று கொண்டிருந்த கருணுகரன் அவரைத் தாங்கிப் பிடித்துக் கொண்டான்.

ஆனுல், அலமேலு அழுகையும் கண்ணீருமாய்ப் பீர் முஹம்மது இராவுத்தரைப் பார்த்துத் தொடர்ந்து பேசலானுள் : " என் அருமைக் கணவரே ! என்னைப் பாரும் !! நான்தான் அந்தப் பிலிப் துரையின் மகள் மேரி ; நான்தான் தங்கள் அருமை மனைவியாகிய அலிமா பீபீ ; நான்தான் தங்கள் மகன் காஜா முஹைஹதீனுக்கும், மகள் கதிஜாவுக்கும் தாய் ; நானேதான் அரைப் பயித்தியமாகிய அலமேலு !!!

இப்போது, இச்சிலுவையில் பூட்டப்பட்டிருக்கும் இவன் யார் என்று உங்களுக்குத் தெரியும் ! சிற்ப சாஸ்திரத்தில் நிபுணன் — சிலைகளுக்கு நாயன் !! என் வாழ்வைச் சீரழித்த இரமணன் !!!

இதே சிலுவையில் இப்படியே என்னை வெகு காலம் பூட்டி வைத்திருந்த இப்பாவியிடமிருந்து எப்படி நான் தப்பித்துக் கொண்டு, இவனுடைய இரும்புச் சிலுவை யிலேயே இவனைக் கொண்டுவந்து இப்படிப் பூட்டி வைத்திருக்கிறேன் என்பதைக் கூறுகிறேன் கேளுங்கள்.

அன்றிரவு நான், இந்தக் கதிஜாவை என் வயிற்றுள் சுமக்கும் கர்ப்பவதியாய் இருந்த காலத்தில், இந்தப்பாவிப் பயலால் நாகூர்க் கடலில் தள்ளி இழுத்துக் கொண்டு போகப்பட்டேன் அல்லவா?

இவனுக்குத் தண்ணீருக்குள் மணிக் கணக்காய் மூழ்கிக் கிடக்கும் பழக்கமும், நன்றாக நீஞ்சும் திறமையும் இருக்கிறது. இவனுடைய தகப்பன் பெயர் கோவிந்தானந்தனும். அவன், காசியிலுள்ள கேதாரக் கட்டிடத்தில் வசிக்கிறானும்; கங்கையில் "சங்கற்ப ஸ்நானம்' செய்யப்போகும் யாத்திரிகர்களில், அதிக மாய் விலை மதிக்கத் தக்க ஆபரணங்களை அணிந்துள்ள பெண்களையோ—ஆண்களையோ கண்டால், அப்பாவிப் பயல் கங்கை நீருள்மூழ்கி வந்து, அவர்களின் கால்களைப் பிடித்து இழுத்துக் கொண்டு பல மைல்களுக்கு அப்பால் சென்று, அவ்வாபரணங்களைக் கழற்றிக் கொண்டு, பிரேதங்களை மோட்சம் அடையும்படி அக்கங்கையிலேயே போட்டுவிட்டு வருவதுதான் அவனுக்குத் தொழிலாம்.

அந்தக் கொலைகாரப் பாவிப் பயலுக்குப் பிறந்த இந்தக் கொலைகாரப் பாவிப் பயல், பொன்னகை அணியாத என்னிடம், புன்னகை விரும்பிக் கடலுள்

மூழ்கி என்னை வெகு தூரம் இழுத்துக் கொண்டு போனான். எனக்கு மூச்சுத் திணறும் போது, என்னை மட்டும் நீர் மட்டத்திற்கு மேலே சற்று தூக்கிப் பிடிப்பான். இவ்வாறு சென்ற இவனுக்கு எதிரே கள்ளப்படகு ஒன்று தென்படவே, அதில் என்னைத் தூக்கிப் போட்டு, இவனும ஏறிக்கொண்டான்.

அப்படகைக் காரைக்கால் எல்லையில் இருக்கும் சுங்க இலாகாப் போலீஸாரின் தோணி ஒன்று துரத்திக் கொண்டு வந்ததால், அதில் இருந்த கள்ளக் கடத்தல் காரர்கள், கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள தங்கக் கட்டிகளைப் படகோடு விட்டுவிட்டு, கடலில் குதித்து ஓடிப்போய் விட்டனர் என்று கண்ட இக் கொலைகாரப் பாவிப் பயலுக்கு உண்டான ஆனந்தத் திற்கு எல்லையே இல்லை.

கடவுளேதான், இவன் கோரிய பெண்ணையும் பொன்னையும் ஒருங்கே இவனுக்குக் கொடுத்ததாகக் கூறிக் கொட்டமடித்துக் கொண்டே, அதிலிருந்த ஒரு புட்டிச் சாராயத்தையும் ஒரேயடியாய்க் கொட்டிக் குடித்து வெறியாட்டம் ஆடினான்.

இவன் வெறிக்கு நான் இரையாகு முன்பு, இறைவனை இறைஞ்சிக் கத்தினேன்; கதறினேன்; அலறினேன்; அழுது துடித்தேன். அத்தனையையும் கேட்டுக் கொண்டு என் பிடரி நரம்பைவிட எனக்குச் சமீபமாக இருக்கும் என் அல்லாஹ்வும் பேசாமல்த்தான் இருந்துவிட்டான்.

இந்தப் பாவிப் பயலோ, நான்தான் உன்னுடைய நாயன் — நாயகன் எல்லாம் என்று கூறிக்கொண்டே

என்னைப் பலாத்காரம் செய்தான். இவன் வேலை என்னிடத்தில் பாதிக்கு மேல் முடிந்துவிட்டபோது, அல்லாஹ் முழித்துக் கொண்டு எனக்கு உதவி செய்யும்படி அவனுடைய மலக்குகளை அனுப்பினானோ? என்று நான் எண்ணும்படி, துப்பாக்கி வெடிக்கும் சப்தம் கேட்டது.

உடனே, என்மீதிருந்து எழுந்துவிட்டான் இந்தப் பாவி. ஆனால், என்னை எழுந்திருக்கவிடாமல், என் கரங்களைப் படகின் குறுக்குப் பலகையில் இணைத்துக் கட்டி இருந்தான்.

பட்டப் பகல் போல் நிலா ஒளி இருந்தமையால் அக்கள்ளப் படகைக் கண்டுபிடித்து விட்டது போலீஸ் தோணி என்று அறிந்ததும், இவன் தங்கக் கட்டிகள் நிறைந்த அந்த இரும்புப் பெட்டியையும் படகோடு இணைத்துக் கட்டிவிட்டு, படகின் குறுக்கே இரு பக்கங்களிலும் தன் கால்களையும், கைகளையும் அகற்றி வைத்துக் கொண்டு பலமாக ஆட்டிப் படகையே கவிழ்த்து அப் படகோடு கடலுக்குள் மூழ்கிவிட்டான்.

கடலின் ஆழத்திலே உள்ள தரையை நோக்கிப் படகு குடைபோல் கவிந்த வண்ணம் இறங்கிக்கொண்டிருக்கும் போது, அப்படகின் உள் பாகத்தில் முக்கால் பாகம் மட்டுமே தண்ணீர் நிறைந்தும், கால் பாகம் காலியாகவும் இருந்தது. அக் காலியான பாகத்தில் நான் என் தலையை உயர்த்திவைத்துச் சுவாசித்து என் உயிரைக் காப்பாற்றிக் கொண்டிருந்தேன்.

கடலின் தரையை அடைந்ததும், அப் படகை அதே நிலையில் குடைபோல் பிடித்துக் கொண்டு

அவனோடு நானும் நடந்தே சென்றேன். பல மணி நேரங்களுக்குப் பிறகு ஒரு இடத்தில் கரை ஏறினோம்.

பிறகு, அத் தங்கக் கட்டிகள் நிறைந்த பெட்டியையும்,என்னையும் பற்பல இடங்களில் கொண்டு போய், ஒளித்து வைத்திருந்து விட்டுக் கடைசியாகச் சென்னைப் பட்டினத்தில் உள்ள இக் கனகசபாபதி முதலியாரின் மாளிகைக்குக் கொண்டு வந்ததும், என்னைச் சதா காலமும் ஒரு இரகசிய அறையில் போட்டுப் பூட்டி வைத்திருந்தான்.

இக் கனகசபாபதி முதலியார் ஒரு பெரிய பணக்காரப் பரம்பரையைச் சேர்ந்தவரே. என்றாலும் இடைக் காலத்தில் நொடித்து ஏழையாகப்பார்த்தார்! அந்தச் சமயந்தான் இந்தக் கொலைகாரப் பாவிப் பயலுக்கும் இவருக்கும் தொடர்பும், சிநேகிதமும் ஏற்பட்டது. அதனால், அப்போதிருந்த என் தந்தையின் சிற்பக் கலைக் கல்லூரிக்கு வேண்டிய செம்பு, ஈயம் முதலிய உலோகப் பொருட்களை இவர் மூலம் வாங்குவதற்கு ஏற்பாடு செய்து வைத்தான்.

பிறகு, கலைக் கல்லூரி மூடப்பட்டபோது, அதை மிகக் குறைந்த விலைக்கு வாங்கிக் கொடுத்துத் தொழிற்சாலை யாக்கி பெருத்த இலாபம் அடையவும், நாளடைவில் இம் மாதிரிப் பெரியதோர் மர்ம மாளிகை கட்டவும் ஏற்பாடு செய்திருந்தான்.

இப் பாவிப் பயலுக்குக் கள்ளக் கடத்தல்கள் செய்வதிலும், அரசாங்கத்திற்கு விரோதமாய்க் கள்ள நாணயங்கள், நோட்டுகள் அச்சடிப்பதிலும் அதிகத் திறமையும், உற்சாகமும் உண்டு போலும்!

அவற்றை எல்லாம் மனதில் வைத்து இவன ஆலோசனைப்படி கட்டப்பட்ட இம்மாளிகையின் இரகசிய அறைகளில் ஒன்று என்னை அடைத்து வைப்பதற்காகவே முதன் முதல் இவனுக்குப் பயன் பட்டிருக்கிறது. பின்னர், இவன் நோக்கம் போல் இவ்வறைகளில் சர்க்காருக்கும், சட்டத்திற்கும் விரோதமான பல அக்ரமங்களைச் செய்து வந்திருக்கிறான். அதற்கெல்லாம் இம் முதலியாரும், இறந்து போன திருட்டுக் குலாமும் உடந்தையாகவே இருந்து வந்திருக்கின்றனர்.

இக் கனகசபாபதி முதலியாருடைய மனைவி மரகதமும் அப்போது, என்னைப் போலவே கர்ப்பவதியாய் இருந்தாள். எங்கள் இருவருக்கும் ஏககாலத்தில் பிரசவமாயிற்று. நான் இரகசிய அறைக்குள் கதிஜாவைப் பெற்றேன். அவள் பகிரங்க மாளிகையிலே கருணாகரனைப் பெற்றாள். ஆனால், இப் பாவிப் பயல் செய்த இரகசிய ஏற்பாட்டின்படி கதிஜா மரகதத்தின் பக்கத்திலும், கருணாகரன் என்பக்கத்திலும் மாற்றிப் போடப்பட்டுவிட்டனர். அப்படிப் போட்ட அம்மருத்துவச்சியே தான் இன்றைக்கும் என்னுடன் சமையல்காரச் சந்தான லட்சுமியாய் இருந்துவருகிறாள்.

அம்மாது சிரோன்மணி அக்காலத்தில் இருந்து என் மீது பச்சாதாபப்பட்டு, என்னைக்காத்திருக்கா விட்டால், இன்று வரையில் இச் சிலுவையில் நானேதான் இப்படிச் சித்திரவதை பட்டுக் கொண்டிருந்திருப்பேன். அல்லது, செத்திருப்பேன்.

பிள்ளை மாற்றுப் படலம் முடிந்த சில வாரங்களில், இப்பாவி என்னை மீண்டும் பெண்டாளும் படலத்தைத்

துவக்கினான். அதற்கு இடங் கொடுக்காமல் இருப்பதற்கும் சந்தானலட்சுமியின் உதவியையே நாடினேன். அவள் என் மர்ம உருப்புகளின் நலிவைப் பற்றி அவனிடம் மிகவும் பயங்கரமாய்ப் புளுகி வைத்ததால்ச் சில வாரங்கள் எனக்கு நிம்மதியாய்க் கழிந்தன.

இதற்கிடையில் முதலியாரின் சிற்பத் தொழிற் சாலையில் என்னைப் போலும், மரகதத்தை போலும் அற்புதமான உருவத்வை ஒரே சிலையில் வார்த்தெடுத்தான் என்ற செய்தி மாளிகைமுழுதும் பேசிக்கொள்ளப்படுவதாகச் சந்தானலட்சுமி மூலம் அறிந்து, அன்று முதல் அவளையே எனக்கு உளவாளியாக ஆக்கிக் கொண்டு, இவனுடைய ஒவ்வொரு நடவடிக்கையையும் கூர்ந்து கவனிக்கும்படி சொல்லி வைத்திருந்தேன்,

அதனால், இவன் கடலில் இருந்து கொண்டு வந்த தங்கக் கட்டிகள் நிறைந்த பெட்டியை ஒரு இடத்தில் புதைத்து வைத்திருக்கும் செய்தியையும், அவ்விடத்தின் குறிப்பேட்டையும்—அப் புத்தேள் நாட்டின் சாவியையும், அபாயகரமான ஒரு வெண்கலச் சிங்கம் செய்து அதில் சூட்சமமாகப் பத்திரப் படுத்தி வைத்திருக்கும் சதிச் செயல்களையும் தெரிந்து கொண்டேன்!

இவற்றை எல்லாம் என் சந்தானலட்சுமி அறிந்த விதத்தை அவள் எனக்குத் தெரிவித்த போதுதான், நான் அதிர்ச்சி அடைந்து விட்டேன்!!

இக் காமாந்தகாரப் பாவிப் பயலுக்கு நான் இடங் கொடுக்காமல் சாக்குப் போக்குச் சொல்லி காலங் கடத்தியதால், இவன் தன் லீலாவினோதங்களை, முதலியாரின் மனைவி மரகதத்திடமே காட்டி, அவள் மனதை மயக்கி

தன் வயப்படுத்திக் கொண்டு, அவளுக்குத் தன்னிடம் சிக்கிய தங்கக் கட்டிகளைப் பற்றிய ஆசை வார்த்தைகளைக் கூறியபடியே இவன் தன் ஆசையைத் தீர்த்துக் கொண்டிருக்கும் போது, மறைந்திருந்து கவனித்துக் கேட்டாளாம் சந்தானலட்சுமி !!!

மறு நாளே, சந்தானலட்சுமி கூறிய விபரப்படி, அவளையே அனுப்பி அந்த வெண்கலச் சிங்கத்தைத் தூக்கிக் கொண்டு போய் யாரும் கண்டுபிடிக்க முடியாத இடத்தில் ஒளித்து வைத்து விடும்படி சொல்லி விட்டேன். அவளும் மிகப்பிரயாசையுடன் அக் காரியத்தை வெகு தந்திரமாகச் செய்து முடித்து விட்டாள்.

இப் பாவியின் ஆவி போன்ற பொன்னகரின் சாவியை உடைய வெண்கலச் சிங்கம் மறைந்தவுடன் நெருப்பின் மேல் புழுவாய் துடித்து விட்டான் இவன். உடனே மரகதத்திடம் சென்று அவளை மிரட்டினான்; அவள் உயிரையே உறிஞ்சி விடுவேன் என்று உறுமினான்.

அவள், தான் அதைக் கண்டதுமில்லை, எடுத்ததுமில்லை என்று எவ்வளவோ சொல்லியும் இவன் நம்பவில்லை. இவனுக்கு, அவளைத் தவிர வேறு எவருக்குமே அச் செய்தி தெரியவே தெரியாது என்பதுதான் தீர்மானம் !

எனவே, ஒரு நாள் முதலியார் ஏதோ அலுவலாக வெளியூருக்குப்போயிருக்கும் சமயம்பார்த்து, தந்திரமாக பேசி மரகதத்தை இங்கே கொண்டு வந்து, ஏற்கனவே இவனால் தயாராகச் செய்து வைத்திருந்த இவ்விரும்புச்

சிலுவையிலே, அவளை இப்படிப் பூட்டி இம்சித்துக் கேட்டான், 'எங்கே என் வெண்கலச் சிங்கம்?' என்று.

பாவம். அப்போது, அவளும் இந்தக் காந்தாமணியைத் தன் வயிற்றில் சுமக்கும் கர்ப்பவதியாகவே இருந்தாள் என்று நான் கேள்விப்பட்டதும், என் மனம் பதறிற்று. அவளை எப்படியும் காப்பாற்ற வேண்டும் என்று எண்ணினேன்! அதனால், என் கதி என்னுகும் என்பதும் எனக்குத் தெரியும்!! எனக்கு என்ன நேர்ந்தாலுஞ்சரி—என் உயிரே போவதானாலுஞ் சரியே. மறைக்கப்பட்ட அந்த வெண்கலச் சிங்கம் மீண்டும் இவனுக்குக் கிடைக்கக் கூடாது என்பதுதான், என் இதயப் பூர்வமான எண்ணம்!!! என் எண்ணத்திற்கு இடையூருய்க் கடைசி வரையிலும் நடக்கக் கூடாது என்று சந்தானலட்சுமியிடம் சத்திய வாக்குறுதி வாங்கிக் கொண்ட பிறகே, இவனை அழைத்து இவனிடம் துணிந்து சொன்னேன்: 'உன் சுவர்க்க லோகத்தின் சாவியை உடைய வெண்கலச் சிங்கம் என்னிடந்தான் இருக்கிறது! நான் செத்தாலும் அதை நீ அடைய முடியாது!!' என்று.

அப்பால், உடனே மரகதம் இச்சிலுவையில் இருந்து விடுதலை அடைந்தாள்; நான் மாட்டப்பட்டேன். என்னை மீட்பாரில்லை. ஏனென்ருல், என் சந்தான லட்சுமி எனக்குத் தந்த சத்திய வாக்கைத் தவற மாட்டாள் என்பது எனக்கு நன்ருகத் தெரியும். நான் சாகவேண்டியதுதான் இச் சிலுவையில் என்று தீர்மானித்து விட்டேன்!

உடனே சாவதாய் இருந்தால், சிரித்துக்கொண்டே செத்திருப்பேன்! இதோ, பாருங்கள்! இவன்கூட வேதனை தாங்காது அழுகிறுன். இவன் கொடிய கொலைகாரனுக்குப் பிறந்த கொலைகாரன்!! கல் நெஞ்சன் - கபடன் - காமுகன்!!! நானே, ஏதும் அறியாத அபலைப் பெண்; இளகிய இதயம் உடைய மெல்லி யாள். என்னை இக் கொள்ளிவாய்ச் சிலுவையில் மாட்டிக் கொஞ்சம் கொஞ்சமாய் உயிர் போகும்படி சித்திரவதை செய்தான்.

நான் என் வாழ்வை மட்டுமல்ல, பெண்மையையே இழந்து வெகுகாலம் ஆகிவிட்டது. இப்போது எனக்குக் கொஞ்சங்கூடக் கூச்சம் என்பதே இல்லை. இதோ, என் சட்டையைத் திறந்து காட்டுகிறேன்! நீங்களும் கூசாமல் பாருங்கள்!! அவன் என்னைத் தினந்தோறும் சாட்டையால் அடித்து என் உடம்பெல்லாம் இரத்தம் சொட்டும்படி செய்த இரத்தக்காயங்களின் வடுக்களை!!!

மரகதம், காந்தாமணியைப் பெற்றெடுக்கும்வரை யில், நான் இச்சிலுவையில் செத்துக்கொண்டே இருந் தேன். அவளோ, காந்தாமணியைப் பெற்று, முதலி யாரிடம் 'இது உங்களுக்குப் பிறந்த குழந்தைதான்!' என்று சத்தியம் செய்து ஒப்படைத்து விட்டு, இனி நான் உங்களுக்கு மனைவியாக இருக்க அருகதை யற்றவள்; என்னை மன்னித்து விடுங்கள்!! என்னைக் கெடுத்தவன், என்னைக் காப்பாற்றிய ஒரு பெண்ணைப் பாதாள அறையில் சித்திரவதை செய்து கொண்டிருக் கிறுன்; உடனே அவளைக் காப்பாற்றி அந்த உத்தமி

யின் கையினுல் என் பிரேதத்திற்குக் கொள்ளி இடச் சொல்லுங்கள் !!!' என்று கூறிவிட்டுச் செத்தாள்.

அப் பொன்மொழிகளுக்குச் சந்தானலட்சுமி கூறிய விளக்க உரையை முதலியார் கேட்டதும், அவர் உடம் பெல்லாம் தீப்பற்றி எரிந்தது! செத்துக்கொண்டிருந்த தன்மனைவி மரகதத்தின் முகத்தை கூர்மையாகக் கவ னித்துக் கொண்டுதான் இருந்தார் முதலியார்; ஆனல், அந்த முகத்தில் அப்போது கொட்டிய கண்ணீர்த் துளிகளுக்குரிய அருத்தத்தை அப்பால்த்தான், சந்தான லட்சுமியின் விளக்க உரையிலே கண்ட அவருடைய இதயம் எரிமலைகளாயின. பின்னர், எப்போதேனும் யார் முகத்திலேனும் அக் காட்சியைக் கண்டாலும் நடுங்குவார்.

அதற்கப்பால், முதலியாரும் குலாம்காதருமாகச் சேர்ந்து இப் பாவிப் பயலை எப்படியோ பிடித்து அடித் துக் கட்டிக் கொண்டு வந்து, எனக்கு விடுதலை அளித்து விட்டு, இவன் செய்த இவ்விரும்புச் சிலுவையில் இவனையே மாட்டிப் பூட்டினர்.

பின்னர், என்னையும் மயானத்திற்குத் தூக்கிக் கொண்டு போயினர், மரகதத்திற்குக் கொள்ளி வைப்ப தற்காக. மறு எனே சிறபத் தொழிற்சாலை மூடப் பட்டு விட்டது.

நான் பூரண குணம் அடையச் சில வாரங்கள் சென்றன. அப்பால், வெண்கலச் சிங்கத்தோடு நானும் முதலியாரும் இவன் முன்னிலையில் வந்து நின்றோம் இவன் அப்போது எங்களைப் பார்த்துக் கர்ச்சித்துச் சிரித்துக்கொண்டே, 'அச் சிங்கத்தின் வாய்க்குள் கை

விடுபவனுக்குத் தங்கக் கட்டிகளைப் புதைத்திருக்கும் சுவர்க்கலோகத்தின் சாவி கட்டாயம் கிடைக்கும்! ஆனால், அவன் ஆவி அச்சாவி கிடைப்பதற்கு முன்பே போய்விடும்!! உஷார்....,.உஷார்...உஷார்!!!' என்றான்.

அன்று முதல் இம் முதலியாரிடம், சாட்டையினால் இவன் வாங்கும் அடி கொஞ்சமல்ல ! என்றாலும், இன்னும் கூறவில்லை இவ் வெண்கலச் சிங்கத்தின் வாயிலிருந்து சாவியை வெளியே எடுக்கும் சூட்சமத்தை !!

இதற்கிடையில் நான், முதலியாரிடம் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டு, மைலாப்பூர் மந்தைவெளியில் உள்ள ஒரு புராதன கட்டிடத்தை விலைக்கு வாங்கிக்கொண்டு அதில் குடியேறி, என்னை இக் கதிக்கு ஆளாக்கிய அல்லாஹ்வையும், கர்த்தரையும், ஈஸ்வரனையும் பற்றி ஆராயும் 'சாயிபாபி'யாகச் சந்தானலட்சுமியோடு தனித்திருந்தேன். பிறகு, பக்தர் கூட்டம் வந்து காணிக்கை ஈந்து என்னைப் பெரும் பணக்காரி ஆக்கிவிடவே, நானே என் மகளை வளர்த்துக் கொள்ளலாம் என்றெண்ணிக் கதிஜாவைக் கொடுத்து விடும்படி இம் முதலியாரிடம் கேட்டேன். அவர் தன் மகன் கருணாகரனைத்தான் என்னிடம் ஒப்படைத்தார்.

எங்கள் உடன்படிக்கைப்படி என் மகள் கதிஜாவை முஸ்லிம் பெண்ணாகவும், அவர் மகன் கருணாகரனைத் தமிழ் மகனாகவும் முறையே இருவரும் வளர்த்து வந்தோம்.

நாங்கள் இருவரும் முயற்சி செய்து அத் தங்கப் புதையலை அடைந்ததும், இக் கொலைகாரனைக் கொன்று விட்டு, நாங்களிருவருமே அதைப் பகிர்ந்து எடுத்துக் கொள்வது என்பதுதான் எங்கள் உடன்படிக்கை.

ஆண்டுகள் பல கழிந்தன. எங்கள் முயற்சிகள் ஆமை வேகத்திலேயே இருந்துகொண்டிருந்தன. ஆனால் வெண்கலச் சிங்கம் பற்றிய விபரத்தில் கொஞ்சம் குலாம் காதரின் காதுகளுக்கும் எட்டிவிடவே, அந்தச் சாங்கிழடும் சுவர்கத்தின் சாவி மீது ஆசை கொண்டு மோப்பம் பிடிக்க ஆரம்பித்துவிட்டது என்று நாங்கள் அறிந்ததும், ஒரு போலிச் சிங்கம் செய்து அவர் பார்வையில் சிக்கவைத்து, அதைத் தூக்கிக்கொண்டு போய், அவர் தன் அலுவலறையில் வைத்து ஆராய்ந்து கொண்டிருக்கும்படி செய்துவிட்டோம்.

கடைசியாக, எங்கள் மக்களும் பெரியவர்களாகி இப் பிரச்சினையில் அக்கரை கொண்டு தலை யிட்டதன் பயனாய், உண்மைச் சிங்கத்தின் சிலையைக் கிழட்டுக் குலாம்காதர் கைப்பற்றிக் கொண்டு போய் அவருடைய அறையில் பரிசோதனை செய்து பார்க்கும் போது, அதற்கு இரையானார்! அதற்குள் இருந்த இவ் வெண்கலப் பேழையை எடுப்பதற்காக இம் முதலியார் தனது வலது முழங்கையை இழந்தார்!!

இப்போது, இப்பேழையைத் திறப்பதில் நான் என் உயிரையே இழக்கலாம்! எனினும், அதற்கு முன் என் வாழ்வை இழக்கச்செய்த இவ் வஞ்சகனை என் கையினால் கொலை செய்யப் போகிறேன்; என் கையில் இன்று இரத்தக்கறை படியப் போகிறது!! இதைக் காணத்தான் என் கணவராகிய உங்களை இங்கு வரவழைத்தேன்!!!" என்று கூறி முடித்தாள் அந்த அரைப்பயித்தியம்.

அவை யாவையும் பொறுமையாய்க் கேட்டுக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த பீர் முஹம்மது

இராவுத்தர், பயித்யக்காரரைப் போலாகி, சிலுவையில் மாட்டப்பட் டிருக்கும் இரமணன் மீது பாய்ந்தார். ஆனால், அக்கதாநாயன் அதற்குச் சற்றுமுன்பே இறந்து போய்விட்டான்.

அதனால், அவ் வெண்கலப் பேழையைத் திறந்து அதற்கு இரையாவதற்கு முன்பு, அப்பயித்தியக்காரிக்கு மற்றோர் ஆசை தோன்றிற்று! அதன்படியே, கதிஜா பீபீயின் கையைப் பிடித்துக் கருணாகரனிடமும், காந்தா மணியின் கையைப் பிடித்து காஜாமுஹைஹதீனிடமும் கொடுத்து, "இவ்வாறுதான் நீங்கள் திருமணம் செய்து கொண்டு இன்புற்று இருப்பது முறை" என்றாள்.

"ஏற்கனவே, சகோதரிகள் என்று தெரியாமல் செய்த காதல் லீலைகளைப் பற்றிக் கவலைப் படாதீர்கள்! 'ஆதம்' காலத்திலிருந்து, பல தலைமுறைகள் வரையில் அவ்வாறுதான் நடந்திருக்கிறது!! நம் அல்லாஹ்வினால், மக்கள் எல்லோரையும் களிமண்ணால் படைக்கமுடியாத தாலோ என்னவோ, அந்தக் காலத்தில், மகன்—மகள் சகோதரன்—சகோதரி என்ற முறையைக் கருதாது கலவி செய்து மக்கள் சமுதாயத்தை விருத்தி செய்யும் படி அல்லாஹ்வே ஆதத்தின் ஆதிகாலச் சந்ததிகளை வேண்டி இருந்திருக்கிறான் என்று நான்கு மறைகளும் நவில்கின்றன!!! எனவே நானத்தை விடுங்கள்—நடந் ததை மறங்கள்—நடக்கப் போவதை நினைந்து இன் புற்று இனிது வாழுங்கள்."

என்று கூறிவிட்டு திடீரென்று சற்று எட்டிப் போய் நின்றுகொண்டு அந்த வெண்கலப் பேழையைத் திறந்தாள். "ஐயோ! அதில் பாதிப்பங்கு எனக்கும்

உண்டே?" என்று அலறிக்கொண்டு அவள் கிட்டே ஓடினுர் முதலியார்.

அவ் வெண்கலப் பேழையிலிருந்து வெடித்த வெடி குண்டுகள் அவ்விரண்டு பேர்கள் மீதும் பாய்ந்து அவர்களை அந்த இடத்திலேயே கொன்று விட்டன! பிறகுதான் வெளியே குதித்தன, அச் சுவர்ணத்தின் சாவியும், சுவிசேஷம் போன்ற குறிப்பேடும்.

'கேவலம், ஒரு புதையலின் குறிப்பேடும், சாவியும் எத்தனை பேர்களின் ஆவியைப் போக்கிவிட்டன!' என்று எண்ணி அச் சாவியைப் பார்த்துக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தனர் எஞ்சிய ஐவரும்.

அப்போது, சமையல்காரச் சந்தானலட்சுமியோடு அங்குவந்து சேர்ந்த சி. ஐ. டி. சித்தன், உடனே சுவர்ண லோகத்தைக் காட்டும் வேதம் போன்ற அக் குறிப் பேட்டையும், அதன் சாவியையும் தேடிக் கையில் எடுத்துக் கொண்டார். அப்பால், இரண்டு போலீஸ் சேவகர்களை அங்கு வரவழைத்து, அக் குறிப்பேட்டில் கண்டுள்ள விபரப்படி, இரும்புச் சிலுவைக்கு அடியில் தோண்டித் தங்கக் கட்டிகள் நிறைந்த இரும்புப்பெட்டி யைத் தூக்கிக்கொண்டு போகும்போது, "நான் இங்கு வருவதற்குள்ளாக நரகத்தில் உள்ள நாயனின் கதை முடிந்துவிட்டது! எனவே, சுவர்க்கத்தில் உள்ள ஷைத்தானின் கதையையாவது தொடர்ந்து போய்ப் பார்க்கவேண்டும்" என்று கூறிவிட்டுப் போனுர்.

—: முற்றிற்று :—

Phone No. 55748 Tel: "PUZZLE"

லோட்டஸ்
கிராஸ்வேர்ட்ஸ்

பிரபாத் பில்டிங்ஸ்
மதருஸ் - 1

அதிருஷ்டம் மனிதனுடைய தலையெழுத்தில் இல்லை!
முயற்சித் திருவினையாக்கும் என்பது ஆன்றோர் மொழி !!

நீங்கள் வாழ்வில் ஏற்றம் காண வேண்டுமா?
இதோ! லோட்டஸ்-உங்களுக்கு உதவ காத்திருக்கிறது!
எளிய குறிப்புகள்! ஏற்ற முடிவுகள்!! எல்லாம் புதுமை!!!

மாதந்தோறும் சராசரி

ரூ. 3,00,000 க்கு மேல்

பரிசுகளை பணமாகவே பெறலாம்

இலவச போட்டிக் கூப்பன்கள் எல்லா இந்திய மொழிகளிலும், எமது அதிகாரம் பெற்ற கலெக்டர்கள், டெப்போ ஏஜெண்டுகள் ஆகியோரிடம் எல்லா ஊர்களிலும் கிடைக்கும்.

நீங்கள் பரிசு பெறவேண்டும்!
முயற்சி செய்யுங்கள் !!

விவரங்களுக்கு
மானேஜர்

லோட்டஸ் கிராஸ் வேர்ட்ஸ்

...ருஸ் - 1.

எதிர்பாருங்கள்!

நாவல் உலகிலோர் நவீனப் புரட்சி!!

ஆசிரியர் "விவேகி" எழுதும்

'சுவர்க்கத்தில்
ஷைத்தான்!'

எனும் அரிய ஆராய்ச்சிமிக்க நூல்

★

வெளியிடுவோர்:

திராவிட கலா நிலையம்

57, மு தாருனிஸா பேகம் தெரு

சென்னை - 2